www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாத இதழ்

# புதிய பூமி

පුදිය පූමි
Puthiya Poomi

சுற்று 14 டிசம்பர் 2007 பக்கம் 16 விலை 20/= சுழற்சி 109

# பழிக்குப் பழி!












வானிலிருந்து வன்னிக்கு குண்டுகள் போட ப்படுகின்றன. அப்பாவித் தமிழ்மக்கள் கொல்லப்படுகின்றனர். கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தமிழ் மக்கள் வகை தொகையின்றி கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். மாவிலாச்சியவில் விவசாயிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர், நுகேகொட கெப்பிட்டி கெல்வா பிரதேசத்தில் அப்பாவி சிங்கள மக்கள் குண்டு வெடிப்புக்களால் கொல்லப்பட்டுள்ளனர்.

இவ்வாறான நடவடிக்கைகள் பழி தீர்க்கும் வகையிலான நடவடிக்கைகள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனால் கொல்லப்பட்டவர்கள் தமிழ் சிங்கள சாதாரண மக்களேயாவார். ஆனால் கொல்லப்பட்டவர்கள் தமிழ் சிங்கள சாதாரண மக்களேயாவர்.

இவை யுத்தத்தின் நேரடி விளைவுகள். ஒன்று இன்னொன்றின் விளைவென்றால் ஒன்றைப்பற்றி கதைக்கும்போது இன்னொன்றைப் பற்றியும் கதைக்க வேண்டும்.

கடந்த இரண்டு வருடங்களாக சமாதான முயற்சிகள் மெல்ல மெல்ல முடக்கப்பட்டு 2002 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை மீறப்பட்டு சொல்லிலும் செயலிலும் மஹிந்த அரசாங்கம் உரிமைப் போராட்டத்தை பயங்கரவாத நடவடிக்கை என்று கூறி யுத்த நடவடிக்கைகளை முழுமையாக்கியுள்ளது. இதனால் த.வி.பு.இ அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உட்பட அவ்வியக்கத்தின் பல தலைவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவ்வியக்கத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியில் போடப்பட்ட வான் குண்டுகளால் சாதாரண மக்களும் பள்ளிக்கு சென்ற மாணவிகளும் கொல்லப்பட்டனர்.

அநுராதபுரம் விமானப்படை முகாம் எல்லைப்புற சிங்கள விவசாயிகள் சுடப்பட்டமை தற்கொலை குண்டு வெடிப்பு முதல் நுகேகொட குண்டு வெடிப்பு என்பன இடம் பெற்றன. அவற்றின் தொடர்ச்சியாக இம் மாதம் 5ஆம் திகதி இரவு கெப்பிட்டிகொல்லாவையில் இடம் பெற்ற பஸ் குண்டு வெடிப்பில் அதில் பிரயாணம் செய்த அப்பாவிச் சிங்கள மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த நடிக்கைகள் எந்தப் பக்கத்திலிருந்து முன்னெடுக்கப்படுகின்றன எப்படி முன்னெடுக்கப்படுகின்றன என்ற கேள்விகளுக்கு அப்பால் இனவாதிகளும் இனவாதக் கருத்துக்களால் உள்வாங்கப்பட்டவர்களும் யுத்தவெறியர்களும் கொலை வெறியர்களும் தவிர்ந்த மனித நேயமிக்க வேறு எவருமே இப் பழிக்குபழி வாங்கும் தாக்குதல்களை ஆதரிக்க மாட்டார்கள். இத்தகைய நடவடிக்கைகள் பழிக்குப் பழி என்ற கொலைத்தனங்கள் இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான வழிவகைகளுக்கு எதிரானதும் முட்டுக் கட்டையானதுமாகும்.

கிளிநொச்சியில் வான் குண்டுத் தாக்குதல்களும் கொழும்பில் தமிழர்கள் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்படுவதும் 'பயங்கரவாதத்தை' முற்றாக அழிக்குவரை நிறுத்தப்படமாட்டாது என்று அரசாங்கம் அறிவித்துவருகிறது. அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் வகைதொகையற்ற கைதுகளுக்கு எதிர்ப்புகள் அதிகரித்திருக்கின்றபோதும் கைதுகளும் தொடரும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்டவர்களில் சந்தேகநபர்களை வைத்துக்கொண்டு ஏனையவர்களை விடுதலை செய்துவிடுவோம் என்று ஜனாதிபதி அறிவித்துள்ளார். அப்படியென்றால் அடிப்படை சாட்சியங்களும், சந்தேகமும் இல்லாமலேயே தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காகவே கைது செய்யப்பட்டுள்ளனர். என்பது விளங்குகிறது.

சாதாரண சட்டத்தின் கீழ் மட்டுமன்றி அவசரகாலச் சட்டத்தின் கீழும் கூட நியாயமான சந்தேகத்தை தரக்கூடிய சாட்சியங்கள் இல்லாமலேயே தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காகவே கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது விளங்குகிறது.

சாதாரண சட்டத்தின் கீழ் மட்டுமன்றி, அவசரகாலச் சட்டத்தின் கீழும் கூட நியாயமான சந்தேகத்தை தரக்கூடிய சாட்சியங்கள் இல்லாவிட்டாலும் வெறும் கைது செய்யப்படவும் முடியாது தடுத்து வைக்கப்படவும் முடியாது. சில மாதங்களுக்கு முன்பு கொழும்பு

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# வவுனியாவில் அரசாங்க காணிகளை தமதாக்கும் கனவான்கள்

**வவுனியாவில் யுத்த** விளைவுகளால் மக்கள் பலமுனைப் பாதிப்புகளைப் பெற்று வருகின்றனர். துன்பமுறும் மக்களைப் பற்றி அக்கறைப் படவேண்டிய அரசாங்க அதிகாரிகள் அரசியல் தலைவர்கள் பிரமுகர்கள் அதனை விட்டுத் தத்தமது சுய வளர்ச்சி யில் மும்மரமாக ஈடுபட்டு வரும் செயல்கள் வேதனை தருவதாகவே இருக்கிறது. எனவே தான் கீழ் வரும் விடயங்களை புதிய பூமி மூலம் மக்களுக்கு தெரியப்படுத்தவும் அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு வரவும் இச் செய்தியை அனுப்புகிறேன். இதனைப் பிரசுரித்து பொது மக்கள் நலன் சார்ந்த விடயத்திற்கு முன்னுரிமை கொடுப்பீர்கள் என நம்புகிறேன்.


வவுனியா கச்சேரி உத்தியோகத்தர்களின் அரசாங்க விடுதிகளுக்கென ஒதுக்கப்பட்ட அரச காணிகள் 1990ம் ஆண்டுக்குப் பின்பு சில அரச உத்தியோகத்தர்களும் மற்றும் அவர்களுக்கு வேண்டிய சிலரும் தமது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி தங்களுக்குரியதாக மாற்றி எடுத்துக் கொண்ட சம்பவங்கள் பொது மக்களை ஏமாற்றிய விடயங்களாகி விட்டன.

- அரசாங்க விடுதி அமைக்கப்பட்ட காமினி மகா வித்தியாலயத்திற்கு முன்பாக உள்ள காணி கிராம சேவையாளர் ஒருவருக்குரியதாக மாற்றப்பட்டுள்ளது என்று பேசப்படுகிறது.
- பூங்கா வீதியில் வவுனியா வளாகத்திற்கு அருகில் உள்ள அரசாங்க விடுதிக் காணி காணி உத்தியோகத்தர் ஒருவரின் உடைமையாக மாற்றப்பட்டுள்ளதாம்.
- ஸ்டேசன் வீதியில் விவசாயக் கந்தோருக்குப் பக்கத்தில் உள்ள பழைய நீர்த்தாங்கி காணி ஐ.தே. கட்சி பிரமுகருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் அறிய முடிகிறது.
- சிந்தாமணிப் பிள்ளையார் கோவிலுக்கு வடக்குப் புறமாக உள்ள அரசாங்க விடுதிக் காணிகள் மாகாணக் கல்விப் பணிப்பாளரின் பெயரில் மாற்றப்பட்டுள்ளது என அறியமுடிகிறது.
- அதற்குப் பக்கத்தில் உள்ள காணி கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளதாம்.
- அதன் அயலில் உள்ள அரசாங்க விடுதிக் காணி படப்பிடிப்பாளர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- இதற்குப் பக்கத்தில் உள்ள அரச காணி கச்சேரியில் வேலை செய்யும் ஒரு பெண் எழுதுவினைஞருக்கு வழங்கப்பட்டதாம். அவர் தனது கணவரது சுக வீனம் காரணமாக அதனை விற்பதற்கு விலைபேசி வருவதாகவும் கூறப்படுகின்றது.
- முன்னாள் ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் தங்களது அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி அரச காணிகளைப் பங்கு போட்டுக் கொண்டுள்ளனர் என்றும் மக்கள் பேசிக் கொள்கின்றனர்.

அரசாங்க உத்தியோகத்தர்கள் வாடகை செலுத்திக் குடியிருக்க ஒதுக்கப்பட்ட அரச நிலங்கள் எவ்வாறு தனியாருக்கு வழங்கப்பட்டு உடைமையாக்கப்பட்டன. இது வேலியே பயிரை மேய்த்த கதையாகும். அரசியல் அல்லது உயர் அரசாங்க உத்தியோகங்கள் மக்களுக்காகவா அல்லது தனிநபர்களின் சுய ஈடேற்றத்திற்காகவா? நிலமற்ற சாதாரண மக்கள் இப்போதும் கீழ் நிலையிலேயே இருந்து வருகிறார்கள். ஆனால் மேற்கூறியோர் குறுக்கு வழிகளில் பெறுமதி மிக்க அரச நிலங்களை அரசியல் அரசாங்க செல்வாக்குடன் இலகுவாகவே தமதாக்கிக் கொள்கின்றனர்.

இது குறித்து வவுனியா அரசாங்க அதிபர் உரிய நடவடிக்கை எடுப்பாரா? **ஓய்வு பெற்ற அரசாங்க ஊழியர்**

வெ. சுப்பிரமணியம் வவுனியா



**புதிய- ஜனநாயக** கட்சியின் மிக நெருங்கிய ஆதரவாளரும் சமூக அக்கறை மிக்கவரும் மக்கள் நலன் விரும்பியுமான காசிப்பிள்ளை கதிர்காமு (கதிர்) கடந்த 06-12-2007 அன்று பிரான்சில் இயற்கை எய்தினார். அவரது மறைவு நம் அனைவருக்கும் ஆழ்ந்த துயரத்தையும் துக்கத்தையும் தந்துள்ளது. வடபுலத்து புரட்சிகர மாக்சிச லெனினிச கம்யூனிஸ்ட் கட்சி இயக்கத்துடன் 60 களின் நடுக்கூறுகளிலிருந்து மிக நெருக்கமான ஆதரவாளராக இருந்து வந்தவர் கதிர்காமு (கதிர்). அவர் நாட்டில் இருந்த வேளையிலும் புலம் பெயர்ந்து பிரான்சில் குடும்பத்துடன் வாழ்ந்து வந்த சூழலிலும் மாக்சிச லெனினிசக் கொள்கைக்கும் ஆதரவும் பல்வகைப் பங்களிப்பும் வழங்கி வந்தவர்.

அவர் இளமைக் காலம் முதல் கட்சியின் வெகுஜனப் போராட்டங்களில் பல்வேறு வகையான ஆதரவுச் செயற்பாடுகளில் பங்கு பற்றி வந்தவர். குடும்பநிலை காரணமாகப் புலம் பெயர்ந்து வாழ்ந்து வந்த சூழலிலும் கட்சியினதும் வெகுஜன அமைப்புகளினதும் செயற்பாட்டிற்கு பங்களிப்பு வழங்கி வந்தவர். எமது கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி.கா. செந்திவேலின் முழு நேரக் கட்சிப் பணி வாழ்வுக்கு அன்று முதல் இன்று வரை முழு ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் சகோதரனாகவும் கட்சி ஆதரவாளனாகவும் குடும்பநிலை நின்று இறுதி வரை வழங்கி வந்த ஒரு நண்பராவார். அவரது மறைவு நம் அனைவருக்கும் பெரும் இழப்பாகும். கதிர் அவர்களுக்கு எமது சிகப்பு அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**புதிய பூமி ஆசிரியர் குழு**

**நிறுத்து**

**1ம் பக்க தொடர்ச்சி**

விடுதிகளில் தங்கியிருந்த தமிழர்கள் திடீரென பஸ்களில் ஏற்பட்டு பலாத்காரமாக வவுனியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அதற்கு தேசியரீதியாகவும் சர்வதேசிய ரீதியாகவும் எதிர்ப்புகள் கூடியதாலும் உயர் நீதிமன்றம் விடுதியிலிருந்து தமிழர்களை வெளியேற்றியதற்கு எதிரான தற்காலிக தடையுத்தரவை வழங்கியதாலும் அந்நடவடிக்கை கைவிடப்பட்டது. ஆனால் தற்போது நடைபெறும் கைதுகள் மேற்படி நடவடிக்கையை இன்னொரு விதத்தில் நடைமுறைப்படுத்துவதாகும். முன்னைய முடிவுக்கு சவால் விடுவதாகும்.

தற்போதைய கைதுகள் பற்றி தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் எதிர்ப்புகள் வெளிவந்துள்ளன. சர்வதேச மன்னிப்புச்சபை ருநேஉழுழஇ ருனேஈ போன்ற அமைப்புகள் அவற்றின் கடுமையான எதிர்ப்பை தெரிவித்துள்ளன. இந்த எதிர்ப்புகள் தமிழ்மக்களுக்கு சார்பானதாகவும் நீதியையும் நியாயத்தையும் நிலை நாட்டுவதற்காகவும் காட்டப்பட்டவையாகக் கொள்ளப்படத் தேவை இல்லை. ஏனெனில் அவர்களின் அக்கறைகள் வேறு நோக்கம் கொண்டவை. ஆனால் அவை பேரினவாத அடக்குமுறைக்கு எதிரான மட்டுப் படுத்தப்பட்ட அழுத்தங்களை கொடுப்பதாகவே இருக்கின்றன.

இதைப் பாவித்து ஏகாதிபத்திய பூகோளமயமாதல் நிகழ்ச்சி நிரல் இலங்கையில் மேலும் நடைமுறைப்படுத்தப்படவே செய்யும். அதாவது தேசிய இனப்பிரச்சினையை பாவித்து ஐ. நா தலையீட்டை மேற்கொண்டால் (அது சுதந்திரமான ஐ. நா. அல்ல) அதனை நியாயப்படுத்தும் காரணிகள் அவர்கள் பக்கத்திற்கு வலுவாகவே இருக்கின்றன.

ஐ. நா. அல்லது வெளிநாட்டுத் தலையீடுகள் தமிழ் மக்களுக்கோ அல்லது ஏனைய இனமக்களுக்கோ நாட்டிற்கோ சாதகமான எந்தவொரு விடயத்தையும் கொண்டுவராது என்பது பட்டறிவு. இந்த ஐ.நா எதிர்ப்புகள் தமிழ் மக்களுக்கு எவ்வித நன்மையும் கொண்டு வராது. இந்தியாவில் இலங்கையின் பேரினவாதத்திற்கு எதிராக மீண்டும் காட்டப்படும் எதிர்ப்புகள் வரவேற்கக் கூடியதாயினும் அதன் அழுத்தம் வரையறுக்கப்பட்டதேயாகும்.

இந்த நிலைமையில் இருந்து மீள்வது தமிழ்மக்களுக்கு மட்டுமல்ல இலங்கையின் அனைத்து மக்களுக்கும் அவசியமாகும். ஒரு புறத்தில் அந்நிய சக்திகளைத் தலையிடுமாறு கோருவதும் மறுபுறத்தில் அந்நிய எதிர்ப்பு என வெறும் கூக்குரல் இடுவதும் ஆரோக்கியமானவை அல்ல. நமது நாட்டின் தேசிய இனப்பிரச்சினையை உரியகாலத்தில் நீதியான நியாயமான அரசியல் தீர்வுக்கு தூர நோக்குடனான இணக்கம் கண்டிருந்தால் இன்று இரத்த ஆறு ஓடவேண்டி ஏற்பட்டிருக்காது. அந்நிய சக்திகள் ஊடுருவ வழிகளும் இல்லாதிருந்திருக்கும்.

ஆனால் இன்று நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து வருகின்றன. இதனை சிங்கள, தமிழ், முஸ்லீம் மலையகத்தமிழ் மக்கள் பறங்கியர்கள், வேடர்கள் உணர்ந்து செயற்படும் சூழ்நிலை இருப்பதை மறந்தால் அனைவருக்கும் அழிவே மிஞ்சும். பழிக்குப்பழியான எல்லாத் தாக்குதல்களையும் உடன் நிறுத்தி பேச்சுவார்த்தை மூலம் தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு கண்டு அமைதியான ஐக்கிய இலங்கையே கட்டி எழுப்புவதே உரிய ஒரே வழிமுறையாகும்.

## நாலும் நடக்கும் உலகிலே

### நெல்லும் பதரும்

**கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில்** அண்மைக் காலமாக விழற் கதை பேசுவோருக்குப் பேச வாய்ப்புக்கள் அதிகமாகவே உள்ளன. கூட்டங்களிற் கருத்துரை கூற ஒதுக்கப்படுகிற இரண்டு நிமிடங்களிலேயே தனது புத்தியின் வரையறைகளைப் பகிரங்கப்படுத்திக் கொள்ளுகிற சண்முகலிங்கம் எனும் பேருக்குரியவரும் "முற்போக்குக் கலை இலக்கியப் பேரவை" எனப்படும் விஷமி அமைப்பின் பிரமுகருமான ஒருவருக்குப் பிரதம பேச்சாளராக இடங் கொடுத்தால் விடுவாரா?

வரலாற்றால் பயனில்லை என்று தனக்கு மூன்றாங்கையாகக் கிடைத்த பின் நவீனத்துவக் கருத்தை வலியுறுத்திப் பேசுவதாக நினைத்துப் பின்னர் ஏதோ வரலாற்றுத் தகவல்களை வழங்குவது போல அறிவுக்குப் பொருந்தாத முறையில் புள்ளி விவரங்களை அவிழ்த்து விட்டார். வழமையாக என்றுமே கூட்டங்களில் வாய் திறவாத ஒரு மனிதர் நம்முடைய பெரிய மனிதர் சொன்ன புள்ளி விவரங்கள் உண்மைக்குப் பொருந்தாது என்று கணக்குப் போட்டிக் காட்டினார். விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டலாமா? வரலாற்றுக்குப் புள்ளி விவரங்கள் முக்கியமானவையல்ல. அவையெல்லாம் சும்மா ஒரு வசதிக்காக சொல்லப்படுகிறவை என்று மழுப்பி நழுவினார். அவையில் இரு நதவர்களுக்கு அவரை நம்புமளவுக்கு புத்தி மட்டமல்லவே.

சரி வரலாறு பயனற்றது வரலாற்றுக்குப் புள்ளி விவரங்கள் முக்கியமற்றவை என்று ஏற்றுக் கொள்வோமே. பயனற்ற விடயங்களைப் பேசி ஒருவர் ஏன் எல்லோரது நேரத்தையும் பாழடிக்க வேண்டும்?

இவர் போல ஆட்களை நினைத்துத்தான் திருவள்ளுவர்

"பயனில் சொல் பாராட்டுவானை மகனெனல்

மக்கட் பதடி யெனல்"என்று சொல்லி வைத்திருக்க வேண்டும்.

### பெண்ணியக் கிளுகிளுப்பு?

அண்மையில் வெளிவந்த "இருக்கிறம்" என்கிற என்.ஜி.ஓ நிதியில் நடக்கிற சஞ்சிகையின் அட்டைப்படம் கொஞ்சம் பாலியல் கிளுகிளுப்பூட்டுகிற மாதிரி இருந்தது. எப்படி அதன் பெண்ணியவாதியான என்.ஜி.ஓ எசமானியம்மா ஏற்றுக் கொண்டார் என்று பத்திரிகை சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டபோது அந்த மாதிரி அட்டைப்பட ஆலோசனை தந்தவரே அவர்தான் என்று பதில் வந்ததால்.


கேட்டவருக்குக் கொஞ்சம் அதிர்ச்சி. ஆனால் என்.ஜி.ஓ பிழைப்பு என்று வந்து விட்டால் பெண்ணியம் என்ன கண்ணியம் என்ன! எல்லாமே விலைப் பொருட்கள் தான்.

### மாஓவைத் தெரியாத இடதுசாரி

ஒக்டோபர் புரட்சி பற்றிப் பேராசிரியர் சிவத்தம்பி எழுதிய கட்டுரை ஒன்று தினக்குரல் நாளேட்டில் நவம்பர் 7ம், 8ம் திகதிகளில் வெளிவந்தது. அக்கட்டுரையில் அவர் லெனினும் காந்தியுமே சென்ற நூற்றாண்டின் அதி முக்கிய அரசியல் தலைவர்கள் என்று குறிப்பிட்டுள்ளார். காந்திய அரசியல் நடை முறைச் சாத்தியமற்றது என்பதை அக் கட்டுரையில் மறைமுகமாக ஏற்றுக் கொண்டே அவரால் எப்படிக் காந்தியை லெனினுடன் வைத்துக் கருத முடிந் தது என்று விளங்கவில்லை. மாஓ சேதுங் என்ற ஒரு மனிதர் இருந்தது பற்றிக் கூடக் குறிப்பிடாமல் ஒக்டோபர் புரட்சியின் முக்கியத்துவம் பற்றி எழுத ஒரு திரிபுவாதிக்குத் தான் இயலும். சீனப்புரட்சி உலகின் 20 சதவீதத்திற்கு மேலான மக்களை விடுதலை செய்தது. அதை விட முக்கியமாக இன்று உல கில் சோஷலிசப் புரட்சித் தீ எப்படி இன்னமும் ஒளி பரப்புகின்ற தென்று கவனிக்கிற எவருக்கும் மாஓ சேதுங் சிந்தனை நினைவுக்கு வராமல் இராது.

இந்தப் பேராசிரியப் பூனைகள் சிலது கண்ணை மூடிக் கொண்டால் பூலோகம் இருண்டு போகுமா?

### தோழர்களின் விடுதலைக்கு உதவுங்கள்!



புதிய- ஜனநாயக கட்சியின் தோழர்களான வெ. மகேந்திரன், ஆர். ஜெயசீலன், எஸ். சுகேசனன், எஸ். மோகன்ராஜ், சி. கிருஷ்ணப்பிரியன் அவசரகாலச் சட்டத்தின் கீழ் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் விடுதலைக்கு மலையகத்தில் கையெழுத்து இயக்கம் நடாத்தப்பட்டு வருவதுடன் நிதி சேகரிப்பும் நடைபெற்று வருகின்றன. அத் தோழர்களின் விடுதலைக்கு சகல வழிகளிலும் செயல்படுமாறு வேண்டுகிறோம். [ஆ.குழு]

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# மலையகத் தலைமைகளின் பம்மாத்து அரசியல்!

**மலையகத் தொழிற்சங்க** அரசியல் தலைமைகளின் வரலாறு பம்மாத்து அரசியலாகவே இருந்து வந்துள்ளது. எப்பொழுதும் தோட்டத்துரைமார் நிர்வாகங்களோடு இணங்கிப் போயும் சமரசமாகப் பேசி அவ்வப்போது அற்ப சலுகைகளைத் தோட்டத் தொழிலாளர்களுக்குப் பெற்றுக் கொடுப்பதே அவர்களது தொழிற்சங்க வேலையாக இருந்து வந்துள்ளது. மலையகத்தில் வெகுஜனப் போராட்ட அடிப்படையில் தொழிலாளர்களின் தொழிற்சங்க ஆயுதமான வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்து உரிமைகளையும் சலுகைகளையும் வென்றெடுத்தவர்கள் எப்பொழுதும் இடதுசாரிகளாகவே இருந்து வந்தனர். தவிர்க்க முடியாத நிர்ப்பந்த சூழலில் மட்டுமே தொண்டமான் தலைமையிலான இ.தொ.கா. வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வந்துள்ளது. அதுவும் வாக்குரிமை அரசியலில் ஈடுபட்ட பின் அதில் ஆதிக்கம் பெற்றதும் முற்று முழுதாகவே வேலைநிறுத்தத்தை கைவிட்டு பேரம் சமரசம் அடிபணிதல் ஆளும் வர்க்க சேவகம் என்பனவற்றுள் மூழ்கிக் கொண்டனர்.

அதன் வழிவந்தவர்களான ஆறுமுகம் தொண்டமானும் பெ. சந்திரசேகரனும் வெள்வெருட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டு ஒரு சில நாட்களில் தொழிலாளர்களைக் காட்டிக் கொடுத்து ஏதாவது சிலவற்றைக் காட்டி பெரு நன்மை கிடைத்திருப்பதாகக் காட்டியும் கொள்வர். அதேவேளை யார் ஆட்சிக்கு வந்தாலும் அதில் அமைச்சர் பதவிகளும் ஏனைய உயர் வருமானப் பதவிகளும் பெற்றுக் கொள்வர். இதையே மலைய மக்களை ஏமாற்றும் பம்மாத்து அரசியல் என அழைக்க முடிகிறது.

இவ்வாறு மலையகத் தலைமைகள் பேரினவாத முதலாளித்துவ அரசாங்கம் எதுவாக இருந்தாலும் அதில் கூச்சமே வெட்கமோ இன்றி அமைச்சர் பதவிகள் பெற்றுக் கொள்வர். அதன் மூலம் தத்தமது தேவைகள் சொத்து சுகம் மற்றும் தம்மவர்களுக்கானவை யாவற்றையும் பெற்றுக் கொள்வர். அதேவேளை எங்கே கை வைத்தால் மலையக மக்களை குளிர் ச்சிப்படுத்தலாம் என்பதை நன்கு தெரிந்து கொண்டு அதற்கான அறிக் கைகள் பேச்சுக்களை அவ்வப் போது நிகழ்த்திக் கொள்வார்கள். மக்களும் வேறு வழி இன்றி நம்பிக்கொள்வார்கள்.

அண்மையில் மலையக இளைஞர் யுவதிகள் உட்பட தமிழர்கள் என்ற காரணத்தால் கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் பெருமளவில் கைது செய்யப்பட்டனர். ஆனால் விடயத்தை ஒரு பாரதூரமான மனித உரிமை மீறல் விடயமாகக் கொண்டு கடும் அழுத்தம் எதையும் அரசிற்கு மலையகத் தலைமைகள் கொடுக்கவில்லை. அவர்களது கீழ்படிவான விசுவாச நிலை நின்று ஜனாதிபதியைச் சந்தித்து மன்றாடும் வேலையைத் தான் செய்தனர். ஜனாதிபதியைக் கண்டு பேசியதையும் விடுவிக்கப்பட்ட சிலரை சந்தித்து அவர்களுடன் படம் எடுத்ததையும் முக்கியப்படுத்தினர். இதற்கு அப்பால் பிரதான பிரச்சினை யைப் பற்றி இந்தத் தலைமைகள் ஜனாதிபதியுடனோ அரசாங்கத் தலைவர்களிடமோ கடுமையாக நடந்து கொள்வதில்லை. "நக்கினார் நாவிழந்தார்" என்பது போலவே தான் இருந்து வருகிறார்கள்.

மலையக மக்களைப் பற்றியோ அன்றித் தமிழர்களைப் பற்றியோ அவர்களுக்கு அக்கறை கவலை கிடையாது. தத்தமது வர்க்க நிலை வளர்ச்சியில் தான் அக்கறையாக உள்ளனர். பிச்சைக்காசு போன்ற 30 ரூபா சம்பள உயர்வைக் காட்டி ஏமாற்றினார்கள். அதேவேளை மலையக மக்களையும் சேர்த்து தமிழர்களுக்கு எதிராக நடாத்தப்படும் அடக்கு முறைகளுக்குக் காரணமான அவசரகாலச் சட்டத்தையும் ஆதரித்து வருகிறார்கள். என்ன தான் சமாதானம் சாக்குப் போக்குக் கூறினாலும் மலையகத் தலைமைகளின் மக்கள் விரோத நிலைப்பாடு அரசின் சகல அடக்கு முறைகளுக்கும் துணையாகவே இருந்து வருகின்றன. இந் நிலையை மலையக மக்கள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். ஒரே வழி அரசியல் விழிப்புணர்ச்சிக்கு உள்ளாகுவதும் தொழிற்சங்க அரசியல் தலைமைகளின் பிற்போக்குத் தனங்களையும் சுயரூபங்களையும் கண்டு நிராகரிக்கும் பாதையில் முன்னேறுவதாகும். புரட்சிகர வெகுஜன அரசியல் போராட்டம் மட்டுமே மலையக மக்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் அரசியல் நிலைப்பாடாக இருக்க முடியும்.

**சிவராமன்**

# யுத்த வரவு செலவுத்திட்டம் புதிய- ஜனநாயகக் கட்சி கண்டனம்

**யுத்தத்தை முன்னெடுக்கவும்** வாழ்க்கைச் செலவை மேலும் அதிகரிக்கவும் மக்களைப் பட்டினி நிலைக்குள் தள்ளவுமே தற்போதைய வரவு செலவுத் திட்டம் வழிவகுத்து நிற்கின்றது. யுத்தத்தையும் உலகச் சந்தையையும் காட்டி மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளனர். பயங்கரவாத ஒழிப்பிற்கான யுத்தமே சகலவற்றையும் விட இன்று முக்கியமான விடயம் எனக் கூறி தென்னிலங்கை மக்கள் திசை திருப்பப்பட்டுள்ளதுடன் சம்பள உயர்வையோ வாழ்க்கைச் செலவின் குறைப்பையோ கோரக் கூடாது எனவும் இவ் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் கேட்கப்பட்டுள்ளனர். இதனால் ஏகப்பெரும்பான்மையான உழைக்கும் மக்கள் தமது இடுப்புப்பட்டிகளை இறுக்கியவாறு பசி பட்டினியுடன் அரை குறை வாழ்வை வாழுமாறே நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். அதேவேளை பல்தேசிய நிறுவனங்களும் பெரு மூலதனக்காரர்களும் வசதி வாய்ப்புகள் பெற்ற மேட்டுக்குடியினரும் தத்தமது நிலைகளில் பெருலாபங்கள் பெற்று வருகின்றனர். அத்துடன் ஜனாதிபதி அமைச்சர்கள் முதல் அரச நிர்வாக உயர் அதிகாரிகள் வரை அதி உச்ச சம்பளங்கள் சலுகைகள் முன்னுரிமைகளுடன் சுக போகங்களை அனுபவித்தும் வருகின்றனர். எனவே வர்க்க இனத்துவ நிலைகளில் வைத்து இவ் வரவு செலவுத்திட்டத்தை நோக்கும் போது அடுத்த ஆண்டு யுத்தத்தாலும் பொருளாதாரச் சுமைகளாலும் பயங்கர நெருக்கடிகளை அனைத்து மக்களும் அனுபவிக்கப் போகும் ஒரு அபாய ஆண்டாகவே இருக்கப் போகின்றது என்பதையே இவ்வரவு செலவுத்திட்டம் தெளிவாகக் காட்டி நிற்கிறது.

இவ்வாறு தற்போதைய வரவு செலவுத்திட்டம் பற்றி புதிய- ஜனநாயக கட்சியின் அரசியல் குழு சார்பாக அதன் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ் அறிக்கையில், பாதுகாப்புச் செலவீனத்திற்கு என 16 ஆயிரத்து 644 கோடி 70 லட்சம் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. இத் தொகை வடக்கு நோக்கிய யுத்தத்தை முன்னெடுப்பதற்குரிய பீரங்கித் தீனிக்கே செலவிடப் படவுள்ளது. இதன் மூலம் தமிழ் மக்கள் அழித்தொழிக்கப்படவுள்ள அதேவேளை தெற்கின் மக்கள் மோசமான பொருளாதார நெருக்கடிகளுக்கும் வாழ்க்கைச் செலவின் அதிகரித்த சுமைகளுக்கும் ஆளாக்கப்படுவர். அரசாங்க ஊழியர்களுக்கு அடுத்த ஆண்டில் 375 ரூபா முதல் ஆறு மாதத்திற்கும் 750 ரூபா இரண்டாவது ஆறுமாதத்திற்கும் எனக் கூறி ஒரு கண்துடைப்புச் செய்யப்பட்டுள்ளது. அதேவேளை 65 லட்சம் தனியார் துறைகளைச் சேர்ந்த ஊழியர்களுக்கு எவ்வித சம்பள உயர்வோ சலுகைகளோ இவ்வரவு செலவுத்திட்டத்தில் வழங்கப்படவில்லை. ஏற்கனவே தோட்டத் தொழிலாளர்களுக்கு கூட்டு ஒப்பந்தம் மூலம் கிடைக்கச் செய்த 30 ரூபா சம்பள உயர்வு அவர்களது வாழ்க்கைச் செலவிற்கு எவ்வகையிலும் ஈடுசெய்யப்போதுமானதல்ல. அவ்வாறே ஓய்வூதியம் பெறும் பல லட்சம் பேர் தமது ஓய்வூதியத்தைக் கொண்டு வாழ்க்கை நடாத்த முடியாது அவதிப்படுவதையே காணமுடிகிறது. வரவு செலவுத்திட்ட உரையின் போது ஜனாதிபதி உள்ளூர் மூல வளங்கள் பற்றியும் உள்ளூர் உற்பத்திகளைப் பெருக்குவது பற்றியும் அலங்காரமாக எடுத்துக் கூறியுள்ளார். ஆனால் விவசாயிகளும் சிறு கைத்தொழில் துறையினரும் ஏற்கனவே தாராளமயம் தனியார்மய ஊடுருவல்களால் யாவற்றையும் இழந்து வெறுவிலிகளாக இருக்கிறார்கள் என்ற உண்மை மறைக்கப்பட்டுள்ளது.


ஆதலால் இவ் வரவுசெலவுத் திட்டம் முழுமையான மக்கள் விரோத அம்சங்களையே உள்ளடக்கி நிற்கின்றது என்பதே யதார்த்தமாக உள்ளது.

# யுத்த- தாராளமயப் பொருளதாரத்தின் கீழ் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள்

| பொருட்கள் | 2004ல் (ரூபா) | 2007ல் (ரூபா) |
|---|---|---|
| பெற்றோல் | 51. 00 | 117. 00 |
| டீசல் | 32. 00 | 75. 00 |
| ம.எண்ணெய் | 25. 00 | 68. 00 |
| எரிவாயு | 550. 00 | 1085. 00 |
| சம்பா அரிசி | 38. 00 | 58. 00 |
| குத்துப்பச்சை | 34. 00 | 45. 00 |
| பால் மா | 110. 00 | 295. 00 |
| கோ. மா | 22. 00 | 65. 00 |
| பாண் | 12. 00 | 35. 00 |
| பருப்பு | 60. 00 | 105. 00 |
| சீனி | 35. 00 | 64. 00 |
| சி. வெங்காயம் | 40. 00 | 150. 00 |
| பெ. வெங்காயம் | 30. 00 | 75. 00 |
| செ. மிளகாய் | 120. 00 | 185. 00 |
| உ. கிழங்கு | 34. 00 | 80. 00 |
| முட்டை | 4. 00 | 8. 00 |
| கறட் | 34. 00 | 76. 00 |
| போஞ்சி | 36. 00 | 80. 00 |

மேற்கூறப்பட்டுள்ள அத்தியாவசியப் பொருட்களின் மேற்படி விலைகள் கொழும்பிலிருந்து தூரப்பிரதேசங்களில் மேலும் சில ரூபாய்கள் கூடுதலாகவே விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். வடபுலத்தில் இவற்றின் விலைகள் மேலும் பல மடங்காக உள்ளன.

# பொதுவுடைமைப் போராளி தோழர் பரமுவின் மறைவுக்கு அஞ்சலி



**வடபுலத்து கரவெட்டி** கன்பொல்லைக் கிராமத்தின் பொதுவுடைமைப் போராளியும் புதிய- ஜனநாயகக் கட்சியின் உறுப்பினரும் மக்களின் அன்பும் மதிப்பும் பெற்றவருமான தோழர் வெள்ளையன் பரமு கடந்த 31-10-2007 அன்று தனது 59வது வயதில் இயற்கை எய்தினார். அவரது மறைவு எமது கட்சிக்கும் கன்பொல்லை மக்களுக்கும் பெரும் இழப்பும் துயரமுமாகும்.

"எங்கு அடக்குமுறை உண்டோ அங்கு போராட்டம் இருக்கும். எங்கு போராட்டம் இருக்கிறதோ அங்கு தியாகங்கள் இருக்கவே செய்யும். ஆனால் அநாவசியமான தியாகங்களைத் தவிர்க்க வேண்டும்." தோழர் மாஓ சேதுங்கின் மேற் குறித்த அனுபவ மொழிக்கிணங்க வடபுலத்தில் போராட்டக் களம் கண்ட கிராமங்களில் ஒன்று கரவெட்டி மேற்கு கன்பொல்லைக் கிராமமாகும். சாதிய தீண்டாமைக்கு எதிரான போராட்டப் பாரம்பரியத்தில் நிலைத்து வந்த அக்கிராமம் 1966 ஒக்ரோபர் 21 எழுச்சியைத் தொடர்ந்து வெகுஜனப் புரட்சிகரப் போராட்ட உச்சததைத் தொட்டு நின்றது. அக்கால கட்டத்தில் கரவெட்டி கிழக்கு வளர்மதிக்கிராமமும், கரவெட்டிக் கன்பொல்லைக் கிராமமும் போராட்டத்தின் முன்னணியில் நின்று சாதி ஒடுக்குமுறையாளர்களுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கின.

அப்போராட்ட சூழலை புரட்சிகர மாக்சிச லெனினிசக் கம்யூனிஸ்ட் கட்சி தலைமை தாங்கி வெகுஜனப் போராட்டப் புயலாக முன்னெடுத்தது. அவ்வேளை கன்பொல்லையில் இளம் கம்யூனிஸ்டுக்கள் கட்சியில் இணைந்து முன் நிலைப் போராளிகளாகினர். அவர்களில் ஒருவராக இருந்து இறுதிவரை புதிய- ஜனநாயகக் கட்சியோடும் மக்களோடும் நின்று செயலாற்றியவர் மறைந்த தோழர் வெள்ளையன் பரமு ஆவார். தான் வரித்துக் கொண்ட பொதுவுடைமைக் கொள்கையையும் கட்சி உறுப்பினர் நிலைப்பாட்டையும் தோழர் பரமு ஒரு போதும் விட்டுக்கொடுத்தது கிடையாது. பல்வேறு நெருக்கடிகள் சவால்கள் மத்தியிலும் கட்சி உணர்வையும் மக்கள் பணியையும் முன்னெடுத்த தோழராவார். அவரது வாழ்வும் பணியும் புதிய தலைமுறையினருக்குச் சிறந்த முன்னுதாரணமா கும். கட்சியின் மத்தியிலும் மக்களிடையேயும் தோழர் பரமுவின் நினைவுகள் என்றும் நிலைத்து நிற்கும்.

தோழர் பரமு நல்லதோழராக மக்கள் சேவையாளானக நல்ல குடும்பத்தலைவனாக வாழ்ந்து வந்தவர். தனது அன்பு மனைவியையும் எட்டுப் பிள்ளைகளையும் கொண்ட குடும்பத்தில் இருந்து நிரந்தரமாகப் பிரிந்து கொண்டமை அவர்களுக்குப் பெரும் துயரமாகும். அதேவேளை எமது கட்சிக்கு ஒரு இழப்புமாகும். தோழர் பரமுவின் மறைவுக்கு எமது கட்சியின் சிகப்பு புரட்சிகர அஞ்சலியையும் குடும்பத்தினருக்கு ஆறுதலையும் மக்களுக்கு அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆசிரியர் குழு**

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# மலையக கல்வியில் அரசியல் தலையீடு

**அரசியல் தலையீடு** இல்லாத அரச துறையைக் காண்பது குதிரையின் கொம்பைப் போன்றது. அந்த வகையில் நம் நாட்டின் கல்வித்துறையில் அரசியல் தலையீடு கட்சி வேறுபாடின்றி அனைத்து ஆட்சிக் காலத்திலும் நீடிக்கிறது. இதில் மலையகத் தமிழர்களின் கல்வி நிலை இன்னும் பரிதாபத்திற்குரியது.

அந்த வகையில் இரத்தினபுரி மாவட்டத்தின் பிரபல பாடசாலையான இ/காவத்தை நவோதயா தமிழ் மகா வித்தியாலயத்தில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் தலையீட்டிலான அதிபர் இடமாற்றங்களையும் நியமனங்களையும் குறிப்பிடலாம். அபிவிருத்தி நோக்கி வீறு நடை போட்ட இப்பாடசாலையின் கல்வி நிலையை வீழ்த்துவதில் இங்குள்ள அரசியல் வாதிகள் வெற்றி கண்டுள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் இ/கா.ந.த.ம வித்தியாலயத்தில் கடமையாற்றிய அதிபர் திரு கேசவன் அவர்கள் இறக்குவானை பரியோவான் தமிழ் மகா வித்தியாலயத்திற்கு மாற்றமடைந்து சென்றார். அந்நேரத்தில் இப்பாடசாலையில் பிரதி அதிபராக கடமையாற்றி இறக்குவான பரியோவான் தமிழ் மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்று சென்றிருந்த திரு இராதாகிருஸ்ணன் காவத்தை ந.த.ம வித்தியாலயத்தை பொறுப்பேற்கும்படி சப்ரக முவ மாகாண முதலமைச்சர் திரு மஹிபாலஹேரத் மற்றும் மாகாண காணி விவசாய அமைச்சர் திரு ரஞ்சித் த சொய்சா ஆகியோரின் தலையீட்டில் நியமிக்கப்பட்டார். இதன் பின் இப்பாடசாலை இரண்டு மாத காலமாக எவ்வித குழப்புமின்றி அபிவிருத்தி நோக்கி அதிபர் திரு இராதாகிருஷ்ணன் நடத்திச் சென்றார். இக்காலகட் டத்தில் எட்டு வருட காலமாக நடை பெறாதிருந்த க.பொ.த (உ/த) வணிகப் பிரிவும் ஆரம்பிக்கப் பட்டு ஆசிரியர்களும் மாணவர்க ளும் பெற்றோர் பழைய மாணவர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மற்றும் விஞ்ஞான துறையை ஆரம்பிப்பதற்கான ஏற் பாடுகளும் இடம் பெற்றமை குறிப்பி டத்தக்கது.

சப்பிரகமுவ மாகாண சபையின் ஒரே தமிழ் உறுப்பினரான இலங்கை தொழிலாளர் காங்கிரசைச் சார்ந்த திரு ராஜன் அவர்களின் அரசியல் செல்வாக்குப் பெற்ற நீலகாமம் இல:01 பாடசாலையின் அதிபரான திரு ஜேக்குமார் அவர்கள் இப்பாடசாலைக்கு அதிபராக நியமிக்கப்பட்டார். இந்நியமனத்தை பெற்றோர். பழையமாணவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள். நிராகரித்த

## காவத்தை த. ம. வி என்ன நடந்தது?

னர். கல்வித் தகைமையுள்ள திறமையான நிர்வாகத் திறன் கொண்ட கற்பித்தலில் தனது திறமையையும் ஆசிரியர்கள் மாணவர்களினது நன்மதிப்பையும் பெற்ற திரு ராதா கிருஷ்ணன் அவர்களே தங்களுக்கு அதிபராக வேண்டுமென வேண்டினர். இப்பிரச்சினையை ஆரம்பித்துவைத்த திரு சொய்சா (மாகாண காணி விவசாய அமைச்சர்) திரு அத்துல குமார ராவுபத்த (மாகாணசபைத் தலைவர்) மற்றும் திரு மஹிபால ஹேரத் (முதலமைச் சர்) ஆகியோரிடம் தங்கள் கோரிக் கைகளை சுமார் 3000ற்கும் மேல் கை யொப்பமிடப்பட்ட மகஜராக கையளித்தனர். இதன் போது இப்பிரச்சினையை சுமூகமாகத் தீர்த்து வைப்பதாகவும் வேறு அதிபரை நியமிப்பதில்லை என்றும் வாக்கு றுதி அளிக்கப்பட்டது.

எனினும் சப்ரகமுவ மாகாண சபையில் J.V.P உறுப்பினர்கள் எதிர் கட்சியில் அமர்ந்ததன் விளைவாக ஆளுங்கட்சியின் அரசியல் நிலைப்பாடு ஆட்டங் கண்டது. இச்சந்தர்ப்பத்தை தனக்கு சாததமாக பயன்படுத்திக் கொண்ட திரு ராஜன் அவர்கள் (இ.தொ.கா) தான் ஆளுங் கட்சிக்கு ஆதரிக்க வேண்டுமாயின் சில கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என முன்வைத்தார். இதில் திரு ஜேக்குமாரை காவத்தை நவோதயா தமிழ் மகா வித்தியாலயத்திற்கு நியமிக்க வேண்டும் என்பதும் ஒரு கோரிக்கையாகும். தன் ஆட்சியின் முதலமைச்சு ஆச னத்தைக் காப்பாற்றிக் கொள்ள தேவைப்பட்ட முதலமைச்சர் திரு இராஜன் அவர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டார். முதலமைச்சர் பெற்றோர், பழைய மாணவர்கள் ஆசிரியர் மாணவர்களுக்கு தான் வழங்கிய வாக்குறுதி பாடசாலை அபிவிருத்தி மாணவர்களின் கல்வி என எதையுமே சிந்திக்காது திரு ஜேக்குமார் அவர்களை கா.த.ம. வித்தியாலயத்தி ற்கு அதிபராக்குவதற்கு அனுமதி அளி க்கப்பட்டது. திரு ஜேக்குமார் அவர் கள் பாடசாலையின் கடமைகளை பொறுப்பேற்க

**காவத்தை இந்திரன்**

இரு முறை சென்ற போதும் மாணவர்கள் அவரை கடமை ஏற்க அலுவலகத்திற்குள் செல்ல விடவில்லை. இதன் பின் கடந்த ஒக்டோபர் 19ம் திகதி அன்று திரு ராதாகிருஷ்ணன் அவர்கள் மேலதிகாரியின் கட்டளைக்கு கீழ்ப்படியவில்லை என்றும் மற்றும் பல பொய்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வேறு ஒரு சிறிய பாட சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட் டார் இதனை எதிர்த்து ஒக்டோபர் மாதம் 22ம் திகதி பெற்றோர், மாணவர்கள் திரு ராதாகிருஷ்ணன் அவர்களை இதே பாடசாலையில் வைத்துக் கொள்ளும் நோக்குடன் ஒரு நிர்வாக முடக்கல் போராட்டத்தை மேற்கொண்டனர். அவர்களின் பிரதான கோரிக்கையாக சிறப்பாக கற்பிப்பதோடு சிறந்த நிர்வாகத் திறனையும் கொண்ட இராதாகிருஷ்ணனை அதிபராக்குவதாகும். இதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கும் மாணவர்களின் பெற்றோர்களின் கோரிக்கைகளை அறிந்து கொள்வதற்கும் அதிகாரிகளை நேரடியாக வருவிப்பதே அவர்களது நோக்கமாக இருந்தது. இந்நிலையில் இப்பிரச்சினையை கேள்விப்பட்ட பழைய மாணவர்கள் நிலைமை எல்லைமீறி செல்லாமலும் சமூகமாகத் தீர்க்கும் நோக்குடனும் பாடசாலைக்குச் சென்றனர். இதன் போது நயவஞ்சகமாக செயற்பட்ட அதிகாரிகள் பழையமாணவர்கள் சிலரையும், பெற்றோர்கள் சிலரையும் தங்களது கோரிக்கைகளை எழுதும்படி ஒரு வகுப்பறைக்கு அழைத்துச் சென்று தங்களது உயர் அதிகாரி தற்போது வருவார் என்றும் அவருக்கு கையளிப்பதற்காகவே இம் மகஜர் என்றும் அதை எழுதுவதற்காக தாமே ஆலோசனை வழங்குவதாகவும் கூறினார். சிறிது நேரத்தில் அங்கே வருகை தந்த மாவட்ட உயர் பொலிஸ் அதிகாரியும் பொலிசாரும் அந்த வகுப்பறையில் இருந்த 19 பேரை கைது செய்து கொண்டு வெளியில் நின்ற சுமார் 500 பெற்றோரையும் சில மாணவர்களையும் அடித்து துரத்தினர். கைது செய்யப்பட்ட 19 பேரில் 5 பேர் வேறு பாடசாலை ஆசிரியர்கள் ஆவர். இதில் 3 பேர் அப்பாடசாலை பழைய மாணவர்கள் 2 பேர் இப்பிரச்சினையை பார்வையிட வந்த இப்பாடசாலைக்கு தொடர்பே இல்லாத வேறு பாடசாலை ஆசிரியர்கள் ஆவர். கைது செய்யப்பட்ட 19 பேரும் 23ம் திகதி அதிகாலை 3 மணியளவில் வீட்டிற்கு அனுப்பப்பட்ட அவர்கள் அன்று பெல்மடுல்லை நீதவான் நீதிமன்றத்தில் தலா 20, 000/= சரீர பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். இதன் பின் அன்றைய தினமே பி. பகல் 3 மணியளவில் வருகைதந்த பிரதிக் கல்வி அமைச்சர் திரு சச்சாதனந்தன் அவர்கள் பெற்றேரை சந்தித்து கூட்டம் நடத்தி பிடிபட்ட 19 பேரையும் தான் தலையிட்டே விடுதலை செய்ததாகவும் இப்பிரச்சினைக்கு இரண்டு வாரத்தில் தாமே தீர்த்து வைப்பதாகவும் கூறி இப்பிரதேசத்தில் தமக்கான ஆதரவு இல்லாதிருந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அரசியல் பேசிச் சென்றார்.

இதன்பின் நவம்பர் 5ம் திகதியில் இருந்து சம்பவத்துடன் தொடர்புபட்ட 5 ஆசிரியர்களில் நால்வரின் வேலை இடைநிறுத்தப்பட்டுள்ளது. இவ்வேலை இடை நிறுத்தமானது இலங்கை அரச தாபனக் கோவையின் சட்டதிட்டங்களுக்கு முரனானது என்றும் சட்ட வல்லுனர்கள் தெரிவிக்கின்றனர். இவ்வேலை இடைநிறுத்தத்தை நிராகரித்து அவ்வாசிரியர்கள் 12ம் திகதியன்று மேன்முறையீடு கொடுத்துள்ளதாக தெரியவருகிறது.

நிலைமை இவ்வாறிருக்க புதிதாக நியமனம் பெற்றுவந்த மாகாணச் செயலாளார் திரு கொடிதுவக்கு தன்னை சுற்றி இருக்கும் அரசியல் ஆதரவு சக்திகளின் துண்டுதலால் தானே இப்பிரச்சினையை தீர்த்துவைப்பதாக கூறிக் கொண்டு திரு ராதாகிருஷ்ணன் அவர்களை இறக்குவானை பரியோவான் தமிழ் மகாவித்தியாலத்திற்கு இடமாற்றம் செய்து அவரின் இடத்திற்கு இ/பாரதி தமிழ் வித்தியாலய அதிபர் ரவியை இ/ காவத்தை நவோதயா தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபராக நியமித்துள்ளார்.

இந்நிலையில் பாடசாலையின் எதிர் காலம் மாணவர்களின் கல்வி அபிவிருத்தி என்பன பாதுகாக்கப்பட வேண்டும் அதேபோன்று சாதி, வர்க்க, மத அடிப்படையிலான ஒடுக்குமுறைக்கு தொடர்ந்து உட்படுத்தப்பட்ட திரு ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும். மற்றும் வேலை நிறுத்தப்பட்ட ஆசிரியர்கள் நான்கு பேருக்கு மறுபடியும் வேலை வழங்கப்பட வேண்டும் என்பது இப்பிரதேச பெற்றோர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் பழை யமாணவர்கள் சமூக ஆர்வலர்களின் வேண்டுகோளாகும்.

மேலும் பொது மக்களின் வரியைக் கொண்டு அவர்களின் பிள்ளைகளுக்காக நடத்தப்படும் அரச பாடசாலைகளில் ஊழல் அரசியல் வாதிகள் தங்கள் அரசியற் கூடங்களாக்குவதையும் அதிகாரத்தில் உள்ள அதிகாரிகள் தங்கள் அதிகாரத்தை தனிப்பட்ட கோபங்களுக்காகவும் உணர்வு வக்கிரங்களுக்காகவும் பயன்படுத்துவது இத்துடனாவது நிறுத்திக் கொள்வார் களா?

# பலவீனமான ஒரு சிங்கள நாவல்

**உழைப்பால் உயர்ந்தவர்கள் பந்துபால குருகே (தமிழில் இரா. சடகோபன்) வெளியிட்டோர். இரா. சடகோபன் 173 றிச்சட்சொய்சா வீடமைப்புத் திட்டம் பத்தரமுல்ல 2007, ப. 252, ரூ. 250. 00** இந்த நூல் பெருந்தோட்ட மக்கள் வாழ்வின் யதார்த்தங்களைத் தோலுரித்துக் காட்டுவதான நாவல் என்றும் சிங்கள நாவலாசிரியர் ஒருவரது பார்வையில் பெருந்தோட்ட வாழ்க்கை முறை எப்படியிருக்கும் என்று தமிழ் வாசகர்கட்கு இத் தமிழாக்கம் எடுத்துக் காட்டும் என்றும் பேராசிரியர் சந்திரசேகரன் தனது அணிந்துரையில் எழுதியிருக்கிறார்.

என்றாலும் இந்த நூல் உண்மையிற் தொட்டுக்காட்டுவது கிராமத்தில் வாழ இயலாமல் தோட்டத்துக்கு வந்து அந்தச் சமூகத்துடன் ஓடும் புளியம் பழமும் போல ஒரு உறவுடன் வாழ்ந்து மீண்டும் கிராமத்தில் வசதியுடன் வாழக் கனவு காணுகிற ஒரு சிங்களக் குடும்பத்தின் கதை தான். அக் குடும்பத்துடன் தொடர்புடைய மலையகத் தமிழர் சராசரித் தொழிலாளரை விட உயர் நிலைக்கு வந்தவர்களும் தோட்ட நிறுவனத்துடன் தொடர்புடையவர்களுமான இரண்டு குடும்பத்தினர் மட்டுமே.

நூலாசிரியருக்கும் மொழிபெயர்ப்பாளருக்கும் பொதுவாக உள்ள ஒரு விடயம் தோட்டத்திலிருந்து வெளியேறினால் தான் தோட்டத் தொழிலாளர் உய்யலாம் என்பது முன்னவர் மீண்டும் கிராமத்தில் காணியுள்ள ஒரு நடுத்தர விவசாயியாவதை விடுதலைக்கான பாதையாகக் காணுகிறார். பின்னவருக்குத் தோட்டத்துக்கு வெளியே வந்தால் அது போதுமானது. இது யாருக்கு எப்படி இயலும் எத்தனை பேருக்கு இயலும் என்பது பற்றிய தெளிவு இருவருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை. இவர்களது இந்த வாதம் உலர்வலய விவசாயிகட்கும் பொருந்தாதா, அப்படியானால் எல்லாரும் பட்டணத்துக்கு வந்தால் எல்லாம் சரியாகி விடுமா?

மலையக மக்களும் சகல தோட்டத் தொழிலாளரும் தமது அடிப்படை உரிமைகட்காகக் குறிப்பாகக் கல்வி, வதிவிடம் நியாயமான ஊதியம், முறையான சுகாதார சேவை, மருத்துவம் போக்குவரத்து வசதிகட்காகப் போராட வேண்டியுள்ளது. இது உடனடியான தேவை. இதிலிருந்து தப்பி ஓடுவது சிலருக்கு இயலும். ஆனால் எல்லாருக்கும் இயலுமா? இப்படித் தனிப்பட்ட முறையில் உயர்வு கண்டவர்கள் மற்றவர்களைப் பார்த்து என்னால் முடியும் உனக்கு ஏன் முடியாது என்று கேட்பது பில் கேட்ஸ் மாதிரி ஒரு கோடீஸ்வரர் நினைத்தால் எல்லாருமே தன் போல் பணக்காரராகலாம் என்று சொல்வது போலத் தான். இது முட்டாள்தனமான வாதம்.




நூலின் வருகிற சிங்கள விவசாயி தோட்டத்திற் குடியேறிய பிறகு குடும்பத்தைக் கைவிட்டு விட்டு வெளியேறுகிறார். பிள்ளைகள் ஒவ்வொரு திசையாகப் போகிறார்கள். மூத்த மகன் ஒரு சிங்களப் 'பெருமகனார்' தயவில் காணியுடைமைக் காரணாகிறான். மகள் தோட்ட அதிகாரியை மணந்து சமூக உயர்வு காணுகிறாள். இன்னொரு மகன் தோட்டத்து 'கண்டாத்தர்' ஐயா வீட்டில் வேலையாளாகிறாள். மற்றொருவன் யாழ்ப்பாணத்துக்கு வீட்டு வேலைக்காரனாகப் போகிறான். கடைசியில் உழைப்பாலன்றி மேட்டுக்குடிகளின் தயவில் எல்லாரும் உயர்கிறார்கள்.

கதையில் மலையக மக்கள் பற்றி வெளிப்படுகிற கருத்துக்கள் அவர்களை மிக இழிவாகக் கொள்கிறது. கதை மாந்தராக வரும் யாழ்ப்பாணத் தமிழர் பற்றியும் துவேஷமான எண்ணங்களே எழுப்பப்படுகின்றன. நூலாசிரியர் தமிழ்த் தோட்டத் தொழிலாளருக்கு எதிரான பேரினவாத ஒடுக்குமுறை பற்றிக் கண்டு கொண்டதாகவே தெரியவில்லை. அவர் தன்னை ஒரு சோஷலிஸவாதி என்று சொல்லிக் கொள்ளத் தனது கருத்துரையில் கடுமையாக முயன்றுள்ளார். ஆனால் அவரது எழுத்தில் மனித சமத்துவம் பற்றிய உணர்வு பலவீனமாகவே உள்ளது.

மொழி பெயர்வும் பல இடங்களில் பலவீனமாக உள்ளது. சிங்களச் சொற்கட்குப் சொற்றொடர்கட்கும் உரிய தமிழ்ச் சொற்களும் சொற்றொடர்களும் குறிப்படத்தக்களவிற் தவறவிடப்பட்டுள்ளதாகவே தோன்றுகிறது. உரையாடல்களில் 'எழுத்துத் தமிழும்' ஆசிரியர் கூற்றில் 'பேச்சுத் தமிழும்' கவனயீனமாகவே வந்து போகின்றன. இதுவும் தமிழாக்கத்தின் பெரிய பலவீனம்.

நூலில் இருவகையான ஓவியங்கள். அத்தியாயத் தொடக்கத்தில் சிறியதாக உள்ள கோட்டுப் படங்கள் மிக நேர்த்தியானவை. அட்டைப்படமும் முழுப்பக்கப் படங்களும் நன்றாகவே இல்லை. நூலின் மூலத்தலைப்பை மொழிபெயர்ப்பில் உழைப்பால் உயர்ந்தவர்கள் என்று மாற்றியிருப்பதும் பொருத்தமற்றது. ஏனெனில் உண்மையில் கதை மாந்தர் எவருமே உழைப்பால் உயரவில்லை. ஒரு நாவல் என்ற வகையில் இது வெகு சராசரியான படைப்பு முதல் இரண்டு அத்தியாயங்களை விட்டால் ஒரு கதையை நகர்த்திச் செல்லுகிற ஆற்றல் நூலாசிரியருக்கு இல்லை என்றே சொல்ல வேண்டும். என்னால் இந்த நாவலைச் சமூகப்பயனுள்ள படைப்பாகக் கருத இயலவில்லை.

**சிவா**

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி
சுற்று 14 டிசம்பர் 2007 பக்கம் 16 விலை 20/- சுழற்சி 110
இல. 47, 3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 060 2136530, தொலை நகல்:011-2473757
E- mail : puthiyapoomi@hotmail.com, web : www.ndpsl.org.

# தேசிய அரசாங்க ஆலோசனை இராணுவ ஆதிக்கச் சிந்தனையாகும்.

**வரவு செலவுத்திட்டம்** தோற்கடிக்கப்பட்டால் தேர்தல் நடைபெறலாம் என்ற எதிர்பார்ப்புடன் சில அரசியல் வாதி கள் இருக்கின்றனர். அதேவேளை நாட்டின் யுத்த நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது. இந்நிலைமையில் அரசாங்கம் ஏனைய கட்சிகளுடன் இணைந்து தேசிய அரசாங்கமொன்றை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுத்துவருகிறது. இக்கோரிக்கையை பௌத்த பீட மகா நாயக்க தேரர்கள் அடிக்கடி ஒப்புவித்து வந்த போதும் இம் முறை இந்த கோரிக்கை எங்கிருந்து வந்துள்ளது என்பதை கவனத்துடன் அனுகவேண்டி இருக்கிறது.

அண்மையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை சந்தித்த முன்னாள் படைவீரர்களின் சங்கப் பிரதிநிதிகள் தேசிய அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளனர். பொதுவாக சிவில் விடயங்கள் பற்றி படையினர் கோரிக்கைகள் எதனையும் முன்வைப்பது இதுவரை சம்பிரதாயமாக இருக்கவில்லை. இலங்கையின் அரசபடைகள் "பயங்கரவாதத்தினை" வெற்றிகொண்டு வருகின்ற வேளையில் அரசியல் தலைமைத்துவங்களிடையே வேறுபாடுகள் இருப்பது பயங்கரவாதத்தை வெற்றிகொள்ளும் படையினரின் இறுதி இலக்கை அடைய முடியாது தடுக்கும் என்பதால் அரசியல் தலைமைத்துவங்களி டையே ஒருமைப்பாட்டை ஏற்படுத்தும் வகையில் தேசிய அரசாங் க ம் அமைக்கப்பட வேண்டும் என்று முன்னாள் படை வீரர்களின் சங்கத்தினர் கோரியுள்ளனர்.

நாட்டின் சகல விடயங்களிலும் இராணுவ முனைப்பு மேலோங்கி இருக்கின்ற இன்றைய சூழ்நிலையில் இவ்வாறான கோரிக்கை யுத்த அல்லது இராணுவ நிகழ்ச்சி நிரலின் நீட்சியாக இருக்குமா என்று எண்ணுவதற்கு போதுமான காரணிகள் இருக்கின்றன.

அரசாங்கத்தின் செயற்திட்டங்களை பற்றி முடிவெடுப்பதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் வேறுபாடுகளை வைத்திருக் காமல் அனைத்து அரசியல் கட்சிகளும் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கும் ஒரே நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பே தேசிய அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையாக இருந்து வருகிறது.

1948 ஆம் ஆண்டு முதல் பல முறை தேசிய அரசாங்கங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுக்கப்பட்ட போது அப்படியொரு தேசிய அரசாங்கம் அமையவில்லை. 1971 ஆண்டு ஏப்பரல் கிளர்ச்சியை (ஜே.வி.பி) அடக்குவத ற்கு தேசிய அரசாங்கம் அமைக்கப்பட வேண்டிய அளவிற்கு அன்றைய ஐக்கிய முன்னணி அரசாங்கம் பாராளுமன்றத்தில் பலவீனமாக இருக்கவில்லையாயினும் ஜே. ஆர் ஜயவர்த்தன தலைமையின் கீழ் எதிர்கட்சியான ஐ.தே. கட்சி ஐக்கிய முன் னணி அரசாங்கத்தின் ஒரு அங்கம் போன்று (1971 கிளர்ச்சியை அடக்குவதில் மட்டும்) ஒத்துழைப்பு வழங்கியது. மீண்டும் 1988 இல் நடைபெற்ற ஜே.வி.பியின் கிளர்ச்சியை அடக்க பாராளுமன்றத் தில் ஐ.தே. கட்சிக்கு ஆறில் ஐந்து பெரும்பான்மை இருந்ததால் தேசிய அரசாங்கம் அமைக்க வேண்டிய தேவை அன்று இருக்கவில்லை.

2004 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தின் ஆதிக்கம் ஐ.தே. கட்சியிடம் இருந்ததுடன் அவ்வேளை சந்திரிகா குமாரணதுங்க ஜனாதிபதியாக இருந்தார். அப்போது சமாதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதால் தேசிய அரசாங்கம் அமைக்கப்படுவது அவசியம் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டது. த.வி.பு. இயக்கத்துடன் வடக்கு கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை அமைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்த போது பாராளுமன்றத்தை ஜனாதிபதி சந்திரிகா கலைத்தார்.

2004 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தின் பின்னர் பாதிப்புகளிலிருந்து மீள்வதற்கு தேசிய அரசாங்கம் அமைக்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால் விடுத லைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சுனாமி மீளமைப்பு வேலைகளை முன்னெடுக்க த.வி.பு இயக்கத்தை இணைத்துக் கொண்டு செயற்படவென ஜனாதிபதி சந்திரிகா இணக்கம் தெரிவித்திருந்த சுனாமிக் கட்டமைப்பை உயர்நீதிம ன்றம் செல்லுபடியற்றதெனத் தீர்ப்பளித்தது.

மேற்படி இரண்டு (2002, 2004) நிகழ்வுகளின் பின்னர் இலங்கையின் அரசியல் தலைமைகள் ஒருமைப்பாட்டுடன் செய ற்பட முடியாதென்பதை வெளிப்படுத்தியது. அதனால் நாட்டின் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு தேசிய ஒருமைப்பாட்டுடன் எவ்வித பரிபாலனமும் இடம் பெற முடியாதென எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு மஹிந்த அரசாங்கத்துடன் ஒத்துழைப்புடன் செயற்படுவதென ஐ.தே. கட்சி புரிந்துணர்வு ஒப்பந்த மொன்றை கையெழுத்திட்டது. அதன் பின்னர். ஐ.தே. கட்சியை சேர் ந்த 17 பாராளுமன்ற உறுப்பினர் களை அரசாங்கத்துடன் சேர்த்துக் கொண்டதை அடுத்து அந்த ஒப்பந்தம் செயலி ழந்தது.

தற்போது அரசாங்கம் தனியே பெரும்பான்மை இல்லாது பல கட்சிகளின் கூட்டாகவே இருக்கிறது. எதிர்கட்சியும் மிகவும் பலவீனமாக இருக்கிறது. இந்நிலையில் யுத்தத்தை சிறப்பாக கொண்டு நடத்துவதற்காகப் பாராளுமன்றத்தில் இருக்கும் எல்லா கட்சிகளையும் இணைத்துக்கொண்டு தேசிய அரசாங்கத்தை அமைக்க வேண்டுமென்ற கோரிக் கையை முன்னாள் படை வீரர்களின் சங்கத்தினர் முன்வைத்து ள்ளார். அக்கோரிக்கைக்கு பதிலளித்த ஜனாதிபதி மஹிந்த் தான் தேசிய அரசாங்கத்தை அமைக்க தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளார். ஐ.தே. கட்சி அக்கோரிக்கையை நிராகரி த்துள்ளது. ஏனெனில் ஐ.தே. கட்சி ஏற்கனவே நல்லெண்ணத்தை காட்டிய போதும் அரசாங்கம் நல்லெண்ண த்துடன் செயற்பட வில்லை என்றும் கூறியுள்ளது. ஜனாதிபதியின் தேசிய அரசாங்கம் என்பது மஹிந்த சிந்தனையை ஏற்றுக் கொண்டு செயற்படுவதாகும். அதாவது அவரு க்கு கீழ் செயற்படுவதாகும். அதனை ஐ.தே. கட்சி ஏற்கும் நிலையில் இல்லை.

அதேவேளையில் பொருளாதார கொள்கையிலும் யுத்தத்தை கொண்டு நடத்த வேண்டும் என்பதிலும் அரசாங்கத்திற்கும் ஐ.தே. கட்சிக்கும் வேறுபாடுகளை காணமுடியவில்லை. எனினும் தேசிய அரசாங்கம் அமைப்பதற்கு வாய்ப்பில்லை. காரணம் கட்சிகளின் அதிகாரப் போட்டியும் அவற்றின் முதலாளித்துவ கொள்கையிலும் அவற்றுக்கிடையே ஒருமை ப்பாடு இல்லை. அத்துடன் வெளி உறவுக் கொள்கை யிலும் பிரதான கட்சிகளுக்கிடையில் ஒருமித்த கருத்து இல்லை. எந்தவகையிலாவது அவற்றினி டையே யுத்தத்தை முன்னெ டுக்க வேண்டும் என்பதற்கான தேசிய அரசாங்கத்தை அமைக் கும் உடன்பாடு ஏற்படாதது நல்லதே. ஏற்பட்டால் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல நாட்டிற்கும் அனைத்து இன மக்களுக்கும் பாரிய அழிவே ஏற்படும்.

அரசு யந்திரத்தினதும் அரசாங்கத்தினதும் சொற்படி நடக்க வேண்டியு படையினரிடமிருந்து (ஓய்வு பெற்ற படைவீரர்களிடமிருந்து வந்தாலும்) யுத்தத்தை நடத்துவதற்காக தேசிய அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்ற சிவில் விடயம் பற்றி கோரிக்கை முன்வைக்கப்பட்டிருப்பது இராணுவ ஆதிக்கத்தின் நிகழ்ச்சி நிரலின் இன்னொரு அசைவாகும். இந்த வகையான ராணுவக் கோரிக்கை எதிர்காலத்தின் வெவ்வேறு வளர்ச்சிகளுக்கு செல்லாது என எவரும் அசட்டையாக இருக்க முடியாது.

ஆசிரியர் குழு

# வடக்கில் விமானக் குண்டு வீச்சு தெற்கில் குண்டு வெடிப்பு

வெகுஜனன்

**இலங்கையில் இன முரண்பாடு–** இன ஒடுக்கு முறை போராட்டம்– யுத்தம் என்பனவற்றால் தொடங்கிய ரத்தப் பெருக்கும் உயிர் இழப்புகளும் இன்றும் தொடர்கின்றது. கடந்த கால் நூற்றாண்டிற்கு மேற்பட்ட காலப் பகுதியில் சுமார் ஒரு லட்சம் மக்கள் வரை கொல்லப்பட்டுள்ளனர். பல ஆயிரக்கணக்கானோர் படுகாயங்கள்பட்டுள்ளனர். இன்றும் அவ் இன அழிப்பு யுத்தம் தொடர்கிறது.

மகிந்த சிந்தனை அரசாங்கத்தின் கீழ் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு என்ற பேச்சுக்கே இடமில்லாதவாறு ராணுவ முனைப்பு சகல நிலைகளிலும் முன் தள்ளப்பட்டு வருகிறது. தேசிய இனப்பிரச்சினைக்கு பயங்கரவாதம் எனப் பெயரிட்டு அதனை அழித்தொழித்த பின்பே பேச்சுவார்த்தை மூலமான தீர்வு தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் என்பதையே ஜனாதிபதி மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகிறார். அதன் வழியிலேயே தான் அடுத்த ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் 16ஆறாயிரத்து 600 கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. இதை விட பல்லாயிரம் கோடிகளுக்கு ஆயுதங்களும் விமானங்களும் கொள்வனவு செய்யப்பட உலக நாடுகளில் பேச்சுக்கள் இடம் பெறுகின்றன. ஜனாதிபதியின் அண்மைய ஈரானிய பயணத்தின் போதும் ஆயுதங்கள் பெறுவதற்கான பேச்சுக்களே முன்னுரிமை பெற்றன.

ஜனாதிபதியும் அரசாங்கமும் கிழக்கின் மீட்பு, புலிகளின் கப்பல்கள் அழிப்பு என்பனவற்றுக்கு வெற்றி விழாக் கொண்டாடி வடக்கு நோக்கி படைகள் செல்லும் என்றனர். அத்தகைய சூழலிலேயே இரண்டு மாதம் முன்பாக அனுராதபுர விமான நிலையத் தாக்குதலைப் புலிகள் நடாத்தி பெரும் அழிவை ஏற்படுத்தினர். அதேவேளை வன்னி மீதான விமானப் படையின் குண்டு வீச்சு தொடர்ந்து கொண்டு வந்தது. அத்தகைய குண்டு வீச்சுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட புலிகளின் இலக்குகள் மீதே நடாத்தப்படுவதாக அரசாங்கம் கூறி வந்தது. ஆனால் இறந்தவர்களில் காயமடைந்தவர்களில் பெரும்பான்மையோர் வன்னிப் பிரதேசப் பொது மக்கள் ஆவர். நவம்பர் 2ம் திகதி வழமைபோல் நடாத்தப்பட்ட விமானப்படை குண்டு வீச்சில் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்செல்வன் உட்பட புலிகள் இயக்கத்தவர்கள் கொல்லப்பட்டனர். இச் சம்பவத்தை அரசாங்கம் சுட்டிக்காட்டி புலிகளின் சரியான இலக்குகளையே தாம் தாக்கி அழித்து வருவதற்கு உதாரண மாகக் காட்டினர். இதனால் உற்சாகமடைந்த விமானப்படையினர் தொடர்ந்தும் முல்லைத் தீவ கிளிநொச்சி மாவட்டங்களில் நாளாந்தக் குண்டு வீச்சைத் தொடர்ந்த வண்ணமே உள்ளனர். அவற்றுக்கும் அப்பால் ஷெல் வீச்சுக்கள், ஆழ ஊடுருவிய கிளைமோர் தாக்குதல்களால் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அண்மையில் பள்ளி மாணவிகள் சென்ற வாகனம் கிளைமோரில் சிக்கி 12 மாணவர்கள் உயிரிழந்தனர்.

அதேநேரம் குடாநாட்டில் கொலைகளும் ஆட்கடத்தல்களும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. தினக்கொலை நடக்கும் குடாநாட்டில் அடுத்த நிமிடம் யார் கொலையாளிகளின் கைகளில் அகப்படுவாரோ என்ற ஏக்கங்களுடனேயே மக்கள் தமது அன்றாட வாழ்வைக் கழித்து வருகின்றனர். இதுவரை குடாநாட்டில் இருநூறு பேர் வரை தமது உயிர் பர்துகாப்புக்கு மனித உரிமை ஆணைக்குழுவில் சரணடைந்து நீதிமன்ற உத்தரவின் கீழ் பாதுகாப்பாக இருந்தும் வருகின்றனர்.

அரசாங்கத்தால் மீட்டெடுக்கப்பட்டதாகக் கூறப்படும் கிழக்கில் மக்கள் நிம்மதியற்ற வாழ்வையே அனுப்பவித்து வருகின்றனர். மீளக் குடியமர்வு எனக் கூறி அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் மக்கள் அல்லற்படுகின்றனர். அழிவுற்ற வீடுகளை புனரமைக்க முடியாது ஓட்டை ஒடிசல் குடிசைகள் இருப்பிடங்களில் வாழ்ந்து வருகின்றனர். அடிப்படைத் தேவைகளும் வாழ்வாதாரத்திற்கான தொழில் வசதிகளும் இன்றி மக்கள் கஷ்டப்படுகின்றனர். இவற்றுக்கும் மேலால் ராணுவ- பொலீஸ் பதிவுகள் கண்காணிப்புகள் இடையிடையே தேடுதல்கள் இடம் பெறுகின்றன. அத்துடன் ஆயுதக் குழுக்க ளால் கொல்லப்படுவது கடத்திச் செல்லப்படுதல் என்பன இடம் பெறுகின்றன. கிழக்கின் உதயம் என்பது வெறும் பிரச்சாரமா கவே உள்ளன.

வன்னிப் பிரதேசங்களில் இடம் பெற்று வரும் விமானக் குண்டு வீச்சின் மத்தியில் அனுராதபுர மாவட்ட எல்லைக் கிராமத்தில் நான்கு விவசாயிகள் இனம் தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டனர். அதேவேளை அம்பாந்தோட்ட மாவட்டத்தின் திஸ்ஸராம பகுதியில் விவசாயிகள் சிலர் மர்மமான முறையில் வெட்டிக் கொல்லப்பட்டனர். இவற்றுக்கு யார் காரணம் என்பது ஆதாரப்படுத்த முடியாத சூழலில் அரசாங்கம் புலிகள் மீதே குற்றம் சாட்டி வருகிறது.

இந் நிலையில் கடந்த நவம்பர் 28ம் திகதி காலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை 11வது தடவையாகக் கொல்வதற்கு தற்கொலைக் குண்டுத் தாக்குதல் முயற்சி இடம் பெற்ற போதிலும் அது தோல்வியடைந்தது. அதில் இருவர் கொல்லப்பட்டதுடன் ஏழுபேர் காயமடைந்தனர். அன்று மாலையில் நுகேகொட சந்திக்கருகாமையில் பார்சல் குண்டு வெடித்ததில் இருபது பேர் கொல்லப்பட்டனர். 37 பேர் வரை காயங்கள் பட்டனர். கொழும்பு நகர் பதட்டமடைந்து கொண்டது. எல்லா மக்களுமே பயப் பீதியடைந்தனர்.

இவற்றின் மத்தியிலேயே டிசம்பர் 1ம் 2ம் திகதிகளில் கொழும்பில் பெரும் எடுப்பிலான தமிழர் கைதுகளும் சிறையில் அடைத்தல்களும் இடம் பெற்றன. சுமார் மூவாயிரம் பேர் வரை ஆண்பெண் முதியோர் இளைஞர் சிறுவர் நோயாளிகள் என்ற கேள்வி நியாயமின்றி கண்மூடித்தனமான கைதுகள் இடம் பெற்றன. கைதானோர் பொலீஸ் நிலையங்களிலும் அடைக்கப்பட்டு பின் பூசா, களுத்துறைச் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டனர்.

மேற்குறித்த தொடர் தாக்குதல்கள் எதிர்த்தாக்குதல்கள் கைதுகள் தடுத்து வைத்தல்களை நோக்கும் போது இவை வக்கிரம் மிக்க பழிக்குப் பழியானவைகளாகவும் இன ஒதுக்கல்களாகவும் காணப்படுகின்றன. இவற்றால் பாதிக்கப்படுவோராக பொது மக்களே இருந்து வருகிறார்கள். அதேவேளை **தமிழர்கள் என்றால் பிடி அடி சிறையிலிடு சித்திரவதைகளுக்கு ஆளாக்கு** என்ற மிகக் கொடூர நிகழ்வுகளே நடைபெற்று வருகின்றன. இவை யாவும் பொலிசாரால் ராணுவத்தினரால் செய்யப்படுவது தற்செயலானதல்ல. மேலிட உத்தரவின் பேரிலேயேயாகும். அப்படியானால் தமிழர்கள் இந் நாட்டின் பிரசைகள் அல்லர் என்ற விரக்தி வெறுப்பு நிலைக்கே தள்ளப்பட்டு வருகிறார்கள். அதேவேளை ஆளுவோரின் யுத்த முனைப்பால் அதன் எதிர் விளைவுகளால் சிங்களப் பொது மக்களும் கடும் பாதிப்புகளையே பெற்று வருகிறார்கள். எனவே தாக்குதல் எதிர்த்தாக்குதல் என்பனவற்றில் ஈடுபட்டு வரும் எத்தரப்பினருக்கும் கொல்லப்படும் படுகாயங்கள் படும் பொதுமக்கள் பற்றி எவ்வித கரிசனையும் கவலையும் இல்லை என்பதே உண்மையாகும்.

கொல்லாமை கருணை அன்பு சமத்துவம் என விரித்துரைத்து நிற்கும் பௌத்த தர்மத்தை முதன்மைப்படுத்துவதாகக் கூறும் நாட்டிலே தான் தினம் தினம் கொலைகள். இனத்தின் மொழியின் மதத்தின் பேரால் மட்டுமன்றி தத்தம் இனங்களுக்கு ள்ளும் கொலைவெறி தாண்டவமாடி நிற்கிறது. இவற்றின் அடிப்படையாக சொத்து சுகம் அதிகாரம் ஆதிக்கம் பதவி ஆகியவையே இருந்து வருகின்றன என்பது விளங்கிக் கொள்ளப்படுவதே மக்கள் முன்னால் உள்ள கடமையாகும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# ஜே. வி. பியின் எதிர்ப்பு வெறும் கண்துடைப்பு



**ஐக்கிய மக்கள் சுதந்திர** முன்னணியின் வரவுசெலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பின் மீதான வாக்கெடுப்பில் ஜே.வி.பி எதிர்த்து வாக்களித்துள்ளது. அதன் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களிப்பார்களா இல்லையா என் பதை வெளிப்படுத்தாமல் இருந்தே வாக்களிக்கும் சந்தர்ப்பத் தில் எதிராக வாக்களித்துள்ளனர். (அவர்களில் ஒருவர் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை) இ.தொ.கா, மு.கா போன்ற சிறுபான்மை இனக்கட்சிகள் ஜே.வி.பி என்ன செய்யும் என்பதை தெரிந்துகொண்டு அதனடிப்படையில் செயற்படக் கூடாது என்பதற்காகவே தமது முடிவை இரகசியமாக வைத்திருந்ததாக ஜே.வி.பி கூறுகிறது.

மூன்றாவது வாசிப்பின் போதும் தாம் என்ன செய்யப்போகிறோம் என்பதை இப்போதே சொல்லமாட்டோம் என்று ஜே.வி.பியினர் கூறுகின்றனர். ஆனால் ஆதரவாக வாக்களிப் பதற்கு வாய்ப்பில்லை என்றும் எதிர்த்து வாக்களிப்பதா வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் இருப்பதாக என்ற இரண்டில் ஒன்றையே ஜே.வி.பி தேர்ந்தெடுக்க வேண்டிவரும் என்பதைக் கூறமுடியும்.

**பாராளுமன்ற கதிரைகள் பறிபோகக்கூடாது**

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் தோல்வியடைந்து பாராளுமன்றம் கலைக்கப்படும் நிலை ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டியது ஜே.வி.பியின் பொறுப்பாகும். ஏனெனில் இந்த அரசாங்கம் ஜே.வி.பிக்கு மிகவும் பிடித்தமான "யுத்தத்தை" தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது. 5 வருடங்கள் பாராளுமன்றத்தில் உறுப்பினராக இல்லாதவிடத்து உறுப்பினர்களுக்கு ஓய்வூதியக் கொடுப்பனவு இல்லை. அதனால் தற்போது பாராளுமன்றத்தில் 5 வருடங்களை பூர்த்தி செய்யாமல் இருக்கும் ஜே. வி. பி உறுப்பினர்கள் மட்டுமல்ல ஏனைய கட்சி உறுப்பினர்களும் பாராளுமன்றம் கலைக்கப்படுவதை விருப்பமாட்டார்கள். அதனால் வரவு செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்டு பாராளுமன்றம் கலைக்கப்பட்டு மீண்டும் தேர்தலுக்கு செல்வதை ஜே. வி. பி விரும்பாது தனித்து ஜே.வி.பி போட்டியிட்டால் ஏறக்குறைய 15 வரையான பாராளுமன்ற ஆசனங்களைப் பெறுவது கடினமாகவே இருக்கும் (தற்போது 38 பேர் இருக்கின்றனர். இது ஐ.ம.சு முன்னணியின் பட்டியலில் போட்டியிட்டு பெற்றதாகும்)

**பேரினவெறி**

வரவு செலவுத்திட்டத்திற்கு ஆதாரவாக வாக்களிப்பதாயின் அர்சாங்கம் 4 நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டுமென ஜே.வி.பி. கூறியது. அதில் அமைச்சர்களின் எண்ணிக்கையை 20 பதுக்குள் மட்டுப்படுத்த வேண்டும் என்பதும் 2002 இல் ரணில் பிரதமராக இருந்த போது த.வி.பு. இயக்கத்துடன் செய்து கொண்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையை இரத்து செய்ய வேண்டும் என்பதும் உள்ளடங்குகின்றன. இதனை மஹிந்த ராஷபக்ச அரசாங்கம் செய்யாது என்பது தெரிந்து கொண்டே ஜே.வி.பி முன்வைத்தது. காரணம் மஹிந்த ராஷபக்ச அரசாங்கத்திற்கு இடைஞ்சல் கொடுப்பதல்ல. மாறாக மக்கள் மத்தியில் எதிர்ப்பு அரசியலை இன்னும் ஜே.வி.பி கைவிட்டு விடவில்லை என்பதை எடுத்துக்காட்டி மக்கள் ஆதரவைத்தக்க வைத்துக் கொள்வதற்கான முயற்சியாகவே வரவு செலவுத்திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

அன்று பேச்சுவார்த்தையில் அனுசரணையாளராக செயற்பட்ட நோர்வே நாட்டிற்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டது. தற்போது ஐ.நா சபையின் நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அவை த.வி.பு இயக்கத்திற்கு ஆதரவாக செயற்பட்டு வருவதாக ஜே.வி.பி பிரசாரம் செய்து வருகிறது.

வடக்கு கிழக்கிலே வாழ்கின்ற அனைத்து இனமக்களும் நேரடியாக போரின் கொடுமைகளை அனுபவித்து வருகின்றனர். அதனை கணக்கில் எடுக்காமல் இனவாத ரீதியாக போரின் வெற்றிகள் பற்றி சித்தரிப்பதும் போர் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதும் தற்போதைய ஆளும் வர்க்கங்களின் நோக்கங்களை நிறைவேற்றி வைப்பதாகவே இருக்கும்.

**எதிர்கட்சியாகும் ஆசை**

ஐ. தே கட்சியிலிருந்து விலகி அரசாங்கத்தில் இணையும் எம்.பிக்களுக்கு அமைச்சுப்பதவிகள் கொடுக்கப்படுவதை வன்மையாக எதிர்ப்பதாக காட்டிக் கொண்டாலும் ஜே.வி. பியின் ஆசனங்களிலும் பார்க்க குறைவான நிலைக்கு ரணில் தலைமையிலான ஐ.தே.க தள்ளப்பட வேண்டும் என்பதும் ஜே.வி.பியின் விருப்பம். ஏனெனில் பாராளுமன்றத்தில் எதிர்க்க ட்சி என்ற அந்தஸ்தைப் பெற்று எதிர்க்கட்சி தலைவர் எதிர்க்கட்சியின் பிரதான கொரடா போன்ற பதவிகளையும் எதிர் க்கட்சிக்குரிய சலுகைகளையும் பெற்றுக்கொள்ள விருப்பம் கொண்டுள்ளது.

அந்த நிலையிலும் கூட அரசாங்கத்தை வீழ்த்துவதற்குரிய எந்த நடவடிக்கையிலும் ஜே.வி.பி ஈடுபடாது. ஏனெனில் பாராளுமன்றத்தில் தொடர்ந்து இருக்க வேண்டும் சலுகைகள் சுகபோகங்கள் அனுபவிக்க வேண்டும். என்பதில் அதற்கு அதிகமான அக்கறை இருக்கிறது.

**விமர்சித்தாலும் அரசை வீழ்த்தமாட்டார்கள்**

அரசாங்கத்திற்கு எதிராக காரசாரமான விமர்சனங்களை முன்வைத்தாலும் அரசாங்கத்தின் அதிகாரத்திற்கு எதிராக எவ்வித நடவடிக்கையிலும் ஈடுபடுவதில்லை என்பது ஜே. வி. பியின் நிலைப்பாடாக இருக்கிறது. இது ஒரு புதிய அணுகு முறை போன்று தெரிந்தாலும் பழைய அணுகுமுறையே விமர்சனங்களில் ஆக்கபூர்வமானவையும் அழிவுபூர்வமானவையும் இருப்பதை அறிவோம். அவை எதிரி வர்க்கத்தின் மீதானது கடும் விமர்சனமாங்களாவன்றி வெறும் குற்றச்சாட்டுகளாகவே இருக்கின்றன.

**வர்க்க நிலைப்பாடு**

ஜே.வி.பி முதலாளித்துவ வர்க்கத்திற்கு தொழிலாளி வர்க்கத்திற்குமிடையில் இருந்து கொண்டு அரசியல் அதிகாரத்தை பிடிப்பதற்காக தடுமாறுவதைக் காணமுடிகிறது. அரசியல் அதிகாரத்தை பிடிப்பதற்கும் தக்க வைப்பதற்கும் ஒன்று முதலாளிவர்க்கமாக இருக்க வேண்டும். அல்லது தொழிலாளிவர்க்கமாக இருக்க வேண்டும். அரசியலில் அல்லது அதிகாரம் என்பதை இரண்டிற்குமிடைப்பட்ட வர்க்கங்கள் தக்க வைத்துக் கொள்ள முடியாது.

பல்லின மக்கள் வாழும் நாட்டில் தனி இனமேலாதிக்கத்தை நிலைநிறுத்தும் நிலைப்பாட்டை கொண்ட ஜே.வி.பி அனைத்து மக்களினதும் அபிலாஷைகளை பிரதிபலிப்பதாக இருக்க முடியாது.

இது ரோஹன விஜேவீர காலத்தில் இருந்து ஜே.வி.பியில் காணப்படும் மாறாக நிலைப்பாடாகும். அதன் வளர்ச்சி தான் ஹெலஉறுமய என்ற பௌத்த மத அடிப்படை வாதத்தை கொண்ட கட்சியின் சார்பில் பௌத்த பிக்குகளை பாராளுமன்றத்திற்கு கொண்டு சென்றதெனலாம். அதன் கருத்தியல் இன்றைய அரசியல் குழப்பங்களுக்கு முக்கிய காரணமாக அமைகிறது.

ஜே.வி.பியின் வளர்ச்சியும் வரையறுக்கப்பட்டதாகும். இலங்கையின் அரசியலில் இடதுசாரிகள் என்று கூறப்படுபவர்களில் அனேகர் இவ்வாறான சீரழிவிற்குட்பட்டுள்ளனர். இவை அவர்களிடன் தவறான அரசியல் முடிவும் நிலைப் பாடும் மட்டுமல்ல. அவர்களது வர்க்க சிந்தனையின் பாற்பட்டதுமாகும். ஜே.வி.பி. தலைமை ஒரு போதும் திருந்தவோ நல்ல முடிவுகளுக்கோ வரமாட்டாது.

**நமது அரசியல் நிருபர்**

# பொதுவுடைமை வாதியின் வாழ்வும் பணியும்

## தோழர் மணியத்தின் 18 வது ஆண்டு நினைவு

இன்றைய நமது சமூக அமைப்பு ஏற்றத்தாழ்வான ஒன்றாகும். உழைப்புச் சுரண்டலும் நுகர்வுச் சுரண்டலும் தாராளமாக இடம் பெறுகின்றன. அதன் மூலம் ஆகப் பெரும் சொத்து சுகம் பெற்றோர் குறிப்பிடத் தக்கோராய் உள்ளனர். அதேவேளை ஏகப் பெரும்பான்மையான மக்கள் வாழ்வில் பெறவேண்டியவற்றைப் பெற முடியாது உழைத்துக் கொடுத்து விட்டு வறுமையோடும் இல்லாமைகளோடும் துன்ப துயரங்களை அனுபவித்தவாறு அரைகுறை வாழ்க் கை வாழ்ந்து வருகிறார்கள். அத்துடன் பழைமைவாதக் கருத்தியல்கள் சிந்தனைகளால் கண்டுண்ட வாழ்விய லுக்குள் செக்கிழுத்த பாதையில் தலைமுறைகள் கடந்தும் வாழ் ந்து வருகிறார்கள். அதற்குரிய நியாயப்பாடாக தலைவிதி என்றும் எவராலும் இதனை மாற்ற முடியாதென்றும் அவரவற்கு தலையில் எழுதியபடி தான் நடக்கும் என்ற நம்பிக்கையில் வாழ்ந்து முடிகிறார்கள். புதிய தலை முறையினரும் அத்தகைய கருத் தியல் சிந்தனைகளில் இருந்து விடுபடாது கல்வி பொருளாதார பண்பாட்டில் வரையறுக்கப்பட்ட சில முன்னேற்றங்களை நோக்கிச் செல்கிறார்கள். ஆனால் இவற்றில் எல்லோரும் முன்னேறிக் கொள்வதில்லை. சமூகத்தின் நிலம் சொத்து பணம் பொருள் கொண்ட ஆதிக்க வர்க்க சக்திகள் தமது பிரதிநிதிகளை ஆளும் பிரதிநிதிகளாகக் கொண்டு ஆட்சி அதிகாரம் செய்கிறார்கள்.

அரசு ஆளும் வர்க்கத்தின் கருவியாகி சாதாரண வர்க்க மக்களை அடக்கி ஆள்கிறது. அரசாங்கம் யாவற்றையும் பரிபாலனம் செய்கிறது. எப்பொழுதும் அரசாங்கத்தின் தலைமைகளில் உள்ளோர் சொத்து சுகம் படைத்தோரின் நலன்களையும் தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்கிறார்கள்.

இத்தகைய சொத்து சுகம் பெற்ற உயர் மேட்டுக்குடி வர்க்க சக்திகளும் அவர்களின் அரசாங்கமும் வரலாற்றில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஏகப் பெரும்பான்மையான தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்கள் சார்பாக அவர்களின் தேவைகள் நலன்கள் முன்னேற்றங்கள் பற்றி அக்கறைப்பட்டது கிடையாது. ஏதாவது செய்யப்படின் மக்களின் அதிருப்தி எதிர்ப்பு கண்டனங்களைத் தணிக்கவும் திசை திருப்புவதற்கேயாகும். அத்துடன் சுதந்திரம் ஜனநாயகம் போன்ற வேடங்களைக் கலையாது காத்துக் கொள்வதற்குமாகும். இதற்கு ஆளும் வர்க்க சக்திகள் பாராளுமன்ற ஜனநாயகம் என்ற பெரும் திரையை மக்கள் முன்னால் விரித்துள்ளனர். வாக்குரிமை தேர்தல்கள் என்றும் ஒன்றிற்குப் பதிலாக மற்றொரு ஆளும் வர்க்க அரசாங்கத்தை மாற்றியமைத்தல் என்றும் நாடகத்தை நடாத்தி மக்களை தாம் கீறிய கோட்டுக்குள் வைத்து வருகிறார்கள். மக்களும் இவை தான் ஜனநாயகம் சுதந்திரம் என நம்பி ஆட்சிகளை மாற்றினால் தம்மை பீடித்த பிரச்சினைகளும் துன்பங்களும் துயரங்களும் நீங்கும் என நம்பிக் கொள்கின்றனர்.

இத்தகைய ஏற்றத் தாழ்வும் சுரண்டலும் மோசடிகளும் ஒடுக்கு முறைகளும் தாண்டவமாடும் சமூக அமைப்பைத் தகர்த்து உடைத்தெறிந்து மக்களுக்கான புதியதோர் சமூக அமைப்பைத் தோற்றுவிக்க முன் வருவோரே பொதுவுடைமைப் புரட்சி வாதிகளாவர். தான் உண்டு தம் குடும்பம் உண்டு என்றும் தம்மைச் சுற்றி நடப்பவைகள் தமக்கு அப்பாற்பட்டவை என்றும் கருதியவாறு சராசரி வாழ்க்கை வாழுகின்ற போக்கே பெரு வழக்காக இருந்து வருகின்றது. இத்தகைய சமூகச் சூழலிலேயே பொதுவுடைமை வாதிகள் என்போர் மாக்சிச உலகநோக்கின் அடிப்படையில் வரலாற்றையும் மனித சமூக வாழ்வையும் சமூக அமைப்பையும் வர்க்கப் போராட்டத்தின் வழி நின்று எதிர் கொண்டு தம் நாடுகளில் செயலாற்றி வந்துள்ளனர்.

அந்த வகையில் இலங்கையில் பொதுவுடமை இயக்க முன்னோடிகள் நாடு பூராவும் உருவாகினார்கள். முப்பதுகளின் பிற்கூறில் பொதுவுடைமை இயக்கம் முளை கொள்ள ஆரம்பித்தது. இலங்கையின் விஷேட சூழலுக்கு ஏற்ப நாற்பதுகளின் முற் கூறிலே பொதுவுடைமைக் கட்சி தோற்றம் பெற்றது. இதில் சிங்கள தமிழ் முஸ்லீம் மலையாளவம்சாவழி முன்னோடிகள் கடும் சவால்கள் மத்தியில் இயக்கத்தை முன்னெடுத்தனர். குறிப்பாக வடபுலத்தில் தோழர் மு. கார்த்திகேசனை ஆரம்ப முன்னோடியாகக் கொண்ட பொதுவுடைமைவாதிகள் தோன்றினர்.

அத்தகையோரின் கடுமையான வேலைகளாலும் போராட்டங்களாலும் இளம் தலைமுறையினர் வடபுலத்து பொதுவுடைமை இயக்கத்தில் உள்வாங்கப்பட்டனர். அவர்களில் ஒருவராக மறைந்த தோழர் மணியம் (கே.ஏ. சுப்பிரமணியம்) இருந்தார். தோழர் மணியம் மாணவக் காலத்திலிருந்து தனது வடபுலத்து கிராமியச் சூழலில் காணப்பட்ட வர்க்க சாதிய ஏற்றத்தாழ்வையும் பாகு பாட்டு நடைமுறைகளையும் பார்த்து தனக்குள் ஏன் எப்படி எதற்காக எனக் கேள்விகள் எழுப்பி விடைகள் தேட முயன்றார். ஆரம்பத்தில் ஈ.வே. ரா தலைமையிலான திராவிட இயக்க கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு தீவிர சமூக அக்கறையும் சீர்திருத்தப் போக்குகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அதன் பின் காங்கேசன்துறை சீமெந்து உற்பத்தித் தொழிற்சாலையில் ஒரு தொழில் நுட்ப மேற்பார்வை யாளராக இணைந்து கொண்டார். அச் சந்தர்ப்பத்திலேயே தோழர் மணியம் அங்கு பணிபுரிந்த பொதுவுடைமை வாதிகளின் தொடர்பால் மாக்சிசத்தை உள்வாங் கியதுடன் பொதுவுடைமைக் கட்சியிலும் இணைந்து செயலாற்ற ஆரம்பித்தார். மாக்சிசத்தின் சமூக விடுதலைக்கானதும் சமத்துவ சமூக அமைப்புக் கொள்கையாலும் பொதுவுடைமை கட்சியின் வேலை முறைகளாலும் தீவிர செயற்பாட்டிற் குரிய ஒருவராகினார். தனது தொழிற்சாலைப் பணியை கை விட்டு கட்சியின் முழுநேர அரசியல் பணிக்கு தன்னை உட்படுத்திக் கொண்டார். ஐம்பதுகளில் ஆரம்பத் திலிருந்து கட்சியின் முழு நேர ஊழியர் பணியில் தனது அரசியல் வாழ்வை ஆரம்பித்த தோழர் மணியம் தனது 1989ம் ஆண்டில் இறுதி மூச்சை நிறுத் திக் கொள்ளும் வரை முழு நேர பொதுவு டைமை அரசியல் பணியை முன்னெ டுத்து வந்த ஒரு நேர்மையான மாக்சிச லெனினிச வாதியாக வாழ்ந்து வந்தார். அவர் பொதுவுடைமை இயக்க அரசியல் வாழ்வில் பல் வேறு போராட்டங்களிலும் கட்சி இயக்கத்தை கட்டி எழுப்புவதிலும்



தொடர்ச்சி 13ம் பக்கம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# தமிழ்த் தலைமைகள் காணும் அமெரிக்கக் கனவு

**இலங்கை அரசாங்கப் பிரதிநிதியான** வெளி அலுவல் அமைச்சர் பொதுநலவாய நாடுகளின் அமைப்பிலிருந்து பாக்கிஸ்தானை வெளியேற்றுவதற்குச் சாதகமாகப் பொதுநலவாய நாடுகளின் நிருவாக குழுக் கூட்டத்தில் வாக்களித்த பிறகு இலங்கை அரசாங்கம் பாக்கிஸ்தானை வெளியேற்றியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அறிக்கை வெளியிட்டதுடன் வெளி அலுவல் அமைச்சரிடம் விளக்கங்கோரியும் உள்ளது. இது போன்ற கோமாளித்தனங்கள் இலங்கை அரசாங்கத்திற்குப் புதியனவல்ல. எனினும் தமிழ் ஊடகங்கள் சில குறிப்பாக இந்தியக் குறுக்கீட்டை வலியுறுத்தி வரும் ஒரு பெரிய ஊடக நிறுவனம், இலங்கை அரசாங்கம் பாக்கிஸ்தானுக்கு ஆதரவாகத் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுள்ளதால் இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் முறுகல் ஏற்பட்டுள்ளது என்ற தனது ஊகத்தைச் செய்தியாக்கியுள்ளது. இது நிர்க்கதியானவர்களின் அரசியல். இந்த அரசியலாலே தான் தமிழ்த் தலைமைகள் ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக் காலமாக வழி நடத்தப்பட்டுள்ளன. பொன்னம்பலம் ராமநாதன் முதல் ஜி.ஜி. பொன்னம்பலம் வரை பிரித்தானிய ஆட்சியாளர்களை மகிழ்வித்தால் தமிழர் நன்மை அடைவர் என்ற அடிப்படையில் அரசியல் நடத்தினர். நிச்சயமாக ஒரு சில தமிழர் நன்மை அடைந்தனர். ஆனாலும் கொலனிய ஆட்சியாளர்களது. கவனமெல்லாம் உள்ளூரில் யாரை அதிகாரத்தில் வைத்திருந்தால் நாட்டைத் தங்கள் கைகளில் வைத்திருக்கலாம் என்பதிலேயே இருந் தது.

ஜி. ஜி. பொன்னம்பலத்திடமிருந்து தலைமையைப் பறித்தெடுத்த தமிழரசுக் கட்சியிடமும் அதே விதமான வெள்ளை எசமான விசுவாசம் தொடர்ந்தது. பிரித்தானிய நீதி மன்றத்தில் வழக்காடிச் சிங்களம் மட்டுமே சட்டத்தை முறியடிக்கலாம் என்ற கனவில் மண் விழுந்த பின்பும் பிரித்தானிய விசுவாசம் தொடர்ந்தது. 1960க்குப் பிறகு அமெரிக்காவுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இலங்கையின் அணி சேராக் கொள்கையாலும் இலங்கை சோஷலிஸ நாடுகளுடன் ஏற்படுத்திய அரசமட்ட உறவுகளாலும் பொதுவான கொலனிய விரோத முனைப்பாலும் ஏற்பட்ட முரண்பாட்டைப் பயன்படுத்தித் தமிழ் மக்களின் உரிமைகளை வெல்லலாம் என்ற கனவும் பொய்யாகிப் போனது.

இந்திரா காந்திக்கும் ஜயவர்த்தனவுக்கும் இடையில் இருந்த முரண்பாட்டைப் பயன்படுத்த எடுத்த முயற்சி படு கோணலாகப் போய் 1987- 89 காலத்து அனுபவம் வரை கொண்டு வந்து விட்டது. அதற்குப் பின்னும் முக்கியமான தமிழ் அரசியல் தலைவர்கள் பலர் எதையுமே கற்கவில்லை. அல்லது அவர்களது சொந்த நலன்கள் அந்த அனுபவங்கள் பற்றிச் சிந்திப்பதற்கே இடமளிக்காமற் செய்திருக்க வேண்டும்.

தேசிய இனப் பிரச்சனை போராக மாறிய நாளிலிருந்தே பேரினவாத ஆட்சியாளர்கட்கு அமெரிக்காவும் அமெரிக்க அனுமதியினது அல்லது ஆலோசனையினது பேரில் இஸ்ரேலும் ஆயுதங்களையும் போர்க் கப்பல்களையும் தாங்கிகளையும் விமானங்களையும் பெருமளவில் வழங்கிவந்துள்ளன. இந்தியாவும் 1987க்குப் பிறகு தமிழ் மக்களின் விடுதலைக்கான அக்கறை பற்றிய பாசாங்குகளைக் கை விட்டு விட்டது. பிரேமதாசவின் ஆட்சிக் காலத்தில் இந்திய அமைதிப் படையை வெளியேற்ற அவர் விரும்பியதால் ஏற்பட்ட முரண்பாடு 1990 அளவில் சுமுகமாகத் தீர்ந்து விட்டது. அன்று முதல் இந்திய ஆட்சியாளர்கள் இலங்கையின் தேசிய இனப் பிரச்சனையில் இலங்கை அரசாங்கத்திற்குச் சாதகமாகவே நிற்பதாக முடிவ செய்துவிட்டார்கள். எனினும் தமிழ்

**தேசபக்தன்**

நாட்டின் அரசியலில் இலங்கையின் தேசிய இனப்பிரச்ச னைக்கு ஒரு முக்கியத்துவம் இருந்தது. அதைக் கூட மிகையாக மதிப்பிட்டு முக்கியமாகத் தமிழக அரசியல் கட்சிகளது சொந்த நோக்கங்களை விளங்கிக் கொள்ளாமல் இருபது ஆண்டு கட்கும் மேலாகத் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டதும் போதாமல் இந்த நாட்டுத் தமிழ்த் தேசியவாதத் தலைவர்கட்குச் சிறிதுஞ் சளைக்காத பங்காற்றியவை நமது தமிழ் ஊடகங்கள். இன்றுங் கூட இந்தியா பற்றிய நம்பிக்கையை இந்தியா இலங்கை அரசாங்கத்துக்கு இரகசியமாக இராணுவ உதவியும் ஆயுதங்களும் வழங்கியுள்ளது என்ற உண்மை வெட்டவெளிச்சமான பின்பும், இந்தியாவை எப்படி வளைத்துப் போடலாம் என்கிற கற்பனையை இன்னமும் கைவிடத் தமிழ்த் தலைமைகளும் சில முக்கிய ஊடகங்களும் ஆயத்தமாக இல்லை.

அமெரிக்கா பற்றிய பிரமைகட்கு இந்தியா பற்றிய பிரமைகளை விடக் குறைய நியாயமே இருந்துள்ளது. எனினும் இலங்கை அரசாங்கத்தின் அயற் கொள்கை. மனித உரிமை மீறல்கள், அந்நிய முதலீடுகட்குப் பாதகமான பொருளாதாரச் சூழல் என்பன காரணமாக இலங்கை அரசாங்கத்திற்கு எதிராகத் திரும்பும் என்ற நப்பாசையிற் கடந்த மூன்று ஆண்டுகள் கடந்து விட்டன. இன்னமும் அமெரிக்கா பற்றிய கனவுகள் தொடருகின்றன.

அமெரிக்கா விடுதலைப் புலிகள் இயக்கத்தில் பிளவை ஏற்படுத்தியதிலிருந்தும் கூட கனவு காணுகிற இவர்களில் எவரும் எதையும் கற்றதாகத் தெரியவில்லை. அமெரிக்கா விடுதலைப் புலிகள் மீது தடை விதித்த போது கூட யாராவது அமெரிக்க அரசியல் வாதிகளின் தயவில் அந்த முடிவை மாற்றலாம் என்று பரவலாக நம்பப்பட்டது. இது அமெரிக்கா தனது உலக மேலாதிக்க நோக்கில் எடுத்த முடிவு, இலங்கையின் பேரினவாத ஆட்சி தனது உலகமயமாதல் திட்டத்துக்கு உடந்தையாக நடந்து கொள்வதற்கு ஏற்ற விதமாக எடுக்கப்பட்ட முடிவு. விடுதலைப் புலிகள் அமெரிக்காவின் உலக ஆதிக்கத்தை ஏற்றாலும் எதிர்த்தாலும் உலகமயமாதலை ஏற்றாலும் எதிர்த்தாலும் அது மாறப் போவதில்லை. அமெரிக்காவுக்கு விடுதலைப் புலிகள் பற்றி மட்டுமல்ல தமிழர் பற்றியும் கூட அக்கறை இல்லை. இது விளங்காமல் அமெரிக்காவிலோ அவுஸ்ரோலியாவிலோ கனடாவிலோ இங்கிலாந்திலோ உள்ள அரசியல் வாதிகளைக் கொண்டு அனுதாப அறிக்கைகளையோ இலங்கை அரசாங்கம் பற்றிய கண்டனத் தீர்மானங்களையோ வெளியிட்டு எதுவமே ஆகாது. இது நமக்கு விளங்க வேண்டும்.

இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்கள் பற்றிய "ஹியூமன் றைற்ஸ் வொச்" அறிக்கை வந்தது. ஐ.நா மனித உரிமை ஆணைய அவதானிப்புக்கள் வெளிவந்தன. அடுத்த ஆண்டு முதல் அமெரிக்கா இலங்கைக்கு ஆயுதங்கள் விற்காது என்ற அறிவித்தல் வந்தது. ஆனால் இந்த ஆண்டே முந்தைய பல ஆண்டுகளிலும் விற்ற மொத்த அளவிலும் விற்கப்பட்டுவிட்டது. அது போக இப்போது ஒரு கப்பலும் விற்கப்பட்டுள்ளது. இத்தனைக்கும் பிறகு அமைதியான தீர்வு பற்றிய அமெரிக்க அக்க றையின் பெறுமதி என்ன?

இலங்கை ஈரானிடம் ஆயுதம் வாங்குவதால் அமெரிக்கா சினமடையும் என்றும் ராஜபக்ஷவின் ஈரான் பயணம் அமெரிக்காவுக்குச் சினமூட்டும் என்றும் புதிய கற்பனைகளில் இறக்குவதிற் பயனில்லை.

இந்தியாவும் அமெரிக்காவும் இப்போது தென்னாசியா மீதான ஆதிக்கத்திற்குப் போட்டியிடவில்லை. இரு நாடுகளின் எச மானர்களும் இப்போது பங்காளிகள். அவர்களுக்குப் பகையா ளிகள் பாக்கிஸ்தானும், சீனாவும், ரஷ்யாவுமாக அமையலாம். ஆயினும் நேரடியாகவும் வெளிவெளியாகவும் இந்தியா இம் மூன்று நாடுகட்கும் எதிராகத் திரும்பக் கூடிய வாய்ப்புக்கள் உடனடியாக இல்லை. அமெரிக்காவின் நீண்ட காலத் திட்டத்திற்கு இன்றைய இந்திய ஆட்சியாளர்கள் உதவலாம். ஆனால் அந்தக் கணக்கு வழக்கில் தமிழரின் நலன்கள் உள்ளடங்காது.

சீனாவையும் பாக்கிஸ்தானையும் காட்டி இந்தியாவைத் தமிழருக்குச் சாதகமாகத் திரும்புகிற கனவு பகல் நித்திரைக்குத் தான் ஏற்றது. இந்தியா இலங்கை மீது ஆதிக்கம் வேண்டுகிற நோக்கம் சீன மிரட்டலோ பாக்கிஸ்தானிய மிரட்டலோ இல்லை. அதன் காரணங்கள் பிராந்திய மேலாதிக்கம் சார்ந்தன. அதனை அமெரிக்காவுடன் சேர்ந்தே அது சாதிக்க முயல்கிறது.

# ஒக்ரோபர் புரட்சியின் 90வது ஆண்டு நினைவாக

"**மனிதரை மனிதர் ஒடுக்குவது நீதியானது.** அவர்களின் சுதந்திரத்தை மறுப்பது நியாயமானது. மனிதரை மனிதர் சுரண்டுவது சரியானது. இவற்றுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்வது அநீதியானது என்ற போக்கே மேலோங்கி இருந்து வந்தது. ஆனால் மாக்சிசத்தின் வரவோடு இந் நிலை அடியோடு மாற்றியமைக்கப்பட்டு விட்டது. ஒடுக்குவது அநீதியானது. சுதந்திரத்தை மறுப்பது நியாயமற்றது. சுரண்டுவது தவறானது. கிளர்ச்சி செய்வது நியாயமானது என்ற நிலை ஏற்பட்டு விட்டது."

மாக்சிசம் தோற்றுவித்த இந் நிலையை முதன் முதலில் நடைமுறைக்கு கொண்டு வந்த புரட்சியே மகத்தான ஒக்ரோபர் சோஷலிசப் புரட்சியாகும். ஏகப் பெரும்பான்மையான தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்கள் தம்மைப் பிணைத்திருந்த சகலவவை அடிமை விலங்குகளையும் உடைத்தெறிய ஒக்டோபர் புரட்சி வழிகாட்டியது. ரஷிய போல்ஷ்விக் கட்சியினதும் தோழர் லெனின் தலைமையினதும் வழி நடத்தலில் ஒக்ரோபர் புரட்சி 1917ம் ஆண்டு இடம் பெற்றது. இவ்வாண்டு நவம்பரில் அதன் 90வது ஆண்டு நினைவாகும்.

1948ல் கார்மாக்ஸ் ஃபிரடிக்ற் ஏங்கல்ஸ் ஆகிய இரண்டு தொழிலாளி வர்க்க ஆசான்களும் அவர்களோடு இணைந்த தோழர்களும் வெளியிட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆவணமே கம்யூனிஸ்ட் அறிக்கை ஆகும். கம்யூனிஸ்ட் அறிக்கை என்பது வெறும் சொற்கோவை கொண்ட வெற்றுப் பிரகடனம் அல்ல. உலகத் தொழிலாளி வர்க்கத்திற்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் விடுக்கப்பட்ட போராட்ட அறை கூவலாகும். அந்த மகத்தான வரலாற்று அறை கூவல் ஒவ்வொரு நாட்டிலும் எதிரொலிக்கச் செய்தது. முதலாளித்துவ உலகை நோக்கி தத்துவார்த்த கோட்பாட்டு நிலையிலும் பாட்டாளி வர்க்கப் போராட்ட நிலையிலும் தொடுக்கப்பட்ட முதலாவது தாக்குதல் ஆயுதமாகவும் அமைந்தது. அதிலிருந்து கிளம்பிய தீப்பொறிகள் ஒவ்வொரு நாடுகளிலும் விழச் செய்தன. தொழிலாளி வர்க்கத்தையும் ஏனைய ஒடுக்கப்பட்ட மக்களையும் விழித்தெழவும் போராட்டப் பாதையில் பயணிக்கவும் செய்தது.

ரஷிய நாட்டில் தோழர் லெனின் மாக்சிசத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிலாளி வர்க்கப் புரட்சிக்குத் தயாரிப்புச் செய்யத் தொடங்கினார். புரட்சி என்பது மாபெரும் சமூக மாற்ற நிகழ்வாகும். ஏற்கனவே சகல வளங்களுடனும் ஆயுத அதிகார பலத்துடனும் இருந்து மக்களை அடக்கி ஆண்டு வந்த ஆளும் வர்க்க அமைப்பை பலாத்காரத்தின் மூலம் தூக்கி எறிவதாகும். இதனை தனி நபர் வீரசாகசத்தின் மூலமோ பயங்கரவாத செயற்பாடுகள் மூலமோ சாதிக்க முடியாது. அல்லது ஆளும் வர்க்கமாக உள்ள வர்களில் முதன்மையானவர்களைத் தீர்த்துக் கட்டுவதன் மூல மாகவோ சமூக மாற்றங்களைக் கொண்டுவர முடியாது. இவற் றுக்குப் பதிலாக மக்களை அணிதிரட்டி அறிவூட்டி சமூக மாற்ற த்தின் அவசியத்தை உணரச் செய்து அமைப்பு ரீதியாகப் புரட்சி கரக் கட்சி ஒன்றைக் கட்டியெழுப்பி அதன் தலைமையில் புரட் சிகர மக்கள் ராணுவத்தை உருவாக்கியே புரட்சியை முன்னெ டுக்க முடியும். இதனையே அன்றைய ரஷ்யாவில் ஒக்ரோபர் புரட்சி மூலம் தோழர் லெனினும் போல் ஷ்விக் கட்சியினரும் சாதித்தனர்.

ஜார் மன்னர்களின் நிலப்பிரபுத்துவ பரம்பரை ஆட்சிகளின் கீழ் அடக்கி ஒடுக்கப்பட்டு வாழ்விழந்த நிலைகளில் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள் ரஷ்ய மக்கள். அவர்கள் விவசாயிகளாகத் தொழிலாளர்களாக உழைக்கும் ஏனைய பிரிவு மக்களாக ஒடுக்கப்படும் தேசிய இனங்களாக ஜார் மன்னர்களின் போர் வெறிக்கான படைவீரர்களாக இருந்து வந்தவர்கள் ராஷ்யாவின் ஏகப் பெரும்பான்மையான மக்கள். அதேவேளை மன்னன் பிரதா னிகள் நிலப்பிரபுக்கள் மதபீடத் தலைமைக் குருமார் ராணுவ அதிகாரிகள் உள்ளூர் அதிகார சக்திகள் என்போர் மக்களை ஒடுக்குவோராகவும் இருந்து வந்தனர்.

அத்தகையதோர் நாட்டிலே தான் தோழர் லெனின் தலைமையில் பொதுவுடமைக் கட்சியும் அதன் தலைமையிலான தொழிலாளர் விவசாயிகளின் செஞ்சேனையும் தோற்றுவிக்கப்பட்டன. கட்சியின் தலைமையில் தொழிலாளி வர்க்கம் போத மூட்டப்பட்டது. உழைக்கும் மக்களின் சிந்தனைக்கும். செயலுக்கும் மடைதிறக்கப்பட்டது. புதைக்கப்பட்டிருந்த ஆற்றல்கள் வெளிக் கொணரப்பட்டன. தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்களின் பலம் எத்தகையது என்பது நடைமுறைப் போராட்டங்களால் புடம் போடப்பட்டது.

ரஷ்ய (போல்ஷ் விக் கட்சி) பொதுவுடைமைக் கட்சி தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாகி உருக்குப் போன்ற பலத்தா லும் கட்டுப்பாட்டாலும் அர்ப்பணிப்பு தியாகத்தால் கடும் உழைப்பால் கட்டியெழுப்பப்பட்டது.



ஒவ்வொரு பொதுவுடைமைவாதியும் எவ்வாறு தம்மை தகவமைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்கான அடிப்படைகள் தோன்றி வளர்ந்தன. ஒரு பொதுவுடமைவாதி என்பவர் முதலில் மாக்சிசத்தின் உள்வாங்கலால் புதிய உலகக் கண்ணோட்டத்தைப் பெறுகிறார். அதன் மூலம் பொதுவுடைமைக் கட்சியில் இணைகிறார். தனது ஆற்றல் முழு வதையும் மனித குல விடுதலை என்ற மகத்தான இலட்சியத்திற்கு பயன்படுத்துகிறார். சுயநலம் சொத் துச் சேர்ப்பு சுகபோக வாழ்க்கை யாவற்றையும் துறந்து கொள்கிறார். எளிமையான வாழ்வும் கடுமையான போராட்டமும் என்ற புரட்சிகர வாழ்வியலுக்கு தன்னை அர்ப்பணிக்கிறார். நடைமுறை அனுபவங்களின் ஊடாகத் தனது தவறுகளைத் திருத்திக் கொள்கிறார். ஏகப்பெரும்பான்மையான மக்களின் துன்பதுயரங் களை துடைத்தெறியும் புரட்சிகரப் போராட்டப் பாதையில் வீரம் தியாகம் அர்ப்பணிப்புடன் பயணிக்கிறார். இத்தகைய பொதுவுடைமை வாதிகளையே அன்று ரஷியாவில் தோழர் லெனினும் பொதுவுடைமைக் கட்சியும் தோற்றுவித்தனர். இந்தப் பாரம் பரியம் உலகம் பூராவும் இன மொழி மதம் கடந்த பொது நிலையைப் பொதுவுடைமை வாதிகள் மத்தியில் ஏற்படுத்தியது. மாக்சிசத்தின் அடிப்படையில் ஒவ்வொரு நாட்டின் விஷேச நிலைமைகளுக்கு ஏற்ப பொது வுடைமைக் கட்சிகள் தோன்றின. அவற்றுக்கெல்லாம் மாபெரும் 1917ன் ஒக்ரோபர் புரட்சி வழிகாட்டியது.

**தொடர்ச்சி 12ம் பக்கம்**

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# 2 வருட ஆட்சியில் நாடும் மக்களும்

சண் முகம்

கடந்த நவம்பர் 19ம் திகதியுடன் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதிக் கதிரைக்கு வந்த இரண்டு வருடங்கள் முடிவடைந்து விட்டன. முதலாவது வருட முடிவில் இருந்த ஆரவாரங்கள் எதுவும் இவ் இரண்டாவது ஆண்டு முடிவில் இடம் பெறவில்லை. மகிந்த சிந்தனை என்பதன் ஊடாக நாட்டை வளம்படுத்தி பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு சுபீட்சமான இலங்கையைக் கட்டியெழுப்புவேன் என்ற வாக்குறுதியுடனேயே மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகிக் கொண்டார்.

ஆனால் இந்த இரண்டு வருடகாலத்தில் எந்தவொரு துறையிலும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளும் இடம் பெறவில்லை. நாட்டின் பொருளாதார அரசியல் சமூக பண்பாட்டுத் தளங்கள் அனைத்திலும் கடந்த 60 வருடகாலப் பாராளுமன்ற ஆட்சி ஊடாக மாறி மாறி அதிகாரத்திற்கு வந்ததினால் நாடு தேய்ந்து சென்றதே தவிர வளர்ச்சியடையவில்லை. அதிலும் குறிப்பாக கடந்த (1978-2007) இருபத்தியொன்பது வருடகால ஜனாதிபதி ஆட்சி முறையின் கீழ் நாடு சகலதுறைகளிலும் சீரழிக்கப்பட்டே வந்துள்ளது. "நெல்லைக் கொடுத்து அரிசியாகப் பெற்று வந்த கொடுமையான அரசனின் மறைவுக்குப்பின் பதவிக்கு வந்த மகன் முன்பைவிட மிகக் கொடுமையாக உமியைக் கொடுத்து அரிசியை வாங்கிக் கொண்டமை" போன்று தான் ஒவ்வொரு ஜனாதிபதியும் ஆட்சி புரிந்து வந்துள்ளனர். அந்த வரிசையில் வந்தவர் தான் தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்களும் கட்சிகளும் வேறு வேறானவர்களே தவிர வர்க்க இனத்துவ நிலைகளில் முதலாளித்துவ பேரினவாத ஆளும் தரப்பினராகவே இருந்து வந்துள்ளனர்.


1977ல் இருந்து இரண்டு பிரதான விடயங்கள் இவ் ஆளும் பேரினவாத முதலாளித்துவ சக்திகளால் முன்னெடுக்கப்பட்டன. ஒன்று, உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலின் கீழ் தாராளமயம் தனியார் மயத்தை முழுமையாக ஏற்று நடைமுறைப்படுத்திக் கொண்டமை. இரண்டாவது, இன முரண்பாட்டை பேரினவாத ஒடுக்குமுறையாக்கி கொடிய யுத்தத்தைத் திணித்து வளர்த்தெடுத்தமையாகும். இவ் விரண்டின் தொடர்ச்சியை எந்தவொரு நிறைவேற்று அதிகார ஜனாதிபதியும் கைவிடவில்லை. இதற்கு அந்நிய ஏகாதிபத்திய மேலாதிக்க சக்திகள் முழு ஒத்துழைப்பும் அரவணைப்பும் வழங்கிக் கொண்டன. இதன் மூலம் நாடு மறுகொலனியாக்கம் பெறுவதற்கான சகல வாய்ப்புகளும் ஏற்படுத்தப்பட்டன. தன்னை மண்ணின் மைந்தன் என்று கூறி அதற்கான அடையாளம் தனது கழுத்தைச் சுற்றியுள்ள செங்காவிச் சால்வையே என அர்த்தம் கொடுத்து ஆட்சி பீடம் ஏறியவர் மகிந்த ராஜபக்ஷ. அவர் தன்னுடன் தனது மூன்று சகோதரர்களையும் இணைத்து அதிமுக்கிய பதவிகள் வழங்கி தாமே கொள்கை வகுப்பாளர்களாகியும் கொண்டனர். தேர்தல் காலத்தில் ஜே.வி.பி. யும் ஜாதிக ஹெல உறுமயவும் வழங்கிய ஆலோசனையும் ஆதரவும் ஜனாதிபதித் தேர்தல் வெற்றிக்கு உதவின. ஆனால் பதவி ஏற்பிற்குப் பின் பிரதானமாக சகோதரர்களின் தீர்மானங்களும் முடிவுகளுமே மகிந்த சிந்தனை என்றாகிக் கொண்டது. இதனால் ஜே.வி.பி. தூர விலகிக் கொண்டது. ஹெல உறுமய அரசுடன் இணைந்து நிற்கிறது.

இச் சகோதரர்களின் வழிகாட்டலில் ஜனாதிபதி தேசிய இனப் பிரச்சினை விடயத்திலும் பொருளாதாரத்துறையிலும் எவ்வித சாதக புள்ளிகளையும் பெற இயலவில்லை. முன்னையவர்களை விடவும் யுத்தத்தை முன்னெடுப்பதில் மகிந்த ராஜபக்ஷ வரிந்து கட்டிக் கொண்டு முன் வந்தார். தேசிய இனப் பிரச்சினைத் தீர்வுக்கு அவரது மொழியில் "கௌரவமான சமாதானம்" என்பதற்கான எந்தவொரு முயற்சியிலும் அவர் உளப்பூர்வமாக செயல்படவில்லை. இன்றும் அதே நிலைதான் நீடிக்கிறது. அதேவேளை இனப்பிரச்சினைக்குப் பயங்கரவாதம் எனப் பெயரிட்டு அதனை அழித்தொழித்த பின்பே அரசியல் தீர்வு என்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடாக உள்ளது. இதன் அடிப்படையிலேயே கிழக்கின் விடுவிப்பைச் செய்ததாகக் கூறி வெற்றி விழாவும் கொண்டாடப்பட்டது. ஜனாதிபதியும் சகோதரர்களினதும் அடுத்த யுத்த இலக்கு வடக்கு நோக்கியதாகவே உள்ளது. யுத்தத்தின் மூலம் வெற்றி பெறுவது இயலாது என்பதை ஜனாதிபதி உட்பட ஆளும் தரப்பினர் உள்ளூரத் தெரிந்து கொண்டபோதிலும் அவர்களது ஆட்சி அதிகார நீடிப்பிற்கு யுத்தம் தேவையாக உள்ளது. அதுவே மிகப் பயன் உள்ள பாதுகாப்புக் கவசமாகவும் இருக்கிறது. அதன் காரணமாகவே கடந்த இரண்டு வருட ஆட்சிக் காலத்தை யுத்தத்தின் ஊடாக முன்னெடுத்தும் வந்துள்ளனர்.

மேலும் இவ் இரண்டு ஆண்டுகளிலும் பொருளாதார நெருக்கடிகள் மோசமடைந்து வந்துள்ளன. ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்து வந்துள்ளது. பணவீக்கம் 22 வீதமாக உயர்வடைந்துள்ளது. அத்தியாவசியப் பொருட்கள் உட்பட அனைத்தினதும் விலைகள் உயர்ந்துள்ளன. வாழ்க்கைச் செலவைத் தாங்க முடியாது உழைக்கும் மக்கள் திணறி வருகின்றனர். வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள மக்களின் எண்ணிக்கை இவ் இரண்டு வருடங்களில் பல மடங்காகப் பெருகி உள்ளன. பொருட்களின் அதிகரித்த விலை உயர்வுகளுக்கும் சேவைக் கட்டணங்களின் அதிகரிப்புகளுக்கும் யுத்தமும் உலகச் சந்தையும் தான் காரணம் என அரசாங்கத்தரப்பில் நியாயம் கூறப்படுகிறது. ஆனால் யுத்தத்தை யார் முன்னெடுக்கிறார்கள். உலகமயமாதல் மூலமான தனியார்மயத்தையும் தாராளமயத்தையும் யார் பின்பற்றி நிற்கிறார்கள். இவை பற்றி மக்களுக்கு உண்மைகள் மறைக்கப்படுகின்றன.

அதேவேளை சிங்கள தமிழ் முஸ்லீம் மலையகத் தமிழ் மக்கள் இன அடிப்படையில் ஒருவரோடு ஒருவரை மோதவைக்கப் படுகின்றனர். யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை வற்புறுத்தி வந்த சிங்கள மக்கள் மத்தியில் யுத்த மோகத்தையும் வெற்றி நம்பிக்கையும் இவ் இரண்டு வருடங்களில் வளர்ப்பதில் மகிந்தராஜபக்ஷ அரசு முன்னின்று வந்துள்ளது.

"கிழக்கின் வெற்றி விழா" மற்றும் "புலிகளின் கப்பல்கள் மூழ்கடிப்பு வெற்றி விழா" கொழும்பிலும் திருகோணமலையிலும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அவற்றின் ஊடாக சிங்



கள மக்கள் மத்தியில் யுத்தத்தின் மூலம் வெற்றி பெறும் நம்பிக்கை ஒரு போதையாகவே ஊட்டப்பட்டு வருகின்றது. இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்போர் புலிகளின் ஆதரவாளர்கள் என முத்திரை குத்தப்படும் நிலை தொடர்கிறது. சிங்கள மக்கள் மத்தியில் சுய நிர்ணய உரிமை பற்றியும் அரசியல் தீர்வு பற்றியும் பேசும் சகலரும் "சிங்களப் புலிகளாகச்" சித்தரிக்கப்படுவதுடன் அவர்கள் மீது ஒடுக்கு முறைகளும் ஏவி விடப் பட்டுள்ளது.

தமது யுத்தக் கொள்கையை முன்னெடுக்கும் போக்கில் ராஜபக்ஷ ஆட்சியினர் நாட்டின் இறைமை சுதந்திரத்திற்கு அபாயம் ஏற்பட்டுள்ளதாக உரத்துப் பேசுகின்றனர். அதில் உண்மையில்லை என எவரும் வாதிட முடியாது. இன மொழி மத பிரதேச முரண்பாடுகளை மூன்றாம் உலக நாடுகளில் உட்பகையாக வளர்த்து ஒரே நாட்டு மக்களை மோத வைத்து அதன் ஊடாக ஊடுருவலில் ஈடுபட்டு வந்ததே ஏகாதிபத்திய சக்திகளின் சமகாலச் செயற்பாடாகும். அந்த நிலை இலங்கையிலும் கையாளப்பட்டே வருகிறது. ஆனால் அதற்குத் தூர நோக்குடன் நாட்டின் அரசியல் தலைமைகள் முன்கூட்டியே "வெள்ளம் வருமுன் அணைகட்டியிருக்க" வேண்டும். இன மத மொழி பிரதேச முரண்பாடுகளை உரியவாறு தீர்வுக்கு கொண்டு வந்து தேசிய இனங்களின் ஐக்கியத்தை நிலை நாட்டியிருக்க வேண்டும். அவ்வாறு செய்யாது உள் முரண்பாடுகளை வளர்த்து ஒடுக்கு முறையாக்கி உட்பகை மூலம் நாட்டு மக்களை மோத வைத்து தமது உயர்வர்க்க ஆட்சியை நிலை நாட்டியே வந்தார்கள். இதற்கு ஏகாதிபத்தியம் மறைமுகமாக நின்று ஊக்குவித்துக் கொண்டது. பிராந்திய மேலாதிக்கம் உற்சாக வழி காட்டல் வழங்கி வந்தது. ஒரு புறத்தில் இறைமைக்கு ஆபத்து சுதந்திரம் பறிபோகிறது எனக் கூறிக் கொண்டு அதே அந்நிய சக்திகளிடம் தான் ஆயுதங்கள் கப்பல்கள் விமானங்கள் என வாங்கிக் குவித்து யுத்தம் நடாத்துகின்றனர். இதற்கு ஜே.வி.பி ஆதரவு கொடுக்கிறது. மக்கள் நாடு பற்றி இவ் ஆளும் வர்க்க சக்திகளுக்கு என்றுமே அக்கறை இருந்தது கிடையாது. அதற்குக் காரணம் கிடைத்ததைத் தலையில் வைத்து வருடா வருடம் கொண்டாடும் சுதந்திரம் என்பதைப் போராடிப் பெற்றிருந்தால் சிறு அளவாவது புரிய நியாயம் இருந்திருக்கும். மன்றாடி நின்ற நிலவுடைமை முதலாளித்துவ ஆளும் வர்க்கத்திடம் வெள்ளை எசமானர்கள் அதிகாரத் தொனியுடனும் கட்டுப்பாட்டு வாக்குறுதிகளுடனும் கைமாற்றிக் கொடுத்துச் சென்ற சுதந்திரத்தை இன்றுவரை தமது சொத்து சுகபோக வாழ்வுக்கும் ஆட்சி அதிகாரத்திற்கும் பயன்படுத்தி வந்தவர்களின் தொடர்ச்சி தான் ராஜபக்ஷ சகோதரர்களின் தலைமையிலான ஆட்சியாகும்.

இதனை கடந்த இரண்டு வருடகாலத்தில் என்றுமில்லாதவாறு தெளிவாகக் காண முடிகிறது. யுத்தம் அவர்களது ஆட்சி அதிகார நீடிப்பிற்கு தகுந்த கவசமாகும். இதனை இவர்கள் நியாயமான அரசியல் தீர்வு என்பதன் ஊடாகக் கழற்றிக் கொள்ளமாட்டார்கள். மக்கள் குறிப்பாகச் சிங்கள மக்கள் தமது சொந்த ஆளும் வர்க்கத் தலைமைகளின் உண்மையான சுயரூபங்களைக் கண்டு அவற்றை நிராகரிக்க முன்வராதவரை நாட்டிற்கும் மக்களுக்கும் அழிவுகள் தொடர்ந்த வண்ணமே இருக்கும்.

யுத்தத்தின் மூலம் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இயலாது என்பதை கடந்த மூன்று தசாப்தகால அனுபவங்களும் பட்டறிவுகளும் எடுத்துக் காட்டியுள்ளன. அதேவேளை





நாட்டின் பொருளாதாரம் அபிவிருத்தி முன் முயற்சிகள் யாவும் யுத்தத்தால் அழிவுற்றே வந்துள்ளன. அத்துடன் யுத்தத்தைத் திரையாக முன்விரித்து விட்டு அதன் மறைவில் ஏகாதிபத்திய உலகமயமாதல் நிகழ்ச்சி நிரல் தாராளமாக முன்னெடுக்கப்பட்டும் வந்துள்ளன. ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு லாபம் என்றவாறு சொந்த மக்களை இனமதமொழி வேற்றுமை காரணமான முரண்பாடுகளால் மோத வைத்து லாபமடைவதே அந்நிய ஆதிக்க சக்திகளின் நிலைப்பாடாகும். இதனை சிங்கள தமிழ் முஸ்லீம் மலையகத் தமிழ் ஏகப் பெரும்பான்மையான மக்கள் இனிமேலும் உணராமல் இருக்க முடியாது. குறிப்பாக ராஜபக்ஷ அரசாங்கத்தினதும் பேரினவாதிகளினதும் வெறித் தனத்துடன் யுத்த மயமாக்கும் பிரச்சாரங்களினால் திசைதிருப்பப்பட்டு நிற்கும் சாதாரண சிங்கள மக்கள் நன்கு உணரவேண்டும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# புதிய தடத்தில் பயணிக்க வேண்டிய இடதுசாரி இயக்கம்

~தயா~

**இடதுசாரிகள் இலங்கையின்** அரசியலில் காத்திரமான பங்கு வகித்த காலமொன்றிருந்தது. ஆகக் குறைந்தபட்சமாவது இடதுசாரி தன்மையுடன் இடதுசாரிகள் செயற்பட்ட காலமே அதுவாகும். ஊடகங்களில் இன்னும் இடதுசாரிகள் என்று அழைக்கப்படுபவர்களாக லங்கா சமசமாஜக்கட்சியினரும் ஸ்ரீ லங்கா கம்யூனிஸ்ட் கட்சியினரும் இருக்கின்றனர். அவ் விரண்டு கட்சிகளும் தலா இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்டிருப்பதுடன் ஐ.சு.ம. முன்னணி அரசாங் கத்தில் அமைச்சுப் பதவிகளையும் கொண்டுள்ளன. இவர்கள் நேரடியாக இனவாதத்தை பேசாவிட்டாலும் சிங்களப் பேரினவாத நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டவர்களாகவே செயற்படுகின்றனர். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் அரசாங்கத்தின் கொள்கைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதில் எவ்வித நிபந்தனையுமின்றி செயலாற்றி வருகின்றனர்.

அதேவேளை பாராளுமன்ற அரசியலுக்கு வெளியே பாராளுமன்றத்திற்குச் செல்லும் கனவுடன் நவசமசமாஜக்கட்சியும், ஐக்கிய சோஷலிசக் கட்சியும் செயற்படுகின்றனர். இந்த இரண்டு கட்சிகளின் மேடைகளில் எப்போதும் யாராவது ஒரு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் இருக்க வேண்டு மென்பதில் கூடிய கவனம் செலுத்தப்படுகிறது. இதைத்தவிர ஜனநாயக இடதுசாரி முன்னணிக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் எவருமில்லாவிடினும் அதுவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சாவின் அரசாங்கத்துடன் இணைந்தே செயற்படுகிறது.

மேலே கூறப்பட்ட பாராளுமன்றத்துக்கு உள்ளும் வெளியேயும் இருக்கும் பாராளுமன்ற அரசியலையே அடிப்படையாகக் கொண்டு செயற்படும் 'இடதுசாரி கட்சிகள்' எனப்படுபவைகள் டிரொஸ்கியவாதத்தையும் நவீன திரிபுவாதத்தையும் அடிப்படைச் சித்தாந்தமாக ஏற்றுக்கொண்டுள்ளன.

சமூக மாற்றம் தொடர்பாக எவ்வித அடிப்படை நிகழ்ச்சி நிரலோ, வேலைத்திட்டமோ, ஏகாதிபத்திய எதிர்ப்புச் செயற்திட்டமோ இல்லாமல் அவர்களின் இருப்பிற்கு வாய்ப்பான விடயங்களை முன்னெடுக்கும் பாராளுமன்ற அரசியலாகக் கொண்டவர்களாகவே இருந்து வருகிறார்கள்.

**ஐ.தே. கட்சி எதிர்ப்பு அரசியல்?**

1960 களிலும் 1970 களிலும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்துடன் இணைவதற்கு ஐ.தே. கட்சி எதிர்ப்பு என்ற கொள்கையை ல.ச சமாஜக்கட்சியும், ஸ்ரீ லங்கா கம்யூனிஸ்ட் கட்சியும் முன்வைத்தன. ஐ.தே கட்சி ஏகாதிபத்தியத்தை வெளிவெளியாக ஏற்றுக்கொள்கின்ற பெருமுதலாளித்துவ கட்சியாக இருந்தது. அதனை விட வித்தியாசமான தேசிய முதலாளித்துவ அம்சங்களைக் கொண்டதாக ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி இருந்தது. அதனால் 'இடதுசாரிகள்' அதன் தலைமையை ஏற்றுக்கொண்டு செயற்பட்டிருக்க வேண்டுமா? அவ்வாறு செயற்பட்டதனால் தான் முற்றாக இடதுசாரித்தன்மைகள் இழக்கப்பட்டன. இதன் மூலம் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு இடதுசாரிகள் துணைபோனார்கள் என்ற தீராத அவப்பெயரையும் பெற்றுக் கொண்டார்கள்.


1994 ற்கு பிறகு ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சிக்கு ஐ.தே. கட்சிக்கும் பொருளாதார கொள்கை வெளிவிவகார கொள்கை, தமிழ் மக்களுக்கெதிரான யுத்தம் என்பதில் இடைவெளிகள் மிகவும் குறுகியதாகின. இந்த நிலையிலும் தமது பாராளுமன்ற அரசியல் நிலைப்பாட்டை இறுகப் பற்றிக் கொள்வதற்கு ல.ச. சமாஜக்கட்சி கம்யூனிஸ்ட் கட்சி என்பன ஐ.தே. கட்சி எதிர்ப்பு என்ற காலவதியான அரசியலையே இன்றும் முன்னெடுக்கின்றன.

அதிகாரப்பங்கீடு பற்றி அதிகம் பேசினாலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிற்கு மேலாக சர்வகட்சி கூட்டத்தின் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு யோசனைகளை சர்வ கட்சி கூட்டங்களுக்கு தலைமை தாங்கும் ல.ச. சமசமாஜக் கட்சியின் அமைச்சர்கள் திஸ்ஸ வித்தாரணவாலோ, அரசியலமைப்பு இனவிவகார அமைச்சர் (கம்யூனிஸ்ட் கட்சி) டி. டபிள்யூ. குணசேகரவினாலோ முடியவில்லை. மாறாக கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக மஹிந்த அரசாங்கம் முன்னெடுத்து வரும் யுத்த நடவடிக்கைகளையை வெறுமனே பார்த்துக் கொண்டு சும்மா இருக்கின்றனர். பேரினவாதத்திற்கு தாங்கள் அடங்கி ஒடுங்கிப் போயிருப்பது போன்று தமிழ் மக்களும் இருக்க வேண்டுமென்ற விருப்பம் கொண்டவர்களாகவே இந்த இடதுசாரிகள் இருக்கின்றனர். அவர்களிடம் தேசிய இனப்பிரச்சினை பற்றிய மாக்சிச அணுகுமுறை என்பதும் துளியளவும் இல்லை என்பதையே அவர்களது நடைமுறை எடுத்துக் காட்டி வருகிறது.

**என்.ஜி.ஓ அரசியல்?**

பாராளுமன்ற அரசியலை அடிப்படையாகக் கொண்டு பாராளுமன்றத்திற்குள் செல்ல முடியாததால் அவர்களின் இருப்பிற்காக அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்தும் தனிநபர்களிடமிருந்தும் நிதியைப் பெற்று சமர்ப்பிக்கப்படும் திட்டங்களுக்கு ஏற்ப எதிர்ப்பு மறியல் போராட்டங்கள் கூட்டங்கள் கருத்தரங்குகள் செய்பவர்களாக சில (இடதுசாரிகள்) இருக்கின்றனர். நவசமாசமஜக்கட்சி, ஐக்கிய சோஷலிசக் கட்சி போன்றவற்றில் இருப்பவர்களை அந்தவகையில் சேர்க்கலாம்.

இடதுசாரி வேலைத்திட்டம் பற்றி பேசுகின்ற நவசமச மாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம். பிக்களை வைத்துக் கொண்டு அவரது நிகழ்ச்சிகளை அலங்கரிப்பார். இது அவ ரது தமிழ் மக்களின் போராட்டங்களுக்கு ஆதரவ ளிப்பது என்ற கடந்த 25 வருடங்களுக்கு மேலாக "பார்வையாளர்" அரசியலின் வெளிப்பாடாகும். சிங்கள மக்களின் பிரச்சினைகள் பற்றி எவ்வித அரசியல் போராட்டங்களுக்கும் தயாரில்லாது தமிழ் மக்களின் 'வெறும்' ஆதரவாளராக காட்டிக் கொள்வது அவரின் அரசியல் இயலாமையாகும். இது புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் மத்தியில் வீரராகக் காட்டிக் கொண்டு அவர்களின் கவனிப்பில் இருப்பைப் பாதுகாத்துக் கொள்ளும் ஒரு தந்திரோபாயமாகும். இந்த நிலைப்பாடு என்.ஜி. ஒக்களிடம் உதவி பெற்று அதன் செயற் திட்ட வேலைகளுக்குள் பணத்திற்காக முடங்குவதாகும். அரச சார்



இனப்பிரச்சினைக்குத் தீர்வு இன்றி ஏகாதிபத்திய உலகமயமாதல் எதிர்ப்பு இல்லாமல் இடதுசாரி அரசியலா?



பற்ற நிறுவனங்களின் செயற்திட்டங்களும்- பணத்திற்கும் அளவான எதிர்ப்புக்களையே இடையிடையே செய்ய முயலுகின்றனர்.

குறிப்பாக கடந்த பெப்ரவரி மாதம் கைதுசெய்யப்பட்டு "சிங்கள புலிகள்" என்ற பேரில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களுக்கு சட்ட உதவிகள் செய்வதென்ற பேரிலும் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் குடும்பங்களுக்கு உதவிசெய்வது என்ற பேரிலும் நவ சமசமாஜக்கட்சியினரின் தலையீடு பாரிய பிரச்சினைகளையும் சிக்கல்களையும் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் மத்தியில் ஏற்படுத்தி இருப்பதுடன் அக்கட்சியினர் மீதான நம்பிக்கையை மிகவும் மோசமாக கேள்விக்குட்படுத்தியுள்ளது. அவர்களின் சொந்த நலன்களுக்காகவும் இருப்பிற்காகவும் இவ்விடயத்தில் தலையிட்டுள்ளதாகவே அவர்களின் போட்டா போட்டியான போலியான நடவடிக்கைகள் வெளிப் படுத்துகின்றன. வழக்கின் நகர்வுகள் பற்றி தடுத்து வைக்கப் பட்டிருப்பவர்களையும் அவர்களது குடும்பத்தி னரையும் பிழையாக நடத்திவருகின்றனர். உண்மைக்கு மாறான விடயங்களைக் கூறி குழப்ப சூழ்நிலை யையே தோற்றுவித்து அந்த குழப்ப நிலையில் அரசியல் நடத்த முயலுகின் றனர். இது என்.ஜி.ஓ பணத்தில் கவரப்பட்ட வெட்கக்கேடான விடயமாகும். இதன் மூலம் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் தங்களது கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்கின்ற தந்திரோபாயமாகும். பாதிக்கப்பட்டுள்ள குடும்பங் களுக்கு நிதியுதவி செய்வதாகவும் வழக்கிற்காக சட்டத்தரணிக ளின் கட்டணத்தை செலுத்துவதாகக் கூறிக் கொண்டு உள் ளூரிலும் வெளியூரிலும் நிதிசேகரிப்பு நடவடிக்கைகள் இடம் பெறுவதாகவும் அறிய முடிகிறது.

மக்கள் மீது சொல்ல முடியாத சுமைகளைச் சுமத்தி இருக்கும் வரவு செலவு திட்டம் பற்றிய அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை விட 'சிங்களப்புலிகளின்' வழக்குக் நடவடிக்கைகளில் அவர்களின் போட்டி நடவடிக்கைகள் அதிகமாகவே இருக்கிறது. ஆனால் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரும் வெகுஜன அரசியல் நடவடிக்கைகளில் ஒன்றையாவது செய்யத்தயாரில்லை. ஏன்?

இன்னொரு புறம் கடத்தப்பட்டு காணாமல் போனோரை கண்டறியும் (C.I.D) என்.ஜி.ஓ. வேலை தொழிற்சங்க நடவடிக்கைகளை ஒதுக்கி விட்டு முன்னெடுத்து வருவதால் நவசமாஜக் கட்சியின் கட்டுப்பாட்டில் இருந்த தொழிற்சங்கங்கள் மிகவும் பலமிழந்துள்ளன.

ஐக்கிய சோஷலிசக்கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரியாவிற்கு காணாமல் போனோரைக் கண்டறிய குழு (CME) என்ற என்.ஜி.ஓ நடவடிக்கையுடன் பொழுது நன்கு போகிறது. அதில் முக்கியமானவர் ஐ. தே. கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசன். அவருடன் ஐ.தே கட்சி தலைவர்கள் கலந்து கொள்ளும் கூட்டங்களில் சிறிதுங்கவும் கலந்து கொள்கிறார். அவரும் பாராளுமன்றத்தை இலக்கு வைத்த அரசியலையே செய்துவருகிறார். அதனை என்.ஜி.ஓ. செயற்திட்டங்களுக்கூடாகவே செய்கிறார். மனோ கணேசனும் தனது இருப்பையே நோக்காகக் கொண்டு செயல்படுகிறார்.

இப்போது யுத்த எதிர்ப்பு இயக்கம் குமார் ரூபசிங்க என்ற பெரிய என்.ஜி.ஓ காரரிடம் சிக்கிக் கொண்டுள்ளது. மேற் குறித்த இடதுசாரிகள் எல்லோருமே அவரின் நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்ப யுத்தத்தை எதிர்க்கின்றனர். அவரும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்டும் "இடதுசாரி தலைவர்களைக்" கொண்டும் அவரது மேடையை அலங்கரிப்பார். என். ஜி.ஓ. நிகழ்ச்சிகள் வெளிநாட்டிலிருந்து கிடைக்கின்ற பணம் கொடுப்பவர்களின் விருப்பம், ஆலோசனை என்பவற்றின் அடிப்படையிலேயே முன்னெடுக்கப்படுகின்றன. அதில் வேலை செய்யும் பெரியவர்களுக்கு மில்லியன் கணக்கான ரூபாய்கள் மாதாந்த சம்பளமாகக் கிடைக்கின்றன. சாதாரண மட்டங்களில் வேலை செய்வர்களுக்கு அரசாங்க தனியார் துறை ஊழியர்களை விட அதிகமாகவே சம்பளம் கிடைக்கிறது. அவர்களின் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வோருக்கு சிறந்த உணவு உயர் இருப்பிட வசதி, போக்குவரத்து வசதிகள் கலந்து கொண்டதற்கான அலவன்ஸ் என்பன கிடைக்கின்றன. இந்நிலையில் மக்களின் தன்னிச்சையான பங்கெடுப்புடன் நடத்தப்பட்டுவந்த இடதுசாரி அரசியல் தொழிற்சங்க இயக்கம் சீரழிக்கப்பட்டுள்ளன. மக்களின் சமூக அக்கறை இடதுசாரி அரசியல் தியாகம் அர்ப்பணிப்பு என்பன வெளிநாட்டு என்.ஜி.ஓப் பணத்தினால் மழுங்கடிக்கப்பட்டுள்ளன. தொழிற்சங்கங்கள் அவற்றின் அங்கத்துவப்பணம் மக்களின் பங்களிப்பு போன்றவற்றுடன் மிகவும் ஆரோக்கியமாக செயற்பட்டு வந்த நிலைமை மாற்றப்பட்டு வெளிநாட்டு உதவி (என்.ஜீ.ஓ நிதியிலேயே தங்கி இருக்கின்றவாறு நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

"சுத்த பிராமணத்தனமாக" தனித்து நின்று உலகப்புரட்சி பற்றிப் பேசுகின்ற சோஷலிஸ சமத்துவக்கட்சி எல்லோரையும் விமர்சித்துக் கொண்டு அவற்றின் உலகத் தலைமைக் காரியாலயத்திலிருந்து பெறப்படும் நிதியில் செயற்படுகிறது. அது அதனது 'இணையத்தள' புரட்சி செய்கிறது.

ஆக ட்ரொஸ்கிசத்தை அடிப்படையாகக் கொண்டியங்கும் 'இடதுசாரி' அமைப்புகள் வெளிநாட்டு உதவிகளை (என். ஜி. ஓக்களை) தங்கி செயற்படுவனவாகவே இருக்கின்றன.

தொடர்ச்சி 10 ம் பக்கம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# சமூகமும் பண்பாடும் 19

பேராசிரியர் சி.சிவசேகரம்

## விளையாட்டும் பொழுது போக்கும்

விளையாட்டுக்களும் பொழுது போக்குக்கான நிகழ்ச்சிகளும் அடிமைச் சமுதாயங்களிலும் இருந்தன. அதற்கு முந்திய சமு தாயங்களிலும் பிந்தினவற்றிலும் தொடர்ந்தன. எனினும் தனி மனிதருக்கும் விளையாட்டுக்கும் இருந்து வந்துள்ள உறவும் விளையாட்டுக்களுக்குச் சமுதாயத்தில் இருந்து வந்துள்ள இடமும் சமுதாயங்களின் விருத்தியுடனும் மாற்றத்துடனும் மாறி வந்துள்ளன. பிற் காலங்களில் விளையாட்டுக்களாகக் காணப்பட்ட சில செயற்பாடுகள் முன்னைய ஒரு காலத்தில் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட காரியங்களாக இருந்துள் ளன. எவ்விதமாகப் பல்வேறு சமூகச் செயற்பாடுகள் சில சடங்குகளாகினவோ அவ்விதமாகவே தேவை கருதிய சில செயற்பாடுகள் காலப்போக்கில் விளையாட்டுக்களாகின. குறிப்பாக வீர விளையாட்டுக்கள் என்பனவற்றின் வேர்கள் போரிலும் தனிமனிதர்கட்கிடையிலான மோதல்களிலுமே தமது தோற்றுவாயைக் கொண்டிருந்தன.

ஏறுதழுவலையொத்த போட்டி கிரேக்க சமுதாயத்திலும் இருந்தது. இதன் வரலாற்றுத் தொடர்ச்சியாக மஞ்சுவிரட்டு தமிழகக் கிராமங்களில் நீண்ட காலமாக இருந்து வந்துள்ளது. மல்யுத்தம், சிலம்பம் போன்றனவ ஆசிய நாடுகளின் பல்வேறு பிரதேசங்களில் வேறுபட்ட வடிவங்களில் இருந்து வருகின்றன. ஆயுதப்பயிற்சிகளும் வீர விளையாட்டுக்களுடன் தொடர்புடையனவாகவே இருந்து வந்துள்ளன. மகா பாரதத்தில் பலவேறு நாட்டு அரசகுமாரர்களும் கலந்து கொண்ட வீர விளையாட்டுப்போட்டி பற்றிய ஒரு விரிவான படலம் உள்ளது. சுயம்வரங்களும் ஆண்களின் வீர விளையாட்டுப் போட்டிகளாக அல்லது ஆண்களின் உடல்வலு, ஆயுதங்களைக் கையாளும் ஆற்றல் ஆகியவற்றின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தன.

இவ்வாறான விளையாட்டுக்கள் வசதிபடைத்தோரும் அவர்களைச் சார்ந்தோருங் கண்டுகளிக்கும் நிகழ்ச்சிகளாகவே பெரும்பாலும் இருந்து வந்தாலும் நிலவுடைமைச் சமுதாயத்தின் கீழ்ப் பொதுமக்களுங் கண்டுகளிக்கக் கூடியவையாகவும் சமுதாயத்தின் கீழ் மட்டங்களிலும் நடத்தக் கூடியவையாக விரிவு பெற்றன.

இவற்றுக்குமப்பால் வசதி படைத்தவர்களும் அதிகாரத்திலுள்ளவர்களும் தமக்குக் களிப்பூட்டுவதற்காக விருத்தி செய்த விளையாட்டுக்கள் போல சாதாரண மக்கள் மத்தியிலும் விளையாட்டு வகைகள் இருந்து வந்துள்ளன. சிறுவயதினரது உடல் வளர்ச்சியிலும் மன வளர்ச்சியிலும் விளையாட்டுக்கள் ஒரு முக்கிய பங்கு வகித்தன.

எவ்வாறாயினும் விளையாட்டுக்களின் தோற்றத்தையும் வளர்ச் சியையும் ஆடுவோரையுங் கவனித்தால் அவை ஒவ்வொன்றிற்கும் சமூக, வர்க்க பால் அடையாளங்கள் இருப்பதை நாம் அடையாளங் காணலாம். நிலவுடைமை வர்க்க அடையாளமுடைய விளையாட்டுக்களிற் சில இன்று வசதிபடைத்த சிலருக்குரிய விளையாட்டுகளாக உள்ளன. வேறு சில சற்றுப் பரவலாகியுள்ளன. சில வழக்கொழிந்து விட்டன. விளையாட்டுக்கள் பலவற்றின் தோற்றுவாய் அன்றாட வாழ்வுடனும் தொழிலுடனும் தொடர்புடையனவாயிருந்தாலும் காலப்போக்கில் விளையாட்டுக்கள் தமக்கெனவே ஒரு இருப்பைப் பெற்றுள்ளன.

முதலாளியத்தின் வருகை விளையாட்டுக்களுக்கு ஒரு வணிகப் பெறுமதியையும் வழங்கியது. இதை விளங்கிக் கொள்ள வேண்டுமாயின் விளையாட்டுக்களின் புனிதப்படுத்தியதும் ஒரு கிரேக்க பண்பாட்டுச் சின்னமாக உருவானதுமான ஒலிம்பிக் போட்டிகள் மீளுருவாக்கப்பட்டு ஒரு உலக விளையாட்டுப் போட்டியாகிய பின்பு தேசிய அரசியல் மேலாதிக்க வல்லரசு அரசியல் போட்டிகளின் ஒரு களமாகிக் கடந்த இரண்டு தசாப்தங்களுக்குள் மிக மோசமான வணிக நோக்குடைய நிகழ்வாகச் சீரழிந்து போயுள்ளது. இது பிரபலமான சகல விளையாட்டுத் துறைகட்கும் பொருந்தும்.

கனவான்களின் விளையாட்டாக நீண்ட காலமாக இருந்து வந்த கிரிக்கட் இன்று ஒரு புறம் தேசியவாத, இனவாத உணர்வுகளை வெளிப்படுத்துகிற ஒரு களமாகவும் அனைத்திற்கும் மேலாகச் சூதாட்டத்திற்கு உட்பட்டு ஊழல்களும் குற்றச் செயல்களும் மலிந்த ஒரு துறையாகவும் மாறியுள்ளது.

உருவான தொடக்கக் காலங்களிலிருந்தே தொழிலாளி வர்க்கத்தின் விளையாட்டாக விருத்தி பெற்று வந்த காற்பந்தாட்டம் நீண்டகாலமாகவே சூதாட்டத்துடன் தொடர்புடையதாகி இன்று விளையாட்டு முடிவுகளையே சூதாட்டத் துறை தீர்மானிக்க முனைகிற அளவுக்குக் குதிரைப் பந்தயம் போலாகி விட்டது.

விளையாட்டுக்கள் இளவயதினரது உடல் வளர்ச்சி, மனவளர்ச்சி, சமூக உறவுகள் என்பனவற்றுக்கு ஒரு முக்கியமான பங்களிக்கக் கூடியன என்பதில் ஐயமில்லை. வியைாட்டுக்கள் போட்டியை மையமாகக் கொண்டனவாயினும் பல விளையாட்டுக்கள் கூட்டு முயற்சியை வேண்டி நிற்பன. பார்வையாளர்களின் ஊக்குவிப்பால் ஒரு சமூகப் பரிமாணத்தைப் பெறுகின்றன. சரியாகக் கையாளப்படுகிற போது வெற்றி தோல்விகளை நிதானமாக எதிர் கொள்ளுகிற மனப்பக்குவத்தை ஏற நிதானமாக எதிர் கொள்ளுகிற மனப்பக்குவத்தை ஏற் படுத்துகின்றன. இவ்வாறான ஒரு பண்பு முதலாளியத்தின் கீழும் நீண்ட காலமாக இருந்தது. அதிற் பல வேறு பட்ட குறைபாடுகள் இருந்த போதும் அது மாணவரின் பாடசாலைக் கல்வியிலும் உயர் கல்வி யிலும் ஒரு முக்கியமான பங்கை வசித் தது. எனினும் ஏகபோக முதலாளியமாக முதலாளியம் மாறி எல்லா வற்றையும் விற்பனைப் பண்டங்களாக்கி வருகி ன்ற ஒரு சூழலில் விளையாட்டுக்கள் ஒவ் வொன்றாக முதலாளிய லாப நோக்கிற்கும் வணிக நோக்கில் மனிதப் பல வீனங்களைப் பயன்படுத்துகிற ஒரு சுரண்டலாகவும் மாறி விட்டது. இன்று மின்னியல் ஊடகத் துறையின் விரு த்தி பெரும்பாலான மக்களுக்கு விளையாட்டுக்களைப் பார்த்துப் பொழுது போக்குகிற ஒரு விடயமாக்கி விட் டன.

கிரிக்கட் மட்டையை நேரிற் காணாத ஒருவரும் காற்பந்தை உதைத்தே அறியாத ஒருவரும் தொலைக்காட் சித்திரையில் வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருக்கும் அளவுக்கு விளையாட்டு எல்லாவற்றையும் விட முக்கியமாக ஒரு பொழுது போக்கு அம்சமாகிவிட்டது என்ப தை நாம் அனுபவத்தின் மூலம் அறிகிறோம். இதன் முக்கிய மான ஒரு விளைவு ஏதெனில் முன்னேறிய முதலாளிய நாடு களின் சிறு நகரங்களிலும் கிராமங்களிலும் ஊர் மக்கள் பார்வையாளர்களாக இருந்து ஆதரித்து ஊக்கு வித்த விளையாட்டுக் கழகங்களும் விளையாட்டுப் போட்டிகளும் விளையாட்டு வீரர்களும் அந்த ஆதரவுத் தளத்தை இழந்து வருகின்றனர். அதேவேளை இவ்வாறான நிகழ்வுகளுக்குச் செல

**விளையாட்டுக்கள் ஒவ்வொன்றிற்கும் சமூக வர்க்க பால் அடையாளங்கள் இருப்பதை அவதானிக்கலாம்**

வையாளர்களையும் சந்தித்துப் பேசி உறவாடும் வாய்ப்புக்கள் குறைகின்றன.

மாறாகப் பெரிய விளையாட்டு மன்றங்களின் பத்தாயிரக் கணக்கான அல்லது லட்சக்கணக்கான ஆதரவாளர்களிடையே ஒரு பகுதியினராகத் தம்மை அடையாளப்படுத்திக் கொண்டு வணிக நோக்கில் விளையாட்டுக்கழகம் உற்பத்தி செய்து விநி யோகிக்கிற பண்டங்களை மிகுந்த விலை கொடுத்து வாங்குகிறவர்களாகவும் கழகத்தின் விளையாட்டு நிகழ்ச்சிகட்குப் பெருந்தொகையான பணச்செலவில் நுழைவுச் சீட்டு வாங்கிப் பயணச் செலவுக்குட் பிற செலவுகட்காகவும் தாம் பாடுபட்டு உழைத்த பணத்தை வீணாக்குகிற மந்தை மனப்பான்மையுள்ள ஒரு சமூகப் பிரிவினரை நாம் காணுகிறோம். இக் கழகங்கள் பல இன்று அவை குறிக்கும் ஊர்கட்குச் சம்பந்தமற்ற முதலாளிமாரின் சில சமயங்களில் அந் நியர்களின் உடைமைகளாகியுள்ளன. விளையாட்டுக்களில் பங்கு பற்றுகிற அணியினர் ஒப்பந்தத்திற்காக விளையாடுகிற தொழில்சார் விளையாட்டு வீரர்களாக உள்ளனர். இது விளையாட்டு வீரரிடையே ஒரு வகையான கூலி

**இன்று பெரும்பாலான விளையாட்டுக்கள் வணிக மயமாக்கப் பட்டுள்ளன.**

ப்படை மன நிலையையே விருத்தி செய்கிறது. விளையாட்டு வீரர்களை ஆக்கவும் அழிக்கவுமான வல்லமை வணிக நிறுவனங்களதும் ஊடகங்களதும் கைக்குப் போய்ச் சேருகிறது.

விளையாட்டுக்கள் என்பன இன்று திரைப்படங்கள் போலவும் தொலைக்காட்சிகளில் வருகிற பல வேறு பயனற்ற பொழுது போக்கு நிகழ்ச்சிகளும் போலாகி விட்டன. விளையாட்டு வீரர் கள் நடிகர்கள் போலவும் பொழுது போக்கு நிகழ்ச்சிகளிற் பங்கேற்கும் பலவேறு பிரபலங்கள் போலவும் ஆகிவிட்டனர். அவர்களது அன்றாட வாழ்க்கை பற்றிய அரட்டைகளும் அவர்களுக்குத் தொடர்பில்லாதனவும் அனுபவமும் அறிவும் இல்லாதவுமான விடயங்களிற் கூட அவர்களது கருத்துக்களும் செய்திகளாகவும் சிறப்புக் கட்டுரைகளாகவும் கருத்துரைகளாகவுங் கூட வருகின்றன. ஊடகத்துறை வும் கருத்துரைகளாகவுங் கூட வருகின்றன. ஊடகத்துறை யின் சீரழிவு விளையாட்டுத் துறையின் சீரழிவுடன் தன்னை நெருக்கமாகப் பின்னிப்பிணைத்துக் கொண்டு விட்டது.

இந்த இடத்தில் 1970களில் சீனாவின் பூப்பந்தாட்ட (பட்மின்ற்றன்) மேசைப்பந்தாட்ட (ற்றேபிள் ற்றெனிஸ்) வீரர்கள் உலகின் தலை சிறந்த வீரர்களாக இருந்தனர். அவர்கள் பல நாடுகட்குப் பயணஞ் செய்து நட்பு அடிப்படையில் பல விளையாட்டுப் போட்டிகளிற் பங்கு பற்றினர். எதிரணியினருடன் நட்பாகப் பழகிய தோடு விளையாட்டு நுட்பங்களை அவர்களுடன் பகிர்ந்து கொண்டனர் என்ற தகவலைக் குறிப்பிடுவதுதகும். அப்போது அவர்களை வழியனுப்பிய சீனப் பிரதமர் ஜோ என்லாய் அவர்களுக்கு நினைவூட்டிய வியடம் ஏதெனில் "நட்பு க்கு முதலிடம் அதற்கு அடுத்த படியாகவே போட்டி" என்ப தாகும். புரட்சிக்குப் பிந்திய சீனாவில் விளையாட்டுப் பற்றிய அணுகுமுறை இவ்வாறானதாகவே 1980கள் வரை இருந்து வந்தது. இதன் காரணமாகவே சீன, அமெரிக்க உறவைப் புதுப்பிப்பதில் மேசைப்பந்து விளையாட்டு (பிங் பொங் என்று அழைக்கப்படுவது) வகித்த பங்கின் காரணமாக அது "பிங் பொங் ராஜ தந்திரம்" என்றும் குறிப்பிடப்பட்டது. கியூபாவின் விளையாட்டு வீரர்களது நடத்தையிலும் இவ்வாறு நட்புக்கு முதன்மை கொடுக்கிற பண்பு இருப்பது குறிப்பிடத்தக்கது.

போட்டி என்பது ஆரோக்கியமானதாகவும் பகைமையற்றதாகவும் இருக்க வேண்டும் என்பது ஒரு உயர்ந்த பண்பாட்டின் அடையாளம். அதை விளையாட்டின் தொடர்பாக நோக்குகிற போது சோஷலிஸத்தின் கீழ் மட்டுமே அப் பண்பாட்டு நெறியைப் பேண இயலுமாகிறது என்பதையும் முதலாளியம், குறிப்பாக உலகமயமாக்கல், விளையாட்டில் பண்பாட்டுச் சீரழிவைக் குறித்து நிற்கிறது என்றும் நாம் காணலாம்.

### புதிய தடத்தில்

9ம் பக்க தொடர்ச்சி

அரசியல் கட்சி மட்டத்தில் மட்டுமன்றி தொழிற்சங்க மட்டத்திலும் இதே நிலைமையே ஏற்பட்டுள்ளது.

சாதாரண ஜனநாயக வேலைத்திட்டத்துடன் ஐக்கியப்பட்டு அல்லது ஒருங்கிணைந்து செயற்பட முடியாத நிலையிலேயே இலங்கை இடதுசாரி தொழிற்சங்க அமைப்புகள் இருக்கின்றன.

மேற்கூறப்பட்ட இடதுசாரி அமைப்புக்களை விட அவற்றுக்கு மாறான அமைப்புகள் சிங்கள மக்கள் மத்தியில் சிறு சிறு அமைப்புகளாக இருக்கின்றன. அவைகள் வெகுஜனத்தளமின்றியும் வெகுஜன செயற்பாடுகளற்றும் இருக்கின்ற நிலையே உள்ளது.

**மாற்று அரசியல்**

யுத்த அழிவுகள் அதிகரித்துக் கொண்டு போகிறது. வாழ்க்கை செலவு மக்களுக்கு தாங்க முடியாததாக இருக்கிறது. இதனை அடிப்படையாக கொண்டு அவசியமான ஆகக்குறைந்த ஜனநாயக வேலைத்திட்டத்துடன் மாற்று அரசியலை முன்னெடுப்பதற்கான கலந்துரையாடலில் ஈடுபடுவதில் கூட அக்கறையற்றவர்களாகவே 'இடதுசாரிகள்' இருக்கின்றனர். மேற்படி விமர்சனங்களுக்கு இலக்காகாமல் செயற்பட்டுக் கொண்டிருப்பது புதிய- ஜனநாயக கட்சி மட்டுமேயாகும்.

பாராளுமன்ற வாதம் தொழிற்சங்கவாதம், என்.ஜி.ஓ வில் தங்கியிருக்கின்றமை போன்றவற்றுக்கு உட்படாமல் பேரினவாத சக்திகளிடமோ முதலாளித்துவ சக்திகளிடமோ சரணடையாமல் வெகுஜன அரசியலை கடுமையான சவால்கள் மத்தியில் புரட்சிகர அடித்தளத்துடன் முன்னெடுத்து வருகிறது. தற்போதைய யுத்த பாசிச ஆளுகைக்கு எதிராக மக்களை அணிதிரட்டி பரந்துபட்ட தளத்தில் இடதுசாரிகளும் ஜனநாயக சக்திகளும் வேலை செய்வது அவசியமாகும். என்பதை வலியுறுத்தியும் வருகிறது. அதற்கான கலந்துரையாடல்கள் அவசியமாகின்றன. அதற்கு 'இடதுசாரிகள்' எனப்படுவோர் அவர்களின் தற்போதைய பாராளுமன்ற- என்.ஜி.ஓ பிடிகளிலிருந்து விடுபட வேண்டும். அப்பிடிகளுக்குள் இருந்து கொண்டு வெகுஜன அரசியலை முன்னெடுக்க முடியாது. இரண்டு பேரினவாத முதலாளித்துவ கட்சிகளினது ஆதிக்கத்திற்கு எதிராகவும் நாட்டை அழித்துக் கொண்டிருக்கும் இனவாதத்திற்கு எதிராகவும் மாற்று அரசியலை முன்னெடுப்பதற்கு முறையான இடதுசாரி, ஜனநாயக சக்திகளின் அரசியல் பொது வேலைத் திட்டமும் ஐக்கியப்பட்ட செயற்பாடுகளும் அவசியம் என்பதையே புதிய- ஜனநாயகக்கட்சி வற்புறுத்தி வருகின்றது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# வால் மார்ட்: அமெரிக்க நச்சுக்கிருமி

**ஏகாதிபத்தியங்கள் பல இருந்தாலும்** அவற்றின் தலைவனாகவும் மேலாதிக்க சக்தியாகவும் அமெரிக்கா இருப்பதைப் போல சில்லறை வணிகத்தில் பல பன்னாட்டு நிறுவனங்கள் ஈடுபட்டிருந்தாலும் **வால்மார்ட்** அவை அனைத்துக்கும் மேலான ஒரு பயங்கரமான அழிவுச் சக்தி. அமெரிக்க இராணுவம் நடத்தும் ஆக்கிரமிப்புப் போருக்கும் வால்மார்ட் தொடுக்கும் வர்த்தகப் போருக்கும் பெரிய வேறுபாடு கிடையாது- துப்பாக்கி ஒன்றைத் தவிர.

மலிவு விலை- என்பதுதான் மக்களை வீழ்த்த வால்மார்ட் ஏந்தியிருக்கும் ஆயுதம். இந்த ஆயுதத்தின் மூலம் உலக மக்களின் உணவு, உடை, பழக்க வழக்கங்கள், பண்பாடு முதல் அவர்களுடைய அரசியல் கருத்துக்கள் வரை அனைத்தையும் மாற்றுகிறது வார்மார்ட் என்ற அமெரிக்க ராட்சத வணிக நிறுவணம். நுகர்தலே மகிழ்ச்சி, நுகர்தலே வாழ்க்கை, நுகர்தலே இலட்சியம் என்று அமெரிக்க சமூகத்தையே வளைத்து வசப்படு த்தி வைத்திருக்கிறது வால்மார்ட். அதற்குப் பலியான அமெரிக்க மக்கள். தம் இரத்தத்தில் ஊறி சிந்தனையையும் செரித்து விட்ட வால்மார்ட் எனும் இந்த நச்சுக் கிருமியிடமிருந்து விடுபட முடியாமல் போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

இரண்டாம் உலகப்போரில் உளவுத்துறை அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்ற சாம் வால்டன் என்பர் அமெரிக்காவின் அர்கன்ஸாஸ் மாநிலத்தின் ரோஜர்ஸில் வாங்கிய தள்ளுபடி விற்பனைக் கடை தான் வால்மார்ட். துவக்க காலத்தில் மற்ற பலசரக்குக் கடைகளில் விற்கப்படாத மிக மலிவான பொருட்களும் மற்ற கடைகளில் விற்கப்படும் பொருட்களை சந்தை விலையை விட மலிவாகவும் விற்றது வால்மார்ட்.

உறுதியாக நட்டம் விளைவிக்கக் கூடிய இந்த வியாபார உத்தியை மேற்கொள்ள சாம்வால்டன் இரண்டு வழிமுறைகளை கையாண்டார். ஒன்று ஊழியர்களுக்கு மிகக் குறைந்த சம்பளம். இரண்டாவது உற்பத்தியாளர்களிடம் குறைவான விலையில் சரக்கெடுப்பது. இந்தக் கொள்கைகள் காரணமாக வால்மார்ட்டின் வளர்ச்சி மெதுவாக இருப்பினும் 1969-ம் ஆண்டுக்குள் 31 மில்லியன் டாலர் ஆண்டு வருமானத்துடன் தன் முதல் கடைக்கு 200 மைல் சுற்றளவிற்குள்ளாகவே 32 கடைகளைத் திறந்தார் சாம்வால்டன். அதன் பின் கிரிமினல் வங்கிகள் இரண்டினதும் பங்குச் சந்தையினதும் குறுக்கு வழிப் பணத்துடனும் தனது வர்த்தக சாம்பிராச்சியத்தை விரிவாக்கியது.

**உலகமயமாக்கலில் வால்மார்ட்டின் அசுர வளர்ச்சி**

தகவல் தொழில்நுட்பப் புரட்சியைத் தொடர்ந்து அத்துறையில் கொள்ளை இலாபமீட்டுவதற்கான வாய்ப்பு இருப்பதை உணர்ந்து கொண்ட அமெரிக்க முதலாளிகள் தம் மூலதனத்தை உற்பத்தித் துறையிலிருந்து அதற்கு மாற்றினர். அமெரிக்கச் சந்தைக்குத் தேவையான நுகர்பொருட்களை மலிவான ஊதியத்தில் உற்பத்தி செய்து தரும் ஏழை நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் போக்கு அதிகரித்தது. பல அமெரிக்க உற்பத்தித் தொழில்கள் அழிந்தன. தொழிலாளர்கள் வேலையிழந்தனர். ஏழை நாடுகளின் கொத்தடிமைக் கூடாரங்களில் உருவாக்கப்படும் மலிவு விலை பொருட்களை நுகரும் சமூகமாக அமெரிக்கா மாறியது. இத்தகைய பொருட்களை அமெரிக்காவெங்கும் விற்பனை செய்யும் ஒரு பிரமாண்டமான நிறுவனமாக வால்மார்ட் உருவாகியிருந்தது. அமெரிக்காவின் மற்ற உற்பத்தியாளர்களும் பெருவணிகர்களும் வால்மார்டின் குறைந்த விலை கொள்முதலுக்கு அடிபணியாவிட்டால் அழிந்து விடக்கூடிய நிலைக்கு அமெரிக்காவின் பல தொழில்களை மாற்றியிருந்தது வால் மார்ட், வால்மார்ட்டை உலகமயமாக்கலின் சிறந்த ஆயுதமாகக் கண்டு கொண்ட அமெரிக்க பங்குச் சந்தை வால்மார்ட்டிற்கு பணத்தை வாரியிறைத்தது. வால்மார்ட் வெறித்தனமாக வளர்ந்தது.

1990-ல் மெக்ஸிகோவில் ஒரே ஒரு கடை மட்டும் திறந்திருந்த வால் மார்ட் இன்று அர்ஜென்டினா, பிரேசில், கனடா, கோஸ்டாரிகா, சீனா, எல்சால் வடோர், ஜெர்மனி, குவாதிமாலா, ஹோண்டு ராஸ், ஜப்பான், மெக்ஸிகோ, நிகுராகுவா, போர்டோரிகோ மற்றும் பிரிட்டன் முதலிய நாடுகளில் 2700 கடைகளைத் திறந்திருக்கிறது. பலநாடுகளில் சில்லறை வணிகத்தில் முதல் இடத்தில் இருக்கிறது.

**வளர்ச்சியின் மர்மம்**

வால்மார்டின் இந்த அசுரத்தனமான வளர்ச்சிக்கும் அமெரிக்க ஏக போகங்கள் ஏழை நாடுகளை தனியார் மயம், தாராளமயம், உலகமயம் கொண்டு அழித்து வருவதற்குமான உறவு தற்செயலானதல்ல. இத்தனை ஆயிரம் கடைகளைக் கட்டத் தேவையான பல லட்சம் கோடி டாலர்கள். வரிச்சலுகைகளாகவும், இன்றைய தேதியில் வால்மார்டின் கடன் எத்தனை லட்சம் கோடி என்று வெளியே தெரியாத அளவிற்கு கடன் பத்திரங்களாகவும் உலகின் முன்னணி வங்கிகள், மியூச்சுவல் ஃபண்ட் மற்றும் காப்பீடு நிறுவனங்களின் ஆண்டறிக்கைகளில் மறைந்துள்ளன.

இந்த வால்மார்ட் சாம்ராஜ்ஜியம் உலகம் முழுவதிலிருந்து உறிஞ்சும் பல லட்சம் கோடி டாலர்களும் நிறுவனத்தின் பங்குகளில் மூன்றில் ஒரு பகுதிக்கு மேல் வைத்திருக்கும் சாம் வால்டனின் குடும்பத்தின் வயிற்றுக்குள் செல்கிறது. லாப ஈவுத்தொகை (Dividend) மூலமாக மட்டும் ஆண்டுக்கு 5 பில்லியன் டாலர்களைக் கொள்ளையடிக்கும் சாம் வால்டன் குடும்பத்தினர் அமெரிக்காவின் முதல் 10 பணக்காரர்களின் வரிசையில் 5 முதல் 9 இடம் வரை நிரம்பியுள்ளனர். இவர்களின் சொத்து மதிப் பைக் கூட்டினால் உலகின் நிரந்தரப் பணக்காரக் குடும்பமே இவர்கள் தான்.

உலக அரசியலின் படுபிற்போக்கு சக்திகளான புஷ், டிக் செனி வகையறாக்களுக்கு சாம் வால்டன் குடும்பம்தான் நிரந்தரப் புரவலர்கள். அமெரிக்காவில் கல்வியை முற்றிலுமாகத் தனியார்மயமாக்குவதற்குத் தீவிரமாக முயலும் கும்பல்களுக்கும் தலையாய புரவலராக இருப்பதுடன், பின்தங்கிய நாடுகளை அதன் பிடியில் வைத்திருக்கும் பல அரசு சாரா நிறுவனங்களையும் வால்டன் குடும்பம் பராமரித்து வருகிறது.

உலகமயமாக்கல் கொள்ளைக்காகத் திட்டமிட்டே வளர்க்கப்பட்ட வால்மார்ட் இன்று 6100 கடைகள் 18 லட்சம் ஊழியர்கள், ஆண்டு விற்பனை 312.4 பில்லியன், லாபம் மட்டும் 11.2 பில்லியன் என உலகத்தின் மிகப் பெரிய கம்பெனியாகியுள்ளது. 42 மணி நேரத்திற்கு ஒரு புதிய கடை எனத் திறந்த வண்ணம் உள்ளது. வால்மார்ட் ஒரு நாடாக இருந்திருந்தால் உலகின் 21-வது பணக்கார நாடாக இருந்திருக்கும். இதன் ஆண்டு வருமானம் பல ஏழை நாடுகளின் வருமானத்தை விடவும் அதிகம்.

**ஏகபோகத்தின் வீச்சு**

வாரத்திற்கு 10 கோடி அமெரிக்கர்கள் வால்மார்ட்டின் கடைகளில் பொருட்கள் வாங்குகின்றனர்.

அமெரிக்காவின் மொத்த பலசரக்கு மற்றும் உணவுப் பொருட்கள் விற்பனையில் 35% மொத்த மருந்து மாத்திரை சந்தையில் 25% வீட்டு உபயோகப் பொருட்கள், சோப்பு, ஷாம்பு போன்றவைகளில் ஏறத்தாழ 40% ஆடியோ- வீடியோ விற்பனையில் 25% என்று அமெரிக்கச் சந்தையையே தனது கோரப்பிடிக்குள் கைப்பற்றி வைத்திருக்கிறது வால்மார்ட்.

அமெரிக்காவின் மிகப்பெரிய செய்தித் தாள் விற்பனையாளரும் வால்மார்ட் தான். வெளிவரும் பத்திரிகைகளில் ஏறத்தாழ 20% வால்மார்ட் மூலம் விற்பனையாகிறது. அமெரிக்கச் சந்தையில் இப்படியென்றால் மெக்ஸிகோ போன்ற நாடுகளின் மொத்தச் சந்தையில் 50% வால் மார்ட்டின் கையில் இருக்கிறது.

இத்தகைய ஏகபோகத்தின் மூலம் உற்பத்தியாளர்களைத் தன்னை அண்டிப் பிழைக்கும் அடிமைகளாகவே மாற்றியிருக்கிறது வால்மார்ட், தன்னுடன் வர்த்தகம் செய்யும் பன்னாட்டு நிறுவனங்களையே ஆட்டிப் படைக்கிறது.

**கார்மேகம்**

# வாழ்வின் சிக்கல்களை அருளுரைகள் தீர்க்காது!

**ஆன்மீகமோ அதன் காரணங்களை** அறியக்கூடாது என்பதில் தான் குறியாயிருக்கிறது. விதியும். வினைப்பயனும், மரணத்துக்குப் பிந்தைய சொர்க்கமும் நிகழ்காலத் துயரங்களுக்காக மதம் கட்டியமைத்த கற்பனையான எதிர்காலங்கள். கூடவே விதிக்கப்பட்ட வாழ்வை அல்லது அடிமைத்தனத்தைச் சகித்துக் கொள்வதற்கு மட்டுமின்றி அதனை ஆன்மீக ருசியுடன் இரசிப்பதற்கும் நவீன சாமியார்கள் கற்றுத் தருகிறார்கள். பக்தர்கள் தமக்குக் கிடைத்த வாழ்க்கையை இனிமையாக வாழுவதற்கு சாமியார்கள் தேனொழுகப் பேசுவதெல்லாம் ஆளும் வர்க்கம் அடக்கப்படும் வர்க்கத்திற்குச் செய்யும் உபதேசமேயன்றி வேறல்ல.

ஏற்றத்தாழ்வான அநீதியான இந்தச் சமூக அமைப்பே மனிதர்களின் துன்ப துயரங்களுக்கு அடிப்படையாக அமைகின்றது. இந்த அமைப்பை மாற்றாத வரை துயரங்களுக்கும் விடிவில்லை. ஆன்மீகவாதிகளோ இதற்கு நேரெதிராக நிலவும் சமூக அமைப்பைத் தக்க வைப்பதில்தான் கருத்தாயிருக்கிறார்கள். அதனாலேயே தனி மனிதனின் வாழ்க்கைச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு வக்கற்றும் இருக்கிறார்கள்.

தங்களுக்கு வரும் கோடிக்கணக்கான நன்கொடைப் பணம் எத்தகைய வழிகளில் சம்பாதிக்கப்பட்டது என்பது குறித்து அவர்களுக்குக் கவலையில்லை. ஒருவேளை "நேர்மையற்ற முறையில் வரும் பணத்தையும் கருப்புப் பணத்தையும் ஏற்கமாட்டோம்." என்று அவர்கள் அறிவித்தால் அடுத்த கணமே தெருவுக்கு வந்துவிடுவார்கள். ஆன்மீக நிறுவனங்கள் உயிர்வாழ்வதன் அச்சாணியே இதுதானென்றால் தனி மனிதனின் நன்னடத்தைக்கும் நிம்மதிக்கும் எப்படி வழிகாட்ட முடியும்?

பங்குச் சந்தையில் சில சமயம் இலாபமடையும் நடுத்தர வர்க்கம் பல நேரங்களில் இந்தச் சூதாட்டத்தில் சில இலட்சங்களையும் கூடவே நிம்மதியையும் இழக்கிறது. இவர்களுக்கு சாமியார்கள் என்ன தீர்வு தர முடியும்? "பங்குச் சந்தை என்பது சூதாட்டம் அதில் முதலீடு செய்யாதீர்கள் என்று சாமியார்கள் கூறுவதில்லையே!" "பேராசைப் படாதீர்கள் சிறிய அளவு இலாபத்துடன் திருப்தி அடையுங்கள். முதலீடு செய்யும் போது சற்று எச்சரிக்கையாக இருங்கள்" என்றுதானே உபதேசிக்கிறா ர்கள்?

தற்போது துணை நடிகை பத்மாவின் பாலியல் லீலைகளை பத்திரிகைகள் பக்கம் பக்கமாக நாறடிக்கின்றன. இவரைப் போன்ற விளம்பர உலகில் இருக்கும் பெண்களுக்கு சாமியார்கள் என்ன நிம்மதியைத் தந்தவிட முடியும்? துகிலுரிந்து தோலைக் காண்பிப்பதையே தொழிலாகக் கொண்டிருக்கும் இவர்கள் இத்தொழிலை தலை முழுகினால் மட்டுமே நிம்மதி பெற முடியும் என சாமியார்கள் வழிகாட்டுவதில்லை. மாறாக பல திரை உலக நடிகர்களைப் பக்தர்களாகப் பெற்று தமது விளம்பரத்திற்குப் பன்படுத்திக் கொள்கிறார்கள்.

தற்போது தகவல் தொழில்நுட்பத் துறையில் பணியாற்றுபவர்கள் மற்ற பிரிவினரைவிட ஊதியம் அதிகம் பெறுவதோடு ஊக்கத் தொகையாக பிரச் சினைகளையும் கணிசமாகப் பெறுகின்றனர். இரவுப் பணி, முடிவற்ற வேலை ப்பளு இரக்கமற்ற பணி யிறக்கம், வேலை நீக்கம், பண்பாட்டுச் சீர்கேடுகள், நுகர்வு வெறி, தனி நபர் வாதம், வாழ்க்கை உறவுகள் நசிந்துப் போதல் முதலி யனவற்றால் அல்லலுறும் இவர்களுக்கும் தேவைப்படும் தீர்வெ ன்ன? ஒரு துடிப்பான தொழிற்சங்கத்தைக் கட்டியமைத்தால் குறைந்த பட்சமாகப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டு சுய மரியாதையுடன் பணியாற்றும் சூழலை உருவாக்கிக் கொள்ளலாம். ஊழியர்களை எந்திரம் போலத் தேய்த்து வரும் முதலாளிகளை அடக்கியும் வைக்கலாம்.

ஆயினும் இந்தத் தீர்வை எந்தச் சாமியாரும் தர இயலாது. மாறாக ஊழியர்களின் இறுக்கத்தைத் தளர்த்துவதற்காக கேளிக்கைகளுக்கு ஏற்பாடு செய்யும் முதலாளிகள் சாமியர்களை வைத்து யோகா ஆன்மீக வகுப்புக்களையும் நடத்துகின்றனர். மொத்தத்தில் கேளிக்கை என்ற மதுவை ஊட்டி, ஆன்மீகம் எனும் அடிமைத்தனம் கற்றுத்தரப்படுகிறது. தொழிற்சங்கத்தைக் கட்டாமல் இருக்க அடியாட்களை நியமிக்கும் 'அநாகரிகம்' தேவைப்படாமல் தற்போது அந்தப் பணியினை ஆன்மீகவாதிகளை வைத்தே முடித்துக் கொள்கிறார்கள் முதலாளிகள்.

**அம்பலமானாலும் ஆன்மீக அடியாட்கள் வீழ்வதில்லை!**

அதனால் சாமியார்கள் எவ்வளவுதான் அம்பலப்பட்டுப் போனாலும் ஆளும் வர்க்கம் அவர்களைக் கைவிடுவதில்லை. ஜெயேந்திரனின் வண்டவாளங்கள் சந்தி சிரித்த பின்னும் ஊடகங்கள் அவரை சங்கராச்சாரியார் என்று மரியாதையுடன் தான் அழைக்கின்றன. சீடர்களை பாலியல் உறவு கொள்ளச் சொல்லி ரசித்துப் பார்ப்பதைப் பொழுதுபோக்காகக் கொண்ட ரஜனீஷ் அமெரிக்கா சென்று ரோல்ஸ்ராய்ஸ் காரில் சென்றால் சமாதி நிலை அடைவதாக 96 கார்களை வாங்கிக் குவித்தார். வரி ஏய்ப்பு, இதர மோசடிகளுக்காக அங்கிருந்து நாடு கடத்தப்பட்டு மீண்டும் இந்தியா வந்து செத்துப்போன ரஜனீஷின் அருளுரைகள் இன்றும் தமிழில் வெற்றிகரமாக விற்கப்படுகின்றன.

சாயிபாபா குழந்தைகளையும் இளைஞர்களையும் பாலியல் உறவுக்குப் பயன்படுத்தும் வக்கிரம் கொண்டவர் என்பதை இங்கிலாந்தின் டெய்லி டெலிகிராப் பத்திரிகையும் ஒரு ஆவணப்படத்தின் மூலம் டென்மார்க் அரசுத் தொலைக்காட்சியும் அம்பலப்படுத்தியிருக்கின்றன. இதன் பொருட்டே ஐ.நா. சபை சாயிபாபா ஆசிரமத்துடன் சேர்ந்து செய்ய விருந்த நலப்பணித் திட்டங்களை ரத்து செய்தது. புட்டபர்த்தியில் பல பாலியல் வக்கிரக் கொலைகளும் நடந்திருக்கின்றன. ஆனாலும் சாயிபாபா இந்திய ஊடகங்களால் இன்று பூஜிக்கப்படுகிறார். முன்னாள் அரசவைக் கோமாளி அப்துல் கலாம் பாபாவின் பிறந்த நாளில் கலந்து கொள்கிறார். ஐ.நா.செயலர் பதவிக்குப் போட்டியிட்ட சசி தரூர் பாபாவின் மஜிக்



**தொழிலதிபர்களே துறவிகளாக! அடிமைத்தனமே ஆன்மீகமாக!**

மோசடிகளை அற்புதங்கள் என்று புகழ்கிறார். கருணாநிதி தன் மனைவியை பாபாவின் காலில் விழச் செய்கிறார்.

மருத்துவக் கல்லூரி நுளைவுக்கு தலா 40 இலட்சம் வாங்கும் அமிர்தானந்தமாயியின் காலில் அத்வானியும் மத்திய அமைச்சர் அந்தோனியும் விழுகிறார்கள். மாயியின் வருமான வரி ஏய்ப்புக்கு அரசே வழி செய்கிறது. வேறெங்கும் வரிசையில் நிற்க விரும்பாத பணக்காரர்கள் மாயியின் 'கட்டிப்பிடி' ஆன்மீகத்திற்காக நீண்ட வரிசையில் நிற்கிறார்கள்.

விதர்பா பகுதியில் கொத்தாக விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளுவதற்குக் காரணம் அவர்கள் படிப்பறிவற்றவர்கள் என்று திமிராகப் பேசும் ரவி சங்கரை தகவல் தொழில் நுட்ப யுகத்தின் குரு என்று பத்திரிக்கைகள் செல்லமாக அழைக்கின் றன.

அயோத்திப் பிரச்சினையில் ஆர்.எஸ். எஸ்ஸுடன் இணைந்து நின்ற ராம்விலாஸ் வேதாந்தி, பைலட்பாபா, கீர்த்தி மஹாராஜ் முதலான சாமியார்கள் கமிஷன் வாங்கிக் கொண்டு பலகோடி ரூபாய் கருப்புப் பணத்தைக் வெள்ளைப் பணமாக மாற்றித் தரும் மோசடியை சி.என்.என் - ஐ.பி.என். தொலைக்காட்சி கையும் களவுமாக அம்பலப்படுத்தியது. ஆயினும் சங்கபரிவாரங்கள் இச் சாமியார்களைக் கைவிடவில்லை.

அம்பலமாகும் சாமியார்கள் அவ்வளவு சீக்கிரம் நீர்த்துப் போவதில்லை. ஒரு வேளை இவர்கள் செல்வாக்கிழந்தாலும் புதிய சாமியார்கள் களமிறக்கப்படுவார்கள். எல்லா இன்ப ங்களையும் காசு கொடுத்துத் துய்க்கும் நடுத்தர வர்க்கம் ஆன்மீகத்தையும் அப்படி நுகர்வதற்குப் பழக்கி விடப்பட்டிருப்பதால் அருளாசி வழங்க நமட்டுச் சிரிப்புடன் எப்போதும் காத்துக் கொண்யடிருக்கிறார்கள் நவீன சாமியார்கள். **முற்றும்**

**நன்றி : புதிய கலாச்சாரம் செப் 2007** **இளநம்பி**

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# இனத்துவ அரசியலின் தொடக்கங்கள்

## இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு

இமயவரம்பன் 5

**தொழிலாளி வர்க்க உணர்வு** தானாகவே சமூக நீதிக்கும் சமூக மாற்றத்திற்குமான அரசியலாக வேண்டியதில்லை. அதை இயலுமாக்க வர்க்க உணர்வு வர்க்கச் சிந்தனையாக விருத்தி பெற வேண்டும். அதை விடத், தொழில் வளர்ச்சி பின்தங்கிய கொலனிய நாடுகளில் நவீன உற்பத்தியுடன் பழக்கப்பட்ட தொழிலாளி வர்க்கம் சிறுபான்மையாகவே இருந்தது. இலங்கையின் தோட்டத்தொழிலாளர் போல மிகவும் பின்தங்கிய பொருளியல் நிலைக்குட்பட்ட உழைப்பாளிகள் சமூகத்தின் உற்பத்தி உறவுகள் பொருளியலில் முதலாளிய முறையில் அதாவது உழைப்பாற்றலுக்குரிய ஊதியம், என்று இருந்தாலும் பெருந்தோட்டத் துறையின் நிருவாக அதிகாரக் கட்டமைப்பில் நிலவுடைமைச் சமுதாயப் பண்புகள் கணிசமான பங்கு வகித்தன. தோட்டத்தொழிலாளர் தென்னிந்தியக் கிராமங்களிலிருந்து கொண்டுவரப்பட்ட கொத்தடிமைகளாகவே நடத்தப்பட்டனர். அதற்கமைய கங்காணிமுறை சாதி ஏற்றத்தாழ்வுகள், நிலவுடைமைச் சமூகத்திற்குரிய எசமான விசுவாசம் போன்ற பண்புகளும் சேர்ந்து மலையகத் தொழிலாளர் போராட்டச் சக்தியாக வளரத் தடையாயிருந்தன.

எனவே தொழிலாளர் இயக்கம் விருத்தி பெற்று வந்த போதும் அதனாற் தொழிற்சங்க அரசியலின் வரையறைகட்கு அப்பால் வர்க்கப்போராட்ட அரசியலாக அரசியல் அதிகாரத்திற்கான எழுச்சியை நோக்கி வளரக்கூடிய சூழல் உருவாகியிருக்கவில்லை. அதை இயலுமாக்கக் கூடிய அரசியற் சிந்தனை வேர் கொள்ளத் தொடங்கவுமில்லை.

எழுச்சி பெற்று வந்த நிலவுடைமை முதலாளி வர்க்கம் தனது நலன்களைப் பேணுவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தது. தென்னாசிய நிலவுடைமைச் சமுதாயத்தின் ஒரு முக்கியமான கூறாக இருந்து வந்த சாதி உணர்வின் விருத்திக்கும் தடையாகவே இருந்தது. சாதிகளாகத் தனித்தனியே அடையாளப்பட்டிருந்த சிங்களச் சமூகத்தினரிடையே கொவிகம (வேளாளரை ஒத்த சாதியினர்) கராவே (கரையார் சமூகத்தை ஒத்த சாதியினர்) சாதிகளிடையே சட்டவாக்கற் சபையில் இடம் பிடிப்பதற்கான போட்டி உருவான தற்குக் காரணம், கராவே சமூகத்தினரிடையே வணிகத் துறையில் பணஞ்சம்பாதித்த ஒரு முதலாளி வர்க்கமும் தமக்குக் கிடைத்த கல்வி வாய்ப்பைப் பயன்படுத்திச் சட்டம், மருத்துவம் போன்ற துறைகளில் முன்னுக்கு வந்தவர்களின் உருவாக்கம் எனலாம். எனவே அவர்கள் தங்களைச் சிங்கள மக்களின் பிரதிநிதிகளாகக் கொலனி ஆட்சி ஏற்க வேண்டும் என்பதில் மட்டுமில்லாமல் தாங்கள் கொவிகம சாதியினரை விட உயர்வானவர்கள் என்று வற்புறுத்துவதிலும் முனைப்பாக இருந்தனர்.

இதைவிடக் கண்டிய அதாவது மலைநாட்டுச் சிங்களவரிடையே இருந்த அதி உயர் வர்க்கத்தினர். கண்டி இராச்சியத்தின் மந்திரி பிரதானிகளதும் பிரதேச அதிகாரிகளதும் வம்சத்தினராகக் கருதப்பட்டவர்கள். அவர்கள் தம்மை 'ரதல' என்று அழைத்துக் கொண்டனர். அவர்களே பழைய கண்டி இராச்சியப் பகுதியின் பெரும் நிலவுடைமையாளர்களாகவும் பெரிய பவுத்த கோவில்களின் அறங்காவலர்களாகவும் இருந்து வந்தனர். அவர்களது சிந்தனையின் பாதிப்பு கண்டிய உயர் நடுத்தர வர்க்கத்தினரிடையே வலுவாக இருந்தது. ஒரு புறம் கரையோரப் பகுதிகளை விடப் பின்தங்கிய நிலையிலேயே கண்டியக் கிராமிய சமூகம் இருந்தது. மறுபுறம் கண்டிய மேட்டுக்குடியினர் தம்மை ஆங்கிலேயருக்கு அடுத்த படியில் இருந்தோராகக் கருதினர். எனவே கொவிகம சமூகத்தினரிடையிலும் கண்டியச் சிங்களவர் கரையோரச் சிங்களவர் என்ற பாகுபாடு வலுவாகவே இருந்தது.

சனத்தொகைக் கணிப்பீடுகளில் கண்டியச் சிங்களவரையும் கரையோரச் சிங்களவரையும் வெவ்வேறாகக் கணக்கிடும் வழமை இலங்கையின் சுதந்திரத்தின் பின்னரே, சிங்களத் தேசியவாதம் வலுப்பெற்ற நிலையிலேயே முற்றாகக் கைவிடப்பட்டது. எவ்வாறாயினும் கரையோரப் பகுதியிலும் கண்டி இராச்சியத்தை அண்டிய ஆனால் கொலனிய ஆட்சிக்கு உட்பட்ட மேல் மாகாணப் பகுதிகளிலும் பிரித்தானிய ஆட்சியாளர்களுடன் நல்லுறவு பூண்டதன் மூலம் பட்டம் பதவிகளும் காணி பூமியும் வீடுவளவுகளும் பெற்றுத் தம்மை மேம்படுத்திக் கொண்ட கொவிகம குடும்பங்கள் இருந்தன. இவர்களிற் கணிசமான பகுதியினர் கிறிஸ்தவர்களாக மதம் மாறியவர்கள். கண்டிய உயர்சாதிக் குடும்பங்கள் இவர்களது பொருளாதார மேம்பாடு கருதி மதம் என்ற அடையாள வேறுபாட்டையும் தேவையான போது புறக்கணித்துத் திருமண உறவுகளை ஏற்படுத்திக் கொண்டனர். இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இவ்வாறு நடக்கத் தொடங்கியது. எனினும் சாதி என்ற அடையாளம் வலுவாகவே இருந்தது.

கிறிஸ்துவ மதத்தைத் தழுவாத உயர் வகுப்பினர்கள் கூடத் தங்களுக்குக் கிறிஸ்துவ அடையாளத்தைத் தரக் கூடிய பேர்களைச் சூட்டிக் கொண்டனர். உதாரணமாக டொன்ஸ்டீபன் சேனநாயக்க, பிலிப் குணவர்த்தன. ஆகியோர் கிறிஸ்துவர்களல்லர். இந்த விதமான போக்கு சில பிரதேசங்களிற் குறைவாகக் காணப்பட்டதன் காரணம் அப்பிரதேசங்களில் கொலனிய நிருவாகமும் கிறிஸ்துவ நிறுவனங்களும் தீவிரமாகச் செயற்படாமை எனலாம்.

தமிழரிடையேயும் சாதி வேறுபாடுகளும் பிரதேச வேறுபாடுகளும் வலுவாக இருந்தன. யாழ்ப்பாணத்திற் தமது பாரம்பரியத்தையும் கொழும்பில் தமது தொழில்களையும் கொண்டிருந்த வசதிபடைத்த யாழ்ப்பாணச் சைவ வேளாளரே அரசியலிலும் வடபுலத்துச் சொத்துடைமையிலும் கல்வி, உத்தியோகங்களிலும் ஆதிக்கஞ் செலுத்தினர். இடைநிலைச் சாதியினரிற் சிலர் தனிப்பட்ட முறையில் சமூக மேம்பாடு எய்தினாலும் வேளாள மேட்டுக்குடிகளது நிலஞ்சார்ந்த பொருளாதார ஆதிக்கத்தின் பின்னணியிலும் ஏற்கெனவே கல்வியிலும் உத்தியோகத்திலும் அவர்கள் பெற்றிருந்த முதனிலையின் காரணத்தாலும் அரசியலில் அவர்கட்குச் சவாலாக எழ வாய்ப்பிருக்கவில்லை. கரையார் சமூகத்தினர் நேரடியான வேளாள ஆதிக்கத்திற்குட்படாததால் அவர்களது ஆதிக்கத்திற்கு உட்படுத்த தேவையற்றிருந்ததாலும் தென்னிலங்கையின் கராவே சமூகத்தினளவுக்குச் சமூக மேம்பாடு பெற்றிருக்கவில்லை.

கிழக்கு மாகாணத்திலும் வடமேல் மாகாணத்தின் கரையோரப் பகுதியிலும் வாழ்ந்த தமிழ்ச் சமூகங்களது வாழ்க்கை முறை யாழ்ப்பாணத்துச் சூழலை விடக் கனிவான இயற்கை வளங்களின் காரணமாகக் ஆங்கிலக்கல்வி, உத்தியோகம் என்பனவற்றுக்கான தேவையைக் கொண்டிருக்கவில்லை. அதைவிடவும் வடபுலத்தில் மதமாற்ற நோக்கத்துடன் கிறிஸ்துவ மிஷனரிகள் பெருமளவிற் பாடசாலைகளை நிறுவுதற்கு ஏதுவாக இருந்த வரலாற்றுப் பின்னணி இலங்கையில் வேறெங்கும் இருக்கவுமில்லை. எனவே அரசியல் செயற்பாடு வடபுலத்தைப் பகைப்புலமாகவும் கொழும்பைத் தளமாகவுங் கொண்டு உருவான சமூக அரசியற் செல்வாக்குடைய குடும்பங்கள் இப் பகுதிகளிற் உருவாக வாய்ப்புக் குறை வாகவே இருந்தது. இப்பகுதிகளிற் குறிப்பாகக் கிழக்கிற் கல்வி அரசாங்க உத்தியோகங்கள் என்பன கொலனி ஆட்சியின் பிற்பகுதியில் விரிவாக்கம் பெறத் தொடங்கிய போது அப்பணிகளைச் செய்ய வடபுலத்திலிருந்தே ஆசிரியர்களும் அலுவலர்களும் வர வேண்டியிருப்பதைப் பலரும் அறிவோம்.

மலையகத்தமிழரைப் பொறுத்தவரை பெருந்தோட்ட நிறுவனம் ஏகப்பெரும்பான்மையானோரைப் பொருளியல், கல்வி, அரசியல் விழிப்பு என்ற விடயங்களில் திட்டமிட்டே தாழ் நிலையில் வைத்திருந்தது. தோட்டப் பொருளாதாரத்தை அண்டி உருவான வணிகர்களும் தோட்ட முதலாளிமாரைச் சார்ந்து நின்று தம்மை மேம்படுத்திக் கொண்டவர்களும் மலையகத் தமிழ்ச் சமூக மேம்பாடு பற்றி அக்கறைகாட்டியதாகக் கூறுவது கடினம். அவர்கட்காகக் குரல் கொடுத்த முக்கியமான பிரமுகவர்களில் ஒருவர் பொன்னம்பலம் அருணாசலம் அடுத்தவரும் அதி முக்கியமானவரும் தென்னிந்தியாவிலிருந்து வந்தவரான நடேசய்யர். மலையகத்திற்கான ஒரு சமூக அடையாளத்துடன் கூடிய அரசியல் உருவாகக் கூடிய கால மெடுத்தது போக அது முழுமைபெறுவதற்குள் பேரினவாதக் குறுக்கீடுகளும் வந்துவிட்டன.

> **சிங்களவர் தமிழர்களிடையே சாதியும் வர்க்கமும் வலுப்பெற்றிருந்தன**

முஸ்லீம்களைப் பொறுத்தவரை வடக்கில் அவர்கள் மிகச் சிறுபான்மையினரையும் தம்மைத் தமிழ்ச் சமூகத்தின் ஒரு பகுதியினராகக் கொண்டும் வாழக் கூடிய ஒரு சூழல் இருந்தது. கிழக்கில் அவர்களது தனித்துவத்தை வலியுறுத்தக் கூடியளவு எண்ணிக்கையும் முஸ்லிம் சனத்தொகை அடர்வுடைய பகுதிகளும் இருந்தன. எனினும் கல்வி, உத்தியோகம் போன்ற துறைகளில் அவர்கள் கிழக்கு மாகாணத் தமிழரை விடவும் பின்தங்கிய நிலையிலேயே இருந்து வந்தனர். தென்னிலங்கையிலும் கொழும்பு தவிர்ந்த பகுதிகளில் கல்வி உத்தியோகம் போன்ற அக்கறைகள் குறைவாகவே இருந்தது. எவ்வாறாயினும் நகர்சார்ந்து, குறிப்பாகக் கொழும்மை அண்டிச் செல்வந்த முஸ்லிம் வணிகக் குடும்பங்கள் பல உத்தியோகம் போன்ற அக்கறைகள் குறைவாகவே இருந்தது. எவ்வாறாயினும் நகர்சார்ந்து, குறிப்பாகக் கொழும்பை அண்டிச் செல்வந்த முஸ்லீம் வணிகக் குடும்பங்கள் பல உருவாகியிருந்தன. சோனகர் எனப்பட்ட முஸ்லீம்கள் இலங்கை இந்தியச் சோனகர் என வகுக்கப்பட்டனர். இலங்கை முஸ்லீம் சமூகத்தினரிடையிலிருந்து அனைத்து இலங்கை முஸ்லீம்களதும் பேரிற் பேசக் கூடிய தலைவர்கள் உருவானார்கள். அவர்களைவிட எண்ணிக்கையிற் குறைவாக இருந்த போதும் கணிசமான கல்வி தொழில் ஈடுபாடுடைய மலாய்ச் சமூகத்தினர் மத்தியிலிருந்தும் முஸ்லீம்கட்காகவும் மலாய்ச் சமூகத்தினருக்காகவும் பேசக் கூடிய தலைவர்கள் தோன்றினர். எனினும் முஸ்லீம் சமூகம் மேற் கூறிய இலங்கைச் சோனகர், இந்தியச் சோனகர், மலாயர் என்கிற மூன்று பிரிவுகட்கும் அப்பால் வேறு அடையாளங்களின் அடிப்படையிலும் வெவ்வேறு சமூகப் பிரிவுகளாகவே இயங்கியது. பறங்கியரிடையேயிருந்து முக்கியமான சமூகப் பிரமுகர்கள் தோன்றினாலும் அச்சமூகத்தின் அடையாளத்தின் அடிப்படையில் ஒரு தேசிய இனமாக அடையாளப்படுத்தக் கூடிய தொகையில் அவர்கள் இருக்கவில்லை. அதை விட அவர்களது ஐரோப்பியப் பின்புலம் காரணமாகவும் சிறப்பான சில விதி விலக்குக்கள் போக அவர்களது தலைவர்கள் கொலனிய நிருவாகத்திற்கு நெருக்கமாகவே இருந்தனர்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியில் இன அடையாளத்தை வற்புறுத்துகிற போக்குகளும் இனத்தோடு மதத்தைச் சேர்த்து வற்புறுத்துகிற போக்குக்களும் நிலை கொண்டுவிட்டாலும் அன்றைய தேசிய அரசியல் உருவாக்கத்தின் பங்களிக்கக் கூடியவர்களாகத் தமிழருஞ் சிங்களவருமே முன்னிலையில் நின்றனர். எனினும் வர்க்கமும் அதே அளவு அல்லது அதைவிட முக்கியமாகச் சாதியும் அவர்களிடையிலிருந்த உறவைத் தீர்மானித்தன என்பதைக் கொலனிய ஆட்சியின் கீழான சீர்திருத்தங்களின் பின்னர் தெளிவாகவே காண இயலுமாயிற்று. கொலனிய ஆட்சியின் கீழ் கொலனிய எசமானர்களின் தயவில் ஆட்சி அதிகாரங்களில் சிறியதொரு பங்கு பெற்ற சில குடும்பங்கள் தொடர்ந்தும் ஆதிக்கத்தில் இருந்தன. அந்த எண்ணிக்கையை விரிவுபடுத்துகிற சூழ் நிலை ஏற்பட்ட போது அவ் விரிவாக்கத்திற் சாதியும் வர்க்கமும் முக்கிய பங்கு வகித்தன. இது பற்றி அடுத்த பகுதியிற் சிறிது விரிவாகக் கவனிப்போம்.

---

**ஒக்ரோபர் புரட்சி**

**7ம் பக்க தொடர்ச்சி**

ரஷியாவில் வெற்றி பெற்ற சோஷலிசப் புரட்சியும் தோன்றிய சோவியத் ஆட்சியும் விஞ்ஞான சோஷலிசத்தின் அடிப்படையில் தமது நாட்டின் சோஷலிச அமைப்பை நிலைநாட்டி முன்னெடுத்தனர். தோழர் லெனினும் அவருக்குப் பின் தோழர் ஸ்டாலினும் சோவியத் சோஸலிசக் குடியரசை வழி நடாத்தி தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் சகல துறை வளர்ச்சி கண்ட நாடாக சோவியத் யூனியனை மாற்றி அமைத்தனர். அதேவேளை உலக ஏகாதிபத்தியத்திற்கு எதிரான நிலையில் விட்டுக் கொடுக்காத சோஷலிச அரசாக நின்று உலகின் அடக்கி ஒடுக்கப்பட்ட நாடுகளுக்கும் மக்களுக்கும் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தது சோவியத் சோஷலிசக் குடியரசாகும். இரண்டாவது உலக யுத்த காலத்தில் தோழர் ஸ்டாலின் தலைமையில் சோவியத் மக்கள் நிகழ்த்திய வீரமும் தியாகமும் அர்ப்பணிப்பும் ஹிட்லரையும் அவனது படைகளையும் சோவியத் மண்ணில் நிர்மூலமாக்கினர்.

அத்தகைய சோஷலிசத் திருநாட்டை தோழர் ஸ்டாலின் மறைவுக்குப் பின்னான தலைமைகள் சீரழித்து ஏகாதிபத்தியவாதிகளின் நீண்டகாலக் கனவை நனைவாக்கிக் கொண்டனர். சோவியத் யூனியன் வீழ்ச்சியடைந்து கொண்டது. அது ஒரு தற்காலிகப் பின்னடைவாகியது.

ஆனால் உலகப் பொதுவுடைமை இயக்கம் பல படிப்பினைகளைப் பெற்றுக் கொண்டது. எத்தனை வீழ்ச்சிகள் ஏற்பட்டபோதிலும் மாக்சிசத்தால் மீண்டும் மீண்டும் எழுந்து நிற்க முடியும் என்பது நிரூபிக்கப்பட்டு வரும் போக்காகி வருகிறது.

மகத்தான ஒக்ரோபர் புரட்சியின் 90வது ஆண்டு நினைவை முன்னுறுத்திப் அதன் அனுபவங்கள் படிப்பினைகளைக் காணும் போது மாக்சிசம் தோல்வியடைவில்லை புரட்சிகள் வெடித்தெழுந்து வெற்றி பெறும் என்பது தெளிவாகி வருகிறது. ஏகாதிபத்தியத்தால் நீண்ட காலத்திற்கு நிலைக்க முடியாது என்பது உறுதியாகி வருகிறது. உலகின் ஒவ்வொரு நாடுகளிலும் உள்ள நேர்மையான மாக்சிச லெனினிசவாதிகளும் அவர்களது கட்சிகளும் ஒக்ரோபர் புரட்சியின் மகத்தான செம்பதாகையை உயர்த்தி முன் செல்லும் மீள் நிலை வளர்ந்து செல்வதைப் பல்வேறு நாடுகளிலும் காணமுடிகின்றது.

நமன்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# உலக அரங்கின் நாட்குறிப்பு



உலகோன்

## மூன்றாம் உலக யுத்தம்

**"ஈரான் அணு ஆயுதங்களை உற்பத்தி** செய்யுமானால் மூன்றாம் உலக யுத்தம் மூள்வது உறுதி" என்கிறார் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ச் புஷ். ஈரானின் புரட்சிகரக் காவலர்களை பயங்கரவாதிகள் என சித்தரிப்பது, ஈரான் ஹிஷ்புல்லா, ஹமாஸ் போன்ற பயங்கரவாத அமைப்புகளுக்கு உதவிகளைக் செய்கிறது எனக் குற்றஞ் சாட்டுவது என்றவாறெல்லாம் சொல்லி ஈரானைத் தாக்குவதற்குப் போதுமான நியாயங்களை தேட முனைகிறது அமெரிக்க நிர்வாகம். (போர் தொடுப்பதற்கு அமெரிக்காவுக்கு நியாயங்கள் தேவையில்லை என்பது வேறு விடயம்)

"கத்திகளை கையில் ஏந்தி அலையும் பைத்தியக்காரர்கள்" என அமெரிக்க நிர்வாகத்தினரை வர்ணித்திருந்தார் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின். அமெரிக்காவின் பூச்சாண்டி பற்றி கருத்துக் கூறிய புட்டின் "பயமுறுத்துவது எச்சரிப்பது எல்லாம் மக்கள் சக்திக்கு முன்னால் எடுபட மாட்டாது. ஒரே பல்லவியை எத்தனை தடவை தான் பாடுவார்கள்?" என்றும் கேட்டிருக்கிறார்.

"காட்டுக் கூச்சல்களும் எச்சரிக்கைகளும் பயனுள்ள எந்தவொரு முடிவையும் தரமாட்டாது." எனச் சொல்லியிருக்கிறது சீனா. இதேவேளை ரஷ்யா ஈரானுக்கு ஆயுதங்களை வழங்குவதை நிறுத்த வேண்டும். சீனா ஈரானில் முதலிடுவதை நிறுத்த வேண்டும். இல்லையேல் பாரதூரமான விளைவுகளை இரு நாடுகளும் சந்திக்க வேண்டி வரும் என்கிறது அமெரிக்கா.

1943 இல் 2ம் உலகப் போரின் நடுவே அமெரிக்க ஜனாதிபதி பிராங்கிளின் ரூஸ்வெல்ட் மற்றும் பிரித்தானியப் பிரதமர் வின்சன்ட் சேர்ச்சில் ஆகியோருடன் பேசுவதற்காக ஸ்டாலின் ஈரான் வந்தார். அதற்குப் பின் ஈரானுக்கு வந்த ரஷ்ய தலைவர் விளாடிமிர் புட்டினே. ஈரானின் தலைநகரான டெகிரானில் நடைபெற்ற கஸ்பியன் கடலைச் சேர்ந்த நாடுகள். (ரஷ்யா, ஈரான், அசபெய்தான், கசகிஸ்தான், டெர்மகிஸ்தான்) பங்கு பெற்ற "கஸ் பியன் மாநாட்டில்" பங்கு பெறுவதற்காக கடந்த மாதம் புட்டின் வந்திருந் தார். இம் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட இரண்டு முக்கியமான தீர்மானங்கள் ஈரானை தனிமைப்படுத்தும் அமெரிக்கக் கனவுகளுக்கு ஆப்பு வைத்தது. அத்தீர்மானங்கள் இவை தான்:

1. வலுத் தேவைகளுக்காக ஈரான் அணுசக்தியைப் பயன்படுவதற்கான உரிமை ஈரானுக்கு இருக்கிறது.
2. கஸ்பியன் நாடுகளில் ஒன்றைத் தாக்குவதற்கான தளமாக மற்ற நாடுகளைப் பயன்படுத்த எந்தவொரு வேறு நாட்டுக்கும் இடமளிக்கப்பட மாட்டாது.

## யார் சொல்வது சரி

பொதுநலவாய அமைப்பில் இருந்து பாகிஸ்தானை வெளியேற்றும் முடிவ எடுக்கப்பட்ட வேளை இலங்கையின் வெளிவிவகார அமைச்சரும் தீர்மானம் எடுக்கப்பட்ட குழுவில் அடங்கியிருந்தார். முடிவ அறிவிக்கப்பட்ட போது ஏகமனதாகவே இந்த முடிவ எட்டப்பட்டதாக சொல்லப்பட்டது.இதைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த இலங்கை ஜனாதிபதி பாகிஸ்தான் வெளியேற்றப்பட்டதை இலங்கை கண்டிப்பதாகவும் பொதுநலவாயத்தின் இம் முடிவக்கு தான் எதிர்ப்புத் தெரிவிப்பதாகவும் கூறினார். மறுநாள் உகாண்டாவின் தலைநகர் கம்பாலாவில் பத்திரிகையொன்றுக்கு கருத்துத் தெரிவித்த இலங்கையில் வெளிவிவகார அமைச்சர் பாகிஸ்தானை வெளியேற்றியது பற்றிய தனது கருத்துக்கும் இலங்கை அரசின் நிலைப்பாட்டுக்கும் எதுவித வேறுபாடுகளும் இல்லை எனத் தெரிவித்திருந்தார்.


இதற்கிடையில் பிரதான இரண்டு ஞாயிறு தமிழ் ஏடுகளின் பிரதான செய்திகள் என்னைப் புல்லரிக்க வைத்தன.

* பொதுநலவாயத்திலிருந்து இஸ்லாமாபாத்தை இடைநிறுத்தும் தீர்மானத்திற்கு இலங்கை எதிர்ப்புத் தெரிவித்திருப்பதை பாகிஸ்தான் வரவேற்றுள்ளது.

* பொதுநலவாய நாடுகளின் பட்டியலில் இருந்து பாகிஸ்தானை நீக்கும் விடயத்தில் இலங்கை எடுத்துக் கொண்ட நிலைப்பாட்டால் இந்தியா அதிருப்தியடைந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

தாங்கள் என்ன எழுகிறோம் எனத் தெரிந்து கொண்டுதான் எழுகிறார்களா? என்ன..

வாழ்த்துக்கள்!




இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
(மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்)

# நேபாள ஆளும் வர்க்கத்தை எதிர்த்து புதிய போராட்டம்

## சதிகளை எதிர்த்து மாவோயிஸ்டுகள்

**நேபாளம் தென் ஆசியப்** பிராந்தியத்தில் ஒரு இந்து நாடு என்றும் அங்கு மன்னராட்சி சிறப்பாக நடைபெறுகின்றது என்றும் பரப்புரை செய்யப்பட்டு வந்த காலம் இருந்தது. ஆனால் அங்கு கடந்த 250 ஆண்டுகளாக மன்னர் பரம்பரையினரும் நிலவுடைமை ஆதிக்கமும் கொடூரமாக மக்களை அடக்கி ஆண்டு வந்த கதை மறைக்கப்பட்டே வந்தது. ஆனால் இன்று நேபாள மக்களது வீரம் செறிந்த போராட்டங்களால் நேபாளம் உலக மக்களிடையே பேசப்படும் நாடாகி உள்ளது. மன்னராட்சியும் ஆதிக்க சக்திகளும் ஆட்டம் கண்டு முடங்கிக் கிடக்கிறார்கள். எந் நேரத்திலும் மன்னரும் மாளிகையும் முற்றுகையிடப் பட்டு தூக்கி வீசப்படலாம் என்ற நிலை காணப்படுகிறது. அந்தளவிற்கு நேபாள மக்களின் போராட்டக் கொதிநிலை உயர்ந்து செல்கிறது. இந் நிலையை நேபாளத்தில் ஏற்படுத்தி வளர்தெடுத்து வந்தவர்கள் நேபாளக் கம்யூனிஸ்ட் கட்சி (மாஓவாத) யினராவர். விவசாயிகள் தாழ்த்தப்பட்ட மக்கள் ஒடுக்கப்படும் தேசிய இனத்தவர் மற்றும் பின் தங்கிய நிலமற்ற மக்கள் கிராமப் புறங்களில் அமைப்புகள் வாயிலாக அணி திரட்டப்பட்டனர். அவர்கள் மத்தியில் புதிய- ஜனநாயக வேலைத்திட்டத்தை முன்வைத்து மக்கள் படை கட்டப்பட்டது. ஆயுதப் போராட்டம் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையில் வீறு பெற்று முன் சென்றது. கடந்த 11 வருடங்களில் நேபாளம் முழுவதும் போராட்டத் தீ பரவிப் பிடித்தது. நகரங்களில் நடுத்தர வர்க்கத்தினர் புத்திஜீவிகள் தொழில்சார் பிரிவினர் உட்பட பல்வேறு தரத்தினரும் கம்யூனிஸ்ட் கட்சியின் வேலைத்திட்டங்களையும் கோரிக்கைகளையும் ஏற்று வெகுஜன செயல்பாட்டில் ஈடுபட்டும் வந்துள்ளனர். நேபாளக் கிராமங்கள் பெரும் பகுதியைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டுள்ளதுடன் மக்கள் அதிகார அமைப்புகளையும் நிறுவி மக்கள் ஆட்சியின் ஆரம்ப நிலையைத் தோற்றுவித்தனர்.

இவற்றைக் கண்டு மன்னராட்சியும் அதற்கு முட்டுக் கொடுக்கும் பாராளுமன்றக் கட்சிகளும் மிரண்டுபோயின. இந்திய அமெரிக்க சக்திகள் ஏக்கம் கொண்டன. நேபாள அடக்குமுறை ராணுவத்தால் மட்டும் கம்யூனிஸ்டுகளின் போராட்டங்களை முறியடிக்க முடியாது என்பதை உணர்ந்து பேச்சுவார்த்தைக்கும் ஒப்பந்தத்திற்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை அவ் அழைப்பை ஏற்று மிகுந்த நிதானம் முன்னெச்சரிக்கை நேபாள மக்களின் எதிர் காலம் என்பனவற்றை முன்னெடுத்து பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டது.

அப்பேச்சுவார்த்தையில் ஆயுதங்களைத் தற்காலிகமாக ஒப்படைத்து ஐ. நா மேற்பார்வையில் வைத்திருப்பது. அரசியல் நிர்ணயசபைத் தேர்தலுக்கு முன்னதாகவே "நேபாளத்தை ஒரு குடியரசாகப் பிரகடனம் செய்வது." "மக்களின் தொகைக்கு ஏற்ப விகிதாசார அடிப்படையில் கூட்டாட்சியை ஏற்படுத்துவது" என்ற இரண்டு முக்கிய கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இவற்றை நிறைவேற்ற உருவாக்கப்பட்ட இடைக் கால அரசாங்கத்தில் மாஓவாத கம்யூனிஸ்ட் கட்சியும் பங்கு கொண்டு நான்கு அமைச்சுப் பதவிகளையும் பெற்றிருந்தது.



இருப்பினும் நேபாள காங்கிரஸ் மற்றும் பாராளுமன்றக் கட்சிகள் ஒன்றிணைந்த மாக்சிச லெனினிஸ் கம்யூனிஸ்ட் கட்சி மாஓவாத நேபாள கம்யூனிஸ்ட் கட்சி என்பனவற்றைக் கொண்ட இடைக்கால அரசாங்கம் தோற்றுவிக்கப்பட்டது. இதன் மூலம் நேபாளக் கம்யூனிஸ்டுக்களை உள்ளிழுத்துச் சீரழிக்கலாம் என உள்ளூர பிற்போக்கு சக்திகள் கனவு கண்டனர். பேச்சுவார்த்தை சமாதானம் என்பனவற்றின் மூலம் கம்யூனிஸ்டுகளை வளைத்துப் போடலாம் என்றே நேபாளப் பாராளுமன்றக் கட்சிகளும் மன்னரின் நலன் காக்கும் கட்சிகளும் நம்பிக் கொண்டன.

ஆனால் ஒப்பந்தப்படி நடக்க பிரதமர் கொய்ராலாவும் இடைக்கால அரசாங்கமும் தயாராக இல்லை. சிற்சில மேலெழுந்த மாற்றங்கள் மூலம் மன்னராட்சியின் அடிப்படைகளைத் தொடரவே செய்தனர். இதனால் அதிருப்தியுற்ற கம்யூனிஸ்டுகள் இடைக்கால அரசாங்கத்திலிருந்து இரண்டு மாதங்கள் முன்பாக விலகிக் கொண்டனர். அதேவேளை மக்கள் வீதிப் போராட்டங்களில் ஈடுபட்டு மன்னராட்சியின் வீழ்ச்சிக்கு கோரிக்கை வைத்துப் போராடியும் வருகின்றனர்.

அதேவேளை நேபாளப் பிற்போக்கு பாராளுமன்றக் கட்சிகளும் மன்னரின் எடுபிடிகளும் கம்யூனிஸ்ட்டுகளுக்கு எதிரான கீழ்த்தரப் பிரச்சாரங்களிலும் ஈடுபட்டும் வருகின்றனர். மக்களைச் சுட்டுக் கொல்வதாகவும் கொள்ளை கப்பம் போன்றவற்றில் ஈடுபடுவதாகவும் பிரசாரப்படுத்துகிறார்கள். அத்துடன் தெராய் பிரதேசத்தில் தேசிய சிறுபான்மை இனங்கள் நேபாளிகள் இடையே இனமத மொழிக் கலவரங்களைத் தூண்டி சில தீவிரவாத இயக்கங்களைத் தோற்றுவித்து கலவரங்களைத் தூண்டி உள் மோதல்களை உருவாக்கியும் வருகின்றனர். அதற்கான பழியை கம்யூனிஸ்டுக்கள் மீதும் சுமத்தி பிரச்சாரம் செய்கிறார்கள். இவற்றுக்குப் பின்னால் இந்திய அமெரிக்க அதிகார சக்திகள் தாராளமாக வேலை செய்தும் வருகின்றன.

இன்று நேபாள மாஓவாத கம்யூனிஸ்டுக்கள் மிகுந்த நிதானத்துடனும் தூர நோக்குடனும் தமது போராட்டங்களை தொடர்வது பற்றி சிந்தித்து செயலாற்றி வருகிறார்கள். இன்றைய சர்வதேசிய நிலைமை இந்திய பிராந்திய மேலாதிக்கம், அமெரிக்காவின் உலக மேலாதிக்கம் என்பனவற்றின் மத்தியில் நேபாள மன்னராட்சியை எதிர்த்து நிற்கும் மாஓவாத கம்யூனிஸ்ட் கட்சியின் போராட்டம் கடுமையான சவால்களைச் சந்தித்து வருகிறது. இருப்பினும் நேபாள மாஓவாத கம்யூனிஸ்ட் கட்சியும் அவர்களது தலைமையையும் வழிகாட்டலையும் ஏற்றுக் கொண்ட நேபாள மக்களும் இறுதியில் வெற்றி பெறுவார்கள். மன்னராட்சியை வீழ்த்தி மக்கள் ஜனநாயகத்தை நிலைநாட்டுவார்கள் என்ற நம்பிக்கை வீண்போக மாட்டாது.

## பொதுவுடைமை

6ம் பக் தொடர்ச்சி

முன்னணிப் பாத்திரம் வகித்தவர். தோழர் மணியம் எப்பொழுதும் மக்கள் எதிர் நோக்கிய வர்க்க சாதிய ஒடுக்குமுறைகளுக்கு எதிராக மக்களை அணி திரட்டி அவர்களை முன்நிறுத்திய போராட்டங்களை முன்னெடுப்பதில் முன்னுரிமையும் அக்கறையும் காட்டி வந்தவர். அந்த வகையில் மக்கள் சக்தி மீது முழு நம்பிக்கை வைத்து செயல்பட்டவர். வடபுலத்தில் 1966ம் ஆண்டு ஒக்ரோபர் 21 எழுச்சியைத் தோற்றுவிக்கும் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் முடிவக்கும் செயலுக்கும் முக்கிய பங்களித்தவர். அவ் எழுச்சியை தோற் றுவித்து வழி நடாத்தும் தலையாய பொறுப்பில் இருந்த தோழர்களில் முதன்மையானவராகவும் தோழர் மணியம் இருந்து வந்தார். அக்கால கட்டத்தில் சாதி ஒடுக்கு முறைக்கும் தீண்டாமைக்கும் எதிராக எழுந்த பரந்துபட்ட வெகுஜனப் போராட்டங்களை நிதானமாகவும் விட்டுக்கொடுப்புகளுக்கு இட மின்றியும் வழி நடத்துவதில் தோழர் மணியத்தின் ஆற்றலும் பங்களிப்பும் புதிய தலை முறைப் பொதுவுடைமை வாதிகளுக்கு சிறந்ததோர் முன்னுதாரணமாக விளங்கியது.

அதேவேளை பொதுவுடைமை இயக்கப் பரப்பில் ஏற்பட்ட திரிபுவாதம், அதி தீவிர இடதுசாரிவாதம். சீர்குலைவு வாதம் புத்தகவாதம் போன்றவற்றுக்கு எதிராக அவ் அக்கால கட்ட ங்களில் போராடுவதிலும் மாக்சிச லெனினிச கட்சி இயக்கத்தை பாதுகாப்பதிலும் முன்னின்றார். தோழர் மணியம் சிறந்த தலை மைத்துவப் பண்புகளையும் பொதுவுடைமை வாதிக்குரிய வாழ்வியல் நடைமுறைகளையும் கொண்டவ ராக இறுதிவரை வாழ்ந்து மறைந்தவர். மாக்சிச லெனினிசம் மாஓசேதுங் சிந்தனை அடிப்படையிலான பொதுவுடைமை இயக்கம் தனது தலைமைத்துவ வழி காட்டலுக்குப் பின்பும் தொடர்ந்து முன்னேறிச் செல்ல வேண்டும் என்பதற்கான அடிப்படைகளை தூரநோக்கில் உருவாக்கி விட்டுச் சென்றவர் தோழர் மணியம். அவரது நினைவுகள் என்றும் புதிய தலைமுறைப் பொதுவ டைமை வாதிகளுக்கு சிறந்ததோர் முன்னுதாரணமாக அமைந்துள்ளமை குறிப்பிடத் தக் கதாகும்.

சி. கா. செ

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# மதுப்பாவனையின் வளர்ச்சி உலகமயமாதலின் சீரழிவு

**இலங்கையில் பௌத்த தர்மம்** கடைப்பிடிக்கப்படுவதாகவும் அதன் அடிப்படையில் மனித ஒழுக்க விழுமியங்கள் பாதுகாக்கப்பட்டு வருவதாகவும் ஆட்சியில் உள்ளோரால் புகழப்படுகிறது. அரசியலமைப்பில் பௌத்த மதத்திற்கு முதன்மையும் விஷேட இடமும் வழங்கப்பட்டுள்ளது. போயா தினங்களில் மதுபான மாமிசக் கடைகள் பூட்டப்படுகின்றன. வீதிக்கு வீதி சந்திக்கு சந்தி புத்தர் சிலைகள் வைக்கப்படுவதுடன் ஒலிபெருக்கிகள் வைத்து வழிபாட்டு பிரித் ஓதல்கள் நடைபெறுகின்றன. அவ்வாறே இந்து கிறிஸ்துவ இஸ்லாமிய மதப்போதனைகளும் கோவில்கள் தேவாலயங்கள் மசூதிகள் போன்றவற்றில் நடாத்தப்படுகின்றன.

இத்தகைய இலங்கையில் தான் மதுப்பாவனையாளர்களான குடிகாரர்கள் அதிகரித்துக் காணப்படுகின்றனர். உலக நாடுகளில் இலங்கை மதுப்பாவனையில் முன்னணியில் அதாவது பிரான்ஸ் நாட்டிற்கு அடுத்ததாக இருப்பதாகவே மதிப்பீடுகள் கூறுகின்றன.

நாள் ஒன்றுக்கு 18 கோடி ரூபாய்களுக்கு மதுபானம் வாங்கிக் குடிக்கப்படுகிறது. 177 கோடி ரூபாய்களுக்கு புதைக்கப்படுகிறது. கடந்த வருடம் 3350 கோடி லீற்றர் மதுபான வகைகள் இலங்கையரால் உட்கொள்ளப்பட்டிருக் கிறது. இவ் வருட முதல் 9 மாதங்களில் மட்டுமே 3480 கோடி லீற்றர் மதுபானங்கள் குடிக்கப்பட்டுள்ளது. இது கடந்த வருடத்தை விட 4.5 சதவீதத்தால் கூடியுள்ளது. இத் தொகையில் பியர் சேர்க்கப்படவில்லை. ஆனால் 3 கோடி 52 லட்சம் லீற்றர் பியர் வகை குடிக்கப்பட்டிருக்கிறது. இவையாவும் உத்தியோகபூர்வ வகையில் கிடைக்கப்பெற்ற புள்ளி விபரங்களைக் கொண்டதாகும். ஆனால் அதற்கு உட்படாத கள்ளச் சாராய வடிப்பிலான கசிப்பு போன்றவற்றின் அளவு மிகக் கூடுதலான தாகும் என்பதும் கவனத்திற்குரியதாகும்.

பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களின் பெற்றோர்களில் 50 சத வீதமானோர் மதுபாவனையில் ஈடுபடுகின்றனர். நகர்ப்புற சேரிவாசிகளில் 43 சத வீதமும் பெருந்தோட்ட த்துறையில் ஆண் தொழிலாளர்களில் 65 சத வீதமும் பெண் தொழிலாளர்களில் 25 சதவீதமானோர் மதுப்பழக்கம் உள்ரோராக உள்ளனர். பல்கலைக்கழகத்தில் புதிதாகச் சேருவோரில் 20 சத வீத மாணவர்கள் மதுப்பாவனையாளர்களாக உள்ளனர். மேலும் பொதுவான ஒரு கணிப்பின்படி இலங்கையில் 15 வயதிற்கு மேற்பட்ட ஆண்களில் 15 பேரில் ஒருவர் மதுப்பழக்கம் உள்ள வராக இருப்பது தெரிய வந்துள்ளது.

மேற்குறித்த புள்ளி விபரங்கள் முழுமையானவை என்று கூற முடியாது. ஆனால் முழுமையான ஆய்வும் கணக்கெடுப்பும் நாடு தழுவிய ரீதியில் எடுக்கப்பட்டால் மேற்குறித்த தொகையைவிடக் கூடுதலாக இருக்கும் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. ஜனாதிபதி முன்வைத்த மகிந்த சிந்தனையில் மதுபானத்திற்கு முற்றுப்புள்ளி என்ற "மத்தற்ற ரித்தா" நிகழ்ச்சித் திட்டத்தால் பெரும்பயன் கிடைத்ததாகக் கூற முடியாது. கடந்த 24-11-07 போயா தினத்தன்று சட்டவிரோதமாக நாடு முழுவதிலும் மது விற்பனை செய்யப்பட்டவர்கள் கண்டு பிடிக்கப்பட்டு தண்டப்பணம் 30 லட்சம் ரூபாவரை அறவிடப்பட்டதாக மதுவரித் திணைக்கள ஆணையாளர் தெரிவித்தார். ஜனாதிபதியின் 'மதுபானத்திற்கு முற்றுப்புள்ளி' என்ற நிகழ்ச்சித் திட்டம் வெற்றி பெற வாய்ப்பில்லை. ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள் முதல் கிராமப்புற பெட்டிக் கடைகள் வரை தாராள மதுபான விற்பனை நடைபெறுகிறது. சிறியோர் முதல் பெரியோர் வரை எவ்வித கூச்சமும் இன்றி மதுப்பாவனையை ஒரு 'நாகரீகமாகவே' மேற்கொள்கின்றனர். பாடசாலைகள் பல்கலைக்கழகங்களுக்கு அருகாமையில் பல மதுபான விற்பனை நிலையங்கள் சட்டபூர்வமாகவே இயங்கி வருகின்றன. இவற்றைத் திறப்பதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் உத்தியோக பூர்வ அனுமதிப்பத்திரம் வழங்குகின்றனர். ஒரு பா.உ.வுக்கு இத்தனை அனுமதிப்பத்திரம் என ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதனை பா.உ. க்கள் தமது நெருங்கிய பண முதலைகளுக்கு வழங்கி மதுபான விற்பனை நிலையங்கள் திறக்க உதவுகின்றனர். அதற்குரிய நன்கொடையைத் தாராளமாகப் பெற்றுக் கொள்வதுடன் அடுத்த தேர்தலில் இந்த மதுபான முதலாளிகளே முன்னின்று அந்தப் பா.உ. வின் பாராளுமன்ற வெற்றிக்கும் உழைக்கின்றனர் என்பது நடை முறையாகவே இருந்து வருகிறது. அது மட்டுமன்றி தமது சொந்தக்காரர்களைக் கொண்டு மதுபான விற்பனை நிலையங்களை நடாத்தும் மலையகத் தலைவர்கள் சிலரையும் காண்கின்றோம். இந்தப் புண்ணியவான்கள் மேடைகளில் பேசும் போது தோட்டத் தொழிலாளர்கள் மதுவுக்கு அடிமையாகிச் சீரழிக்கின்றனர் என்றும் புத்திமதி உரைப்பதையும் கேட்க முடிகிறது.

சமூக வாழ்வின் பல்வேறு பிரச்சினைகளுக்கும் சீரழிவுகளுக்கும் பொருளாதார நெருக்கடிகளுக்கும் காரணமான மதுப்பாவனை நாளாந்தம் அதிகரித்துச் செல்வதற்கான அடிப்படைக் காரணங்கள் கண்டறியப்படாது வெறுமனே "மதுப்பாவனைக்கு முற்றுப் புள்ளி" என்ற மகிந்த சிந்தனை வேலைத் திட்டத்தால் மதுப்பானையைக் கட்டுப்படுத்தவோ நிறுத்தவோ முடியாது. திறந்த தாராள பொருளாதாரக் கொள்கையும் தனியார் மயத்தின் விளைவுகளும் சமூகப் பண்பாட்டுத் துறைகளில் மக்களை எந்தளவிற்கு பாதித்து சீரழிவுகளுக்கு உள்ளாக்கி வருகின்றன என்பதற்கு மேற்கூறப்பட்ட மதுப்பாவனை பற்றிய விபரங்கள் தகுந்த சாட்சியங்களாகும். காரணங்களையும் அதற்கான அடிப்படைகளையும் உரியவாறு காண்பதையும் மாற்று சிந்தனைக்கு செல்லாதும் வெறுமனே விளைவுகளுக்காக மட்டும் நிகழ்ச்சிநிரல் இடுவது அல்லது அரசு சார்பற்ற நிறுவனங்கள் மூலம் பணம் பெற்று செயற் திட் டங்கள் எனக் கூறுவதும் அர்த்த மற்றவையாகும்.

**மலைஅன்பன்**

# ஆடைகள் - உழைப்பு ஏற்றுமதியில் பெண்களின் பரிதாப நிலை

**இலங்கையின் பொருளாதாரத்தில்** ஏற்றுமதித்துறை ஒரு முக்கிய பாத்திரம் வகிக்கின்றது. அதில் தொகை அடிப்படையிலும் பெறுமதி அடிப்படையிலும் தைத்த ஆடைகளும்- உடல் உழைப்பும் இரு பிரதான ஏற்றுமதிகளாய் விளங்குகின்றன. 2006ம் ஆண்டில் ஆடைகள், புடவைகள் ஏற்றுமதி 32, 083 கோடிரூபாவாக இருந்தது. இந்தத் தொகையானது மொத்த உள்ளநாட்டு உற்பத்தியில் 13 வீதமாகும். வெளிநாடுகளில் வதியும் இலங்கையர் தனிப்பட்டரீதியாக இங்கு அனுப்பிய பணத்தின் பெறுமதி 22, 345 கோடி 20 இலட்சம் ரூபாவாகும். இந்தத் தொகையானது 2006 ஆண்டு உள்நாட்டு உற்பத்தியின் 10 வீதமாக விளங்கியது. எனவே 23 வீதமான மொத்த உள்நாட்டு உற்பத்தியானது ஆடைகள் உழைப்பு ஏற்றுமதி மூலம் பெறப்படுகிறது என்பதைக் காணலாம்.

வெளிநாடுகளில் வதியும் இலங்கையர் உத்தியோக பூர்வமான வங்கிகள் மூலம் இந்த நாட்டுக்கு அனுப்பும் தொகையே மேற்கூறப்பட்ட தொகையாகும். ஆனால் வங்கியூடாக அன்றி உண்டியல் வேறு வழிகள் மூலம் அனுப்பப்படும் தொகையை மதிப்பிட முடியாதுள்ளது. அத்தொகையும் பெரும் தொகையானதாகும்.

நாட்டின் அன்னியச் செலவாணியின் பெரும் பகுதியை இந்த இரண்டு ஏற்றுமதிகளும் ஈடுசெய்கின்றமையால் இலங்கையின் பொருளாதாரத்தில் பெரும் பங்களிப்பை வழங்குகின்றன. எவ்வாறாயினும் இந்த இரு துறைகளும் பொருளாதாரத்தில் குறிப்பிட்ட தாக்கம் செலுத்தும் அதேவேளை சம்பந்தப்பட்ட குடும்பங்களைப் பொறுத்த மட்டில் தனிப்பட்ட ரீதியில் எத்தகைய எதிர்நிலைத் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன என்ற விடயத்தில் குறிப்பான பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன.

இந்த இருதுறைகளிலும் உழைப்புப் படையில் பெண்கள் 80 வீதமாக ஆடை உற்பத்தித் துறையிலும் உழைப்பு ஏற்றுமதியில் மூன்றில் இரண்டு பங்கினராகவும் விளங்குகின்றனர் என்பது ஒரு விசேட விடயமாகும்.

வெளிநாடுகளில் இலங்கையர் பதினைந்து இலட்சம் பேர் வரை வேலை செய்கின்றனர். இவர்களில் ஏகப்பட்டவர்கள் மத்திய கிழக்கு நாடுகளில் வீட்டுப் பணிப்பெண்களாக வேலை செய்கின்றனர். மத்திய கிழக்கிலும் உள்நாட்டில் ஆடைத் துறையிலும் மொத்தமாக பத்து இலட்சம் பெண்கள் வேலை செய்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இது நாட்டினது பெண்கள் சனத்தொகையில் பத்து வீதமாகும். இவர்களில் பெரும்பாலானவர்கள் கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்களாகவும் பின்தங்கிய சமூகப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களாகவும் உள்ளனர் என்பதும் கவனத்திற்குரியதாகும்.

மேற்கூறிய தகவல்கள் இலங்கையில் ஏற்றுமதி, பால், வறுமை என்பவற்றுடன் பின்னிப்பிணைந்துள்ளன என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

நீண்ட நேர வேலை, மோசமான வேலை நிபந்தனைகள், குறைந்த ஊதியம் என்பவற்றைச் சுட்டிக் காட்டி ஆடைத் தொழிற்சாலையில் வேலை செய்பவர்களும் வீட்டுப்பணிப்பெண்களும் மிக மோசமாகச் சுரண்டப்படுகிறார்கள் என்பது இன்றைய இலங்கையின் யதார்த்தம்.

இந்த இருதுறைகளாலும் வீடுகளிலே சமூகச் சீரழிவுகளையும் பிரச்சினைகளையும் பெண்கள் எதிர்கொள்வதால் சமூக மட்டத்தில் குடும்பங்கள் சின்னாபின்னமடைவதையும் காண



முடிகின்றது. இதைவிட பெண்கள் தமது பிள்ளைகளையும் கணவர்மார்களையும் விட்டுச் செல்வதால் அப்பிள்ளைகள் சீரழிந்து போகின்ற அபாயம் வளர்ந்து செல்கிறது. ஆடைத் தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் திருமணமாகாத இளம் பெண்கள் ஆண்களால் பாலியல் சுரண்டல் கொடுமைகளுக்கு ஆளாக்கப்படுகின்றனர். ஆடைத்தொழிற்சாலைகளிலும் வெளிநாடுகளில் பணிப்பெண் வேலைகளிலும் பெண்கள் உழைப்புச் சுரண்டல் பாலியல் சுரண்டல் என்ற இரட்டைச் சுரண்டல்களுக்கு பலியாகி வருகின்றனர்.

வருடந்தோறும் ஒரு இலட்சம் பெண்கள் மத்திய கிழக்கிற்கு பணிப்பெண்களாகச் செல்கின்றனர். உடல் உள ரீதியாகப் பாதிக்கப்பட்ட பெண்கள் பற்றிய புள்ளிவிபரமோ வெளிநாட்டில் தாய் இருப்பதால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் பிள்ளைகள் பற்றிய எண்ணிக்கையோ முறையாக மதிப்பிடப்படவில்லை. இது பற்றி ஆளுவோருக்கு எவ்வித அக்கறையும் கிடையாது. ஆணாதிக்கம் நிலவும் இந்த நாட்டில் பெண்கள் வேலையில் சேருவதற்கு முன்பே தத்தம் வீடுகளில் சமுதாயத்தில் ஏற்கனவே பல்வகைச் சுரண்டல் ஒடுக்குதல்களுக்கு ஆளானவர்கள் என்பது கவனிக்கத்தக்கது. வேலைக் கஷ்டம் என்ற போதும் வேறு வேலைகளையும் விட ஆடைத் துறையில் வேலை செய்பவர்கள் ஒப்பீட்டளவில் சற்று வசதியாய் உள்ளனர் போன்று தோன்றலாம். ஆனால் அவர்களது சம்பளம், இருப்பிடம் தூரக்கிராமங்களில் இருந்து வந்துள்ளமை போன்றவற்றை கவனத்திற்கொள்ளும் போதே அவர்களது பிரச்சினைகளின் பூதாகரம் புரியும். வெளிநாடுகளில் வேலை செய்யும் இலங்கையர் எதிர் நோக்கும் பிரச்சினைகள் மற்றும் ஏனைய பிரச்சினைகளை ஆராய்வதற்கு ஒரு பாராளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. அந்தத் தெரிவுக்குழு அங்கத்தவர்களில் வெளிநாட்டு வேலைவாய்ப்பை ஊக்குவிக்கும் அமைச்சர் ஹெலிய ரம்புக்கவெல்லவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பிட்ட தெரிவுக்குழுவில் இந்த அமைச்சர் உள்ளடக்கப்பட்டது கடும் விமர்சனத்திற்குள்ளாகியுள்ளது. இது முரண்பட்ட நலன்களாகும். வெளிநாட்டிற்கு ஆட்களை எந்த வழியிலும் அனுப்புவதே அவரது பிரதான வேலை. வெளிநாட்டில் வேலை செய்யும் நபர்களின் சம்பளம் வசதிகள் நலன்கள், உரிமைகள் தொடர்பாக அக்கறைப்படாத ஒருவராகவே அவ் அமைச்சர் இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந் நிலையில் இப்போது புதிய தகவல் ஒன்று வெளியாகியுள்ளது. வெளிநாடுகளுக்குப் பணிப் பெண்களாக வேலைக்குச் செல்லும் பெண்கள் அவர்கள் வேலையில் இருக்கும் காலத்தில் கருத்தரிக்கக் கூடாதென வேலை வழங்குநர் நிபந்தனை விதித்து வருவதாகவும் இங்குள்ள முகவர்கள் தெரிவாகிய பெண்களை கட்டாயமாக கருத்தரிப்பதை தடைசெய்யும் விதத்தில் ஊசி ஏற்றுமாறு நிர்ப்பந்திக்கின்றனர் என்றும் அறிய முடிகின்றது.

இந்நாட்டின் சனத்தொகையில் அரைப்பங்கினர் பெண்களாகவே உள்ளனர். ஆடைத்தொழிற்சாலைகளிலும் மத்தியகிழக்கு நாடுகளில் பணிபுரிவர்களில் சிங்கள தமிழ் முஸ்லீம் மலையகப் பெண்கள் அடங்குகின்றனர். இவர்கள் அனைவரும் பால் ரீதியிலும் வர்க்க ரீதியிலும் சுரண்டப்படுபவர்களாக கொடுமைகள் அனுபவிப்பவர்களாகவே உள்ளனர். இவை இன மொழி மத வேறுபாடுகளுக்கு அப்பால் பெண்கள் என்ற இரண்டாம் தர வகை நிலைப்பாட்டினாலேயே இடம் பெற்று வருகின்றன. இவர்களுக்கு ஜனாதிபதி முதல் அமைச்சர்கள் உயர் நிலை அதிகாரிகள் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்போரால் எவ்வித விமோசனத்தையும் பெற்றுக் கொடுக்க முடியாது உள்ளது. காரணம் மேற்படி பெண்கள் சாதாரண தொழிலாளர் விவாசாயிகள் மற்றும் கிராமப்புற உழைக்கும் வர்க்கக் குடும்பங்களில் இருந்து வந்துள்ளமையேயாகும். அதேவேளை ஆளுவோர் சொத்து சுகம் படைத்த வர்க்கத்திலிருந்து வந்தவர்களேயாவர்.

வீட்டு அடிமைகளாக நடாத்தப்பட்டு வந்த பெண்கள் உலகமயமாதலின் கீழ் வெளிநாடுகளில் பணிபெண் அடிமைகளாக ஆக்கப்பட்டு வருகிறார்கள். இதை ஊக்கப்படுத்தி மேலும் விரிவுபடுத்திக் கொள்ள ஒரு அமைச்சும் அமைச்சரும் உள்ளனர். வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் என்ற அழகான பெயர்ப்பலகையின் கீழ் இக்கேடுகெட்ட தொழில்வாய்ப்பு நடைபெறுகிறது. இந்த நாட்டில் வளங்களும் வாய்ப்பு வசதிகள் இருந்தும் அவற்றுக்கான உரிய திட்டங்கள் இல்லாமையாலேயே இந்த அவல நிலை தொடர்கிறது.

**சிறீ**

புதிய பூமி 15 டிசம்பர் 2007

# பேராசிரியர் கைலாசபதி: ஆளும் ஆளுமையும் அரை உண்மைக்காரரும்

பேராசிரியர் கைலாசபதி மீதான தாக்குதல்கள் அண்மைக் காலமாகக் கொஞ்சம் ஓய்ந்துள்ளன. அவை மீண்டும் எப்போது எழும் என்று கூறுவது கடினம். இரண்டு ஆண்டுகள் முன்பு தான் அவதூறுக்காரர் வாயடைக்கும் விதமாக என். கே. ரகுநாதன் "நிலவிலே பேசுவோம் என்ற கதை தொடர்பான புனைவுகட்கு ஒரு முடிவு கட்டினார். வாயடைத்துப் போனவர்கள் தமது திகைப்பிலிருந்து மீளச் சில காலம் எடுக்கலாம். இந்த விதமான அவதூறுகளை விடக் கெடுதலானவை கைலாசபதியின் அடையாளத்தைச் சிதைக்கிற வேறு விதமான முயற்சிகள். இவை வேறுபட்ட நோக்கங்கட்காக மேற்கொள்ளப்படுகின்றன. கைலாசபதியினுடைய பேருடன் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டு தங்களது அடையாளத்திற்கு ஏற்றபடி கைலாசபதியை அடையாளப்படுத்த முயலுகிறவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் தாங்கள் விரும்புகிற விதமான அடையாளத்தை வழங்க வாய்ப்பே இயலாத போது அதற்கு முரணான எந்தத் தடயத்தையும் மறைத்து விடுவார்கள். கைலாசபதியின் அரசியற் சார்பையும் ஆக்கங்களையும் மறைக்கிற முயற்சிகள் இத்தகையவை. இன்னொரு வினோதமான முயற்சி கைலாசபதி இப்போது உயிரோடு இருந்தால் பேராசிரியர் சிவத்தம்பி போல தமிழ்த் தேசிய வாதத்துக்குச் சார்பாக மாறியிருப்பார் என்பது. இது கூறப்பட்ட கூட்டத்திற் பேசிய ஒருவர் அது உண்மையாக இருந்தால் கைலாசபதி நம்மிடையே இல்லாமலிருப்பது நல்லது என்று சூடாகப் பதில் கொடுத்தார்.

கைலாசபதியை யார் ஏன் போற்றுகிறார்கள் என்பதோ யார் ஏன் தூற்றுகிறார்கள் என்பதோ நமக்கு முக்கியமானதல்ல. கைலாசபதி ஆற்றிய பணிகளை எவ்வாறு வளர்த்து முன்னெடுப்பது என்பதே நமது அக்கறையாக இருக்க வேண்டும். இதுவே சமூகத்திற்கு நற்பணி ஆற்றிய ஒவ்வொரு நல்ல மனிதர் தொடர்பாகவும் நமது அணுகுமுறையாக இருக்க வேண்டும். இதை நாம் கைலாசபதியிடமிருந்து கற்பது என்று சொல்லலாம். கற்பதில் முக்கியமான பகுதி அறிவது. அடுத்தது அதிற் பெறுமதி வாய்ந்தவற்றை அடையாளங் கண்டு அவற்றை மேலும் விருத்தி செய்வதும் குறைபாடானவற்றைச் செம்மைப்படுத்தி நிறைவு செய்வதும் ஆகும். கைலாசபதியினுடைய அணுகுமுறை வேலைமுறை போன்றவற்றை விளங்குவது அவர் கூறிய கருத்துக்களை மேற்கோள் காட்டுவதை விட முக்கியமானது. இதைப் பலர் வலியுறுத்துவதில்லை. கைலாசபதியின் சிந்தனைகளை விளங்கிக் கொள்ள அவரது அணுகுமுறையையும் வேலை முறையையும் விளங்கிக் கொள்ளுவது உதவும் என்பதை அவர்கள் தவற விட்டுவிடுகின்றனர்.

கைலாசபதியினுடைய பலம் சிலரது பார்வையிற் பலவீனமாகத் தெரிவதும் அவர் தனது கருத்துக்களைக் கூறுகிற போது தன் மனதில் என்ன இருந்தது என்பது பற்றி மற்றவர்க்கு இரண்டு வேறு கருத்துக்கள் இருக்கக் கூடாது என்பதிற் கவனமாக இருந்தார். இப்படியும் இருக்கலாம் அப்படியும் இருக்கலாம் வேறு எப்படியும் இருக்கலாம் என்கிற விதமான சொற்களை அவரிடம் எதிர்பார்க்க இயலாது. நிச்சயமில்லை என்றால் நிச்சயமில்லை என்று சொல்லிவிடுவார். இது எளிது ஆனால் ஏனோ எல்லாருக்கும் இது இயலுவதில்லை.

இந்த நடைமுறையின் ஒரு பகுதியாகவே எவ்வளவு சிக்கலான தோற்றத்திற் குழப்பமான விஷயத்தையும் எவ்வளவு எளிமையாகவும் தெளிவாகவும் கூற முடியுமோ அவ்வளவு எளிமையாகவும் தெளிவாகவுங் கூறுகிற ஆற்றல் அவரிடம் இருந்தது. இது தெளிவான சிந்தனையின் விளைவானது.

உண்மையைச் சொல்வதில் முக்கியமானதொரு நன்மை என்னவென்றால், எந்தக் கருத்தைக் கூறும் போதும் முன்பு சொன்னவற்றுடன் முரண்படுகிறோமோ என்று கவலைப்பட வேண்டியதில்லை. கைலாசபதியின் கருத்துக்களிலும் நிலைப்பாட்டிலும் அவரது அனுபவங்களை ஒட்டிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. என்றாலும் அவற்றுக்கூடாக ஒரு உடன்பாடான சிந்தனை இழை ஓடுவதை நாம் அவதானிக்கலாம். அவை சந்தர்ப்பவாதமான மாற்றங்கள் அல்ல என நாம் காணலாம். இதனாலேயே கைலாசபதி இன்று உயிருடன் இருந்தால் தமிழ்த் தேசியவாதம் பற்றி அவரது நிலைப்பாடு எப்படியிருக்கும் என்பதற்கான விடையை அவர் எந்த விதமான அரசியற் சிந்தனையின் அடிப்படையிற் செயற்பட்டார் என்பதை வைத்தே முடிவு செய்ய வேண்டியுள்ளது. கைலாசபதி மாக்ஸியலெனினியச் சிந்தனையை ஏற்றவர். பாராளுமன்றப் பாதையை நிராகரித்தவர். கம்யூனிஸ்ற் கட்சியிற் பிளவு ஏற்பட்ட போது தடுமாற்றமின்றித் தன்னை மாக்ஸிய லெனினியவாதிகளுடன் அடையாளப்படுத்தியவர். திரிபுவாதிகளுடன் நின்றவர்கள் அனுபவித்த, அனுபவித்திருக்கக் கூடிய சலுகைகளையும் வாய்ப்பு வசதிகளையும் அவர் அறியாதவரல்ல.



**கைலாசபதியின் சாதனைகளை விடவும் அவர் வகித்த பதவிகளை விடவும் முக்கியமானவை அவரது உலக நோக்கும் சமுதாயச் சார்பான தடம்புரளாத அவரது சிந்தனையுமாகும்.**

அவரது தெரிவு அவரது அரசியற் பார்வையால் முடிவு செய்யப்பட்டது. எனவே 1980ம் ஆண்டு வரை தேசியவாதத்தின் முன் வளையாத கைலாசபதி 1983க்குப் பின்பான நிகழ்வுகளால் வளைந்திருப்பாரா என்பதை நேர்மையான மாக்ஸிய லெனினியவாதிகள் எவ்வாறு நடந்து கொண்டனர் என்பதை வைத்து மதிப்பிடலாமே ஒழிய திரிபுவாதிகளான வி. பொன்னம்பலம் முதல் சிவத்தம்பி வரையிலானவர்களது நடத்தையை வைத்து மதிப்பிடுவது தவறு. கைலாசபதி அப்படி ஒரு முடிவை எடுத்தாயிருந்தால் அதைத் தன்னுடையதையொத்த நிலைப்பாட்டைக் கொண்டவர்களுடன் கலந்து பேசியே முடிவெடுத்திருப்பார்.

அண்மைக் காலமாகப் பேராசிரியர் சிவத்தம்பி தனக்கும் கைலாசபதிக்கும் இடையில் இல்லாத முரண்பாடுகளை நடுவில் உள்ளவர்கள் கற்பிக்கிறார்கள் என்று பொது இடங்களிற் கூறி வருகிறார். அவரது நோக்கம் என்ன வாக இருந்தாலும் அவருக்கும் கைலாசபதிக்கும் இடையே இலக்கியம் முதலாக அரசியல் வரை ஒவ்வொரு துறையிலும் இருந்த முரண்பாடுகள் இரண்டு வேறுபட்ட சமூக அரசியல் அணுகு முறைகள் சார்ந்தவை. அவற்றிற் சில மிகவும் அடிப்படையானவை. இந்த உண்மையை மறைக்க இயலாது. சிவத்தம்பி தனக்கும் கைலாசபதிக்கு மிடையே இருந்தது பகைமையற்ற நெருக்கமான நட்பு என்கிறார். அது உண்மையென்றால் அது பற்றி அறியத் திருமதி கைலாசபதி ஒரு வேளை மகிழ்ச்சியடைவார் என்று நினைக்கிறேன். எனக்கு அந்தத் தனிப்பட்ட முறையிலான உறவு முக்கியமானதல்ல. தொழில் முறையிலான நட்பை எந்த அரசியல் முகாமிலும் இருக்கிற சக ஊழியர்களுடன் நம்மிற் பலரும் பேணுகிறோம். முக்கியமானது ஏதென்றால் கைலாசபதியும் சிவத்தம்பியும் மாக்ஸிய லெனினியமும் சந்தர்ப்பவாதமும் என்று முரண்பட்ட ஒவ்வொரு பிரச்சனையிலும் எங்கே நின்றனர் என்பதுதான்.

சிவத்தம்பி தனது அரசியற் கோழைத்தனத்தினின்று மீள இயலாததாலேயே இடத்துக்கிடம் தனது முகத்தை மாற்றுகிறார். சோவியத் யூனியனின் சரிவுடன் கம்யூனிஸ விரோதிகளுடன் கூடச் சமரசம் செய்ய ஆயத்தமாகினார். தளையசிங்கத்தின் புகழைப் பாடியும் தான் முன்பு பேசிய சோஷலிஸ யதார்த்தம் தவறு என்று மன்னிப்புக் கோரியும் மன்றாடியது போதாமல் ஐந்தாண்டுகள் முன்பு தனது தவறுகள் எல்லாம் தான் கைலாசபதியினுடைய ஆதிக்கத்திற் குட்பட்டிருந்ததால் நிகழ்ந்தவை என்று பிழையை வேறு திசையில் நகர்த்தியதை அவர் இன்று மறக்க விரும்பலாம். ஆனாலும் பலருக்கும் அவை நினைவிருக்கிறதே!

தமிழ்த் தேசியவாதிகளுடன் வி. பொன்னம்பலத்தின் சமரசம் தொடங்கிய காலத்திற்குக் கொஞ்சம் முன்னரே சிவத்தம்பியின் சமரசங்கள் தொடங்கிவிட்டன. அந்தச் சமரசத்தைச் சில சமயம் சிவப்புப் போர்வைக்குள் நடத்தி வந்தார். பிறகு சிவப்புப் போர்வையைக் கழற்றிவிட்டுச் செய்தார். ஆனாலும் எல்லாருக்கும் எல்லாமாக அவரவர் வேண்டியபடி காட்சி கொடுக்கப் பேராசிரியர் தன்னைப் பரம்பொருளாகக் கற்பனை செய்கிறாரோ தெரியவில்லை. அவரது ஒவ்வொரு முயற்சியும் கைலாசபதியிடமிருந்து அவரை வேறுபடுத்துகின்றன.

புகழுக்கும் பெருமைக்கும் பெருத்த வேறுபாடு உண்டு. புகழை விளம்பரங்களாலும் வேறு தந்திரகளாலும் ஈட்டமுடியும். பெருமை என்பது செயலாற் கிட்டுவது. ஒருவர் அறியப்படாதவராக இருந்தாலும் பலரால் நிந்திக்கப்பட்டவராக இருந்தாலும் பெருமைக்குரியவராக இருக்கலாம். தகைமைகள் என்பன ஒருவர் தானே தனக்குச் சூட்டிக் கொள்வனவல்ல. எனவே தான் கைலாசபதியை மெய்யாக மெச்சுவோர் அவரை நன்கறிந்தவர்களாகவும் அவரது பெறுமதியை உணர்ந்தவர்களாகவும் அவரது உலக நோக்குடன் உடன்படுவோராகவுமே இருக்க இயலும்.

பேராசிரியர்கள் கணபதிப்பிள்ளை, செல்வநாயகம், வித்தியானந்தன், கைலாசபதி என்ற வழியில் வந்தவன் நான் என்று சிவத்தம்பி சொல்வது பொருந்தாக் கூற்று. அது ஒருபட்டியலே ஒழியப் பாரம்பரியமல்ல. சீனா முதலாளியப் பாதையில் போகத் தொடங்கிய பின்பே சிவத்தம்பி சீனாவைப் பற்றி நல்லதாக நாலு சொற்கள் கூறியிருக்கிறார். அண்மையிற் கூட ரஷ்யப் புரட்சி தொடர்பாக எழுதிய நீண்டதொரு கட்டுரையில் எதையெதையோ சொல்லுகிற அவர் மறந்தும் மாஓ பற்றி ஒரு சொல்லேனும் எழுதவில்லை. இது அவர் எந்த மரபுக்குரியவர் என்பதைக் கூறுகிறது. இன்று சிவத்தம்பியை ஒரு சகலகலா வல்லவராகவும் அதிபெரிய சாதனையாளராகவும் ஊதிப் பெருப்பிக்கிற முயற்சிகள் நடக்கின்றன. விஷயம் தெரிந்தோர் அவற்றைக் கண்டுகொள்ளப்போவதில்லை. ஆனாலும் அதன் போக்கிற் கைலாசபதியின் அடையாளத்தை மாற்றுகிற முயற்சிகள் பற்றி யாரும் அசட்டையாக இருக்க முடியாது.

விபுலானந்தர், கணபதிப்பிள்ளை போன்றோர் மிக முற்போக்கான சிந்தனை கொண்டவர்கள் என்பதுடன் தமது கருத்துக்களிலும் நிலைப்பாடுகளிலும் தெளிவாக இருந்தவர்கள். பேரும் பதவியும் பணமும் வேண்டித் தடுமாறியவர் அல்ல. அவர்களுடைய வழி அவர்களுடைய மரபு என்று சொல்லுகிற போது அந்தப் பண்புகளை நீக்கி ஒன்றைக் கூறுவது தவறானது.

கைலாசபதியின் சாதனைகளை விடவும் அவர் வகித்த பதவிகளை விடவும் முக்கியமானவை அவரது உலக நோக்கும் சமுதாயச் சார்பான தடம்புரளாத அவரது சிந்தனையுமாகும். அவற்றை மறைத்துக் கைலாசபதியைப் புகழுவது அவரை நிந்திக்கிற காரியமேயாகும்.

**சேகர்**

# இன்னொரு அரை அவியல்

## முற்போக்கு இலக்கியச் செம்மல்கள்: நூல் விமர்சனம்

**த. சிவசுப்பிரமணியம், இலங்கை முற்போக்கு கலை இலக்கியப் பேரவை கொழும்பு- 06. 24. 02. 2007, ப.104, விலை ரூ. 150.00**

நூலின் தலைப்பு எதிர்பார்ப்புக்களைத் தூண்டுவது. உள்ளடக்கம் ஏமாற்றத்தைத் தருவது. ஏனெனில் நூலில் உள்ளவை நூலாசிரியர் குறிப்பான நோக்கமின்றி அவ்வப்போது பல்வேறு சஞ்சிகைகட்கு எழுதிய பன்னிரண்டு கட்டுரைகளே. படைப்பாளிகள் திட்டமிட்ட முறையில் தெரியப்பட்டதாயும் சொல்ல இயலாது. கட்டுரைகள் அவர்களது அரசியல் நிலைப்பாடுகள் எவ்வாறு விருத்தி பெற்றன அவர்களது ஆக்கங்கள் எவ்வாறு முற்போக்கு, இடதுசாரி இயக்கத்தின் வளர்ச்சியுடன் இணைந்து பங்காற்றின என்பதைப் பெரும்பாலும் சொல்லத் தவறுகின்றன.

கட்டுரைகள் வெளியான ஏடுகளிற் சில இடதுசாரி எதிர்ப்பு வலுவாக உள்ளவை. அதை விட இக் கட்டுரைகள் ஆழமான ஆய்வுகளாக இல்லாது சனரஞ்சகமான பொதுவாசிப்புக்கான சில தகவல்களின் தொகுப்பாக அமைந்தவை. இவ்வாறு எழுதப்படுகிற கட்டுரைகள் பல வணிக நோக்கில் நூலாக்கப்பட்டுள்ளன. ஆனால் ஒரு கனதியான தலைப்புடன் வருகிற நூல் பாடசாலை மாணவர்கள் கட்டுரைப் போட்டிக்கு எழுதுகிற கட்டுரைகளின் தொகுப்புப் போலன்றித் தனக்குரிய பார்வைத் தெளிவுடன் எழுதி உரியவாறு அறிமுகப்படுத்தப்பட்டு வெளி வருவது நல்லது. நூலின் முன்னுரையும் அணிந்துரையும் என்னுரை என்ற பேரில் நூலாசிரியரின் குறிப்பும் உள்ளன. நூலாசிரியர் சமூகப் பின்னணிக்கு முன்பாக ஒரு மனிதனின் செயற்பாடுகளை நிறுத்திக் காட்டும் எந்த இலக்கியமும் இடதுசாரித் தன்மை கொண்டது என்கிறார். அவர் எதை இடதுசாரித் தன்மை என்று கருதுகிறார் என்று விளங்கவில்லை. வர்க்க நிலைப்பாடு வர்க்கக் கண்ணோட்டமுமே இடதுசாரித் தன்மையைத் தீர்மானிக்கிறதாக இது வரை நினைத்திருந்தேன். இனி உலகின் ஏகப் பெரும்பாலான ஆக்க இலக்கியங்கள் இடதுசாரித் தன்மையுடையன என்று நம்பலாமா?

பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் உள்ளவர்களிடம் பெறுகிற முன்னுரைகளிலிருந்து எந்த விதமான ஆழமான சிந்தனையையும் இனி மேற் கொண்டு எதிர்பார்க்க இயலாத நிலையை அண்மித்து விட்டோம் என்பதற்குச் சான்றாகக் கலாநிதி மகேஸ்வரனின் முன்னுரை உள்ளது. அணிந்துரையின் சபா ஜெயராசா நூலுக்குச் சம்மந்த சம்மந்தமில்லாமல் எதையோ எல்லாம் எழுதி வைத்திருக்கிறார். "பின்னவீனத்துவச் சிந்தனைகளை அடியொற்றி மேலை உலகில் வளம்பெறத் தொடங்கிய சொற்களஞ்சியம் தமிழியலிலும் வரவு கொள்ளத் தொடங்க, தமிழ்க் கட்டுரை வடிவமும் உள்ளடக்கமும் அண்மைக்காலமாக மேலும் வளமும் பல்லினப் பாங்கும் பெறலாயின" என்று ஒரு முத்துதிர்த்திருக்கிறார். அதை என்ன அடிப்படையிலும் ஆதாரத்தின் துணையுடனும் சொன்னார் என்று அவர் தான் விளக்க வேண்டும். சிந்தனைக் குழப்பமான எழுத்து நடை தான் பின்நவீனத்துவம் என்றால் அது அண்மைக்காலமாகப் பெருகித்தான் இருக்கிறது. ஆனால் அதற்கான பழியைப் பின்னவீனத்துவத்தின் மீது மட்டுமே போட இயலாது. நம்மிடையே படைப்பாளி பலருக்கு ஒழுங்காக எந்த மொழியிலுமே எழுதத் தெரியாது. இப் பின்னணியில் பேராசிரியர் கைலாசபதி மீதான மரியாதை கருதி நூலை அவருக்கும் சமர்ப்பிக்காமல் விட்டிருந்தால் சிறப்பாயிருந்திருக்கும்.

~சிவா~

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

டிசம்பர் 2007

# புதிய பூமி


இணையத் தளம் : Website: www.ndpsl.org




சகல கரங்களுக்கும் வேலை வேண்டும் எல்லோர் வயிறுகளுக்கும் ரொட்டி வேண்டும் நிலமற்றோருக்கு நிலம் வேண்டும் சிறு விவசாயிகள் வியாபாரிகளுக்கு பாதுகாப்பு வேண்டும் எனக்கோரி 25 ஆயிரம் நிலமற்ற தலித் பழங்குடி மக்கள் 350 கி.மீ தூரத்தை பாதயாத்திரையாக மத்தியப் பிரதேசத் குவாலியரில் இருந்து புறப்பட்டு 26 நாட்களில் புது டெல்லி வந்தடைந்தனர் இந்திய அடிநிலை மக்களின் வெகுஜன எழுச்சிக்கு இது ஓர் உதாரணமாகும் ஒக்ரோபர் 29 2007



நேபாள இடைக்கால அரசாங்கத்தின் ஏமாற்றை எதிர்த்து அதிலிருந்து விலகியபின் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் மாவோயிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அறைகூவலை ஏற்று வீதிப்போராட்ட எழுச்சியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்தனர் (செப்ரெம்பர் 30. 2007.)













பாக்கிஸ்தானில் முஷராவ்வின் ராணுவசர்வாதிகாரத்திற்கு எதிராக சட்டத்தரணிகள், மாணவர்கள் மனிதஉரிமை ஆர்வலர்கள் வீதிப் போராட்டத்தில் ஈடுபடுவதையும் ராணுவம் அடக்குவதையும் காணலாம்

வெளியிடுபவர் : இ.தம்பையா, இல 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு : கொம் பிரின்ட் சிஸ்ரம், HL, 1/2 டயஸ் பிளேஸ், கொழும்பு 12.